தமிழீழ ஆவணக் காப்பகம்

யூலை 1995

# எரிமலை




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# அக்கறைப்பூக்கள்

மதிப்புக்குரிய எரிமலை ஆசிரியருக்கு,

மே மாத எரிமலையைப் பார்த்ததும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். புதிய கருத்துக்களுடன் புதிய வடிவத்துடன் மே மாத இதழ் வெளிவந்துள்ளது. தமிழ் மக்களுக்கு மூன்றாம் கட்ட ஈழப்போரும் எரிமலையின் வளர்ச்சியும், தமிழ் மக்களுக்கே பெருமைதரும் விடயம்தான் என்பதில் ஐயம் இல்லை என்பதை நினைவு படுத்துகிறது.

பிரபாகரன் என்ற ஓர் இயக்கச் சக்தியின் உந்துதலே ஈழப்போர். பொம்மரண்ணா பற்றிய 'நிலையான நினைவாகிச் சென்றோன் நினைவோடு தமிழீழம் வெல்வோம்' மற்றும் வியாசனின் உலைக்களம், பிஞ்சு மனம், சிறை மீட்பு என்பன மிகச் சிறப்பானவை. எரிமலையின் வளர்-ச்சி எம் இன மக்களின் கிளர்ச்சியாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசை. எரிமலையின் ஆக்கங்கள் இன்னும் பல மடங்கு உயர வேண்டும் எனக் கூறி வாழ்த்துகிறேன்.

இங்கிருந்து வெளிவரும் களத்தில் அச்சுப்பதிப்பு தரம் குறைந்து காணப் படுகின்றது. குறைகளை நிறைவாக்கி எம் இனப் போராட்டத்திற்கு எம் மக்களை ஒன்று திரட்டுவது உங்கள் கடமையாகும்.

அத்துடன் இங்கிருந்து செயல்படும் சன்ரைஸ் வானொலித் தமிழ்ச் சேவை, ஈழப்போராட்டத்தை கொச்சைப்படுத்தும் வகையில் மிகத் தவறான பிரச்சாரம் செய்து இயங்குகின்றது. இவர்களைக் கண்டித்து மக்கள் முன் இனம்காட்டுவதும் உங்களது கடமையே ஆகும்.

இப்படிக்கு,
கௌரி ஈஸ்வரன்,
இங்கிலாந்து

* * *

அன்புடன் ஆசிரியர் அவர்களுக்கு,

இம்மாத எரிமலை பார்த்தேன். மிகவும் சிறப்பாக இருந்தது. அட்டைப் படம், காகிதம், செய்திகள் யாவும் மிகமிக சிறப்பாக இருந்தது.

இந்தியாவின் உள்நாட்டு பிரச்சினைகள், கட்சிச் சண்டைகள் மற்றும் கீழ்த்தரமான சமூக விரோதச் செய்திகள் ஒரு புறம். முக்கியமாக என்னை அதிர வைத்த செய்தி கண்களுக்காக பிஞ்சுச் சிறுவர்களைக் கடத்தி கண்களைத் தோண்டியபின் கொலை செய்தமை ஆகும். பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள்; அதுவும் காவல்காரர்களால் என்று பல சம்பவங்களைக் கூற முடியும்.

இப்படியான சமூக அடக்குமுறைகளையும் சமூக விரோத செயல்களையும் பூண்டோடு களைந்து சுதந்திரத்தை நோக்கி நடைபோடும் ஒரு தியாக வேள்வியில் தலையிட இந்திய வல்லாதிக்கத்திற்கு எந்த உரிமையோ அருகதையோ கிடையாது.

என்னவோ,

சுட்டும் விரலால் 'தம்பியை'ப் பார்த்து
குற்றம் கூறுகையில்
மற்ற மூன்று விரல்களும் உந்தன்
மார்பினைக் காட்டுதடா

என்ற சினிமாப் பாட்டுத்தான் ஞாபகத்திற்கு வருகிறது.

வி. சிறீதரன்,
சுவிஸ்

* * *

நட்பின் எரிமலைக்கு வணக்கங்கள்,

தங்களின் எரிமலை மார்ச் மாத இதழ் வரும் வரும் என்று எதிர் நோக்கி இருந்தேன். இதழ் வரவில்லை. பிறகு ஏப்ரல் மாத இதழ் வந்துள்ளது. ஒவ்வொரு மாதமும் பக்தர்கள் கிருத்திகை எதிர்பார்ப்பது போல, காதலன் காதலியை எதிர் பார்ப்பது போல, ஈழத்தின் தலைவர் பிரபாகரனின் போர்த் தந்திரங்கள், புலிகளின் போர்முனைச் செய்திகள், தமிழீழத்தின் மக்கள் வாழ்க்கை, சுதந்திரத் தமிழீழத்தின் செயல்பாடுகள், கவிதைகளுக்கான எதிர்பார்ப்பு. திரைப்படத்திற்காய் இழிவான பாடல்களையும் கவிதைகளையும் சந்திக்கின்ற தமிழகத்தில் புறநானூறு புதிதாய் எழுதப்படுகின்ற கவிதைகளுக்காகவும், கரும்புலிகளின் தியாகத்தை தெரிந்துகொள்ளவும் எரிமலையை எதிர்நோக்கும் தமிழகத்தின் பல நெஞ்சங்களில் நானும் ஒருவன். ஆகவே தாங்கள் தயை கூர்ந்து மார்ச் மாத இதழை அனுப்பிவைக்கும்படி வேண்டுகிறேன்.

உரிமைப் போரில் என்றும்
உங்களுடன்
எஸ். சாந்தகுமார்

* * *

அன்புடன் எரிமலைக்கு!

புதிய மெருகோடு முகிழ்த்த 'மே' மாத இதழ் கண்டு மிக்க மகிழ்ச்சி. என்றுமே சிறப்பான அம்சங்களைத் தாங்கிவரும் "எரிமலை" தன் வண்ணங்களையும், வசனங்களையும் வாசகர் மனதில், மேலும் ஆழமாக வலியுறுத்தும் வகையில் அமைக்கப் பட்டது அதன் முதிர்ச்சிக்கான இன்னுமொரு வளர்ச்சிக்கட்டமாகும்.

கலாநிதி சபா. ஜெயராசாவின் திறனாய்வு 'இலக்கிய நெறி'க்கான முக்கிய புள்ளிகள் பலவற்றை ஆழமாக இல்லாவிடிலும், ஆரோக்கியமாக அலசியிருந்தது. செயற்கை முறையில் மனனம் செய்வதற்காக திணிக்கப்படுவதாக இல்லாமல், இலக்கியப் படைப்புக்களின் உள்நோக்கம் பயில்பவர்களினாலேயே உணரப்படக்கூடியதாகப் பாடத்திட்டம் இருக்க வேண்டும் என்று சிறப்பாக எடுத்தியம்பிய அவரின் மேலதிக கட்டுரைகளையும் 'எரிமலை'யின் இதழ்கள் தாங்கி வரவேண்டும் என விரும்புகிறேன்.

'எரிமலை'க்குள்ளிருந்து சீறும் இன்னுமொரு குட்டி எரிமலையான உலைக்களம் தந்த வியாசனின் கவிதைகளில் வரும் ஒவ்வொரு வரியும் விடியலிற்கான, தீவட்டிகளாக எரிபவையாக இருக்கின்றன. பிரம்ம ஞானியின் கட்டுரையின் சிறப்பும் வார்த்தைகளுக்குள் அடங்குபவையாக இல்லை. தயவு செய்து 'நேர்முகம்' பகுதியில் இவர்கள் இருவரையும் செவ்விகண்டு வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

நன்றி

அன்புடன்
சு. பிரசாந்தன்
ஜேர்மனி

* * *

www.tamileelamarchive.com

எரிமலை

கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

பதின்நான்காம்
ஆண்டு
ஜூலை 1995

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

# மண்டைதீவு வீழ்ச்சி; சிறீலங்காவின் இராணுவ இலக்கின் மீது விழுந்த பேரிடி

மண்டை தீவில், சிறீலங்கா இராணுவ முகாம் மீது விழுந்த அடியை, சிறீலங்கா அரசாங்கத்தின் இராணுவ நோக்கங்களின் மீது விழுந்த இடியாகவே கருத இடமுண்டு. இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டி, இராணுவத் தீர்வு காணும் முயற்சியின் மீது விழுந்த, எழும்ப நெடுநாள் எடுக்கும் அடி என்று கூறலாம். இந்த அடிதான், சிறீலங்கா அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரை, விரைவில் தனது அரசாங்கம் ஒரு அரசியல் தீர்வை முன்வைக்கப் போவதாக சொல்லத் தூண்டியுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வந்த நாளிலிருந்து ஒரு தீர்வுத் திட்டத்தை வைக்கப் போவதாகச் சொல்லி வருகிறார். இன்னும் வைத்த பாடில்லை. விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும், சர்வதேச அழுத்தங்களும் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமாறு நெருக்கி வருகின்றன. இவ்வழுத்தங்களுக்கு உட்பட்டு வைக்கப்படும் திட்டம் கூட, கொழும்பிலுள்ள அடிவருடிக் குழுக்களையாவது திருப்திப்படுத்துமா என்பது ஒரு விடயம். அப்படித் திருப்திப்படுத்து வதான எலும்புத்துண்டாக இருந்தால்தான் ஏனைய தமிழ் குழுக்களையும் யுத்தத்தில் ஈடுபடுத்தி யுத்தத்தில் வெற்றி பெறலாம் என்ற நப்பாசை இன்னொரு விடயம். எனவே பேச்சுவார்த்தை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை, தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தக்கூடிய, தமிழீழ விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்தக்கூடிய எந்தவொரு திட்டத்தையாவது அரசாங்கம் வைக்கக்கூடிய எவ்வித சலனத்தையும் காணவில்லை. அப்படி ஒரு திட்டம் வைக்கப்படுவது மாத்திரமின்றி, அரசாங்கம் தனது நேர்மையை நிரூபித்து, தமிழ் மக்களை நம்பிக்கை கொள்ளச் செய்வதற்கு விடுதலைப் புலிகள் முன்வைத்த 4 கோரிக்கைகளையும் நிறைவேற்றியாக வேண்டும்.

அரசாங்கத்தின் மீது இந்த நம்பிக்கையீனம் தோன்றுவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

1. விடுதலைப் புலிகள் மிகுந்த பலத்துடன் இருக்கும்போது சமாதானத் தீர்வு காணமுன்வந்தனர். அரசாங்கமோ பலவீனமாக இருந்த காரணத்தினால், இராணுவத் தீர்வு சாத்தியமில்லை என்ற நிலையில் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தது. (சந்திரிகாவின் இந்தியா ருடே பேட்டி)

2. விடுதலைப் புலிகள் ஏற்கனவே புதிய அரசை நோக்கிய அரசாங்கத்தை, தமது கட்டுப்பாட்டுள் கொண்டுவந்த தமிழீழப் பகுதிகளில் அமைந்திருந்தனர். அப்படியிருந்தும், தாயக முழுமையை அங்கீகரித்த சமஷ்டித் திட்டம் ஒன்றைச் சாதகமாகப் பரிசீலிக்கத் தயார் என்று தெரிவித்தனர். ஆனால், அரசாங்கமோ, இந்த ஜதார்த்தத்தை உணர்ந்து கொள்ளவில்லை. அதன் அடிப்படையில் இதுவரை எவ்வித தீர்வுத்திட்டத்தையும் முன்வைக்கவில்லை. தமிழரது தாயகம், தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை ஆகிய, சமரசங்களுக்கு அப்பாற்றப்பட்ட அடிப்படைக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டதாகக் கூட அறிவிக்கவில்லை. கடுமையான போராட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட அரசியல் கட்டமைப்புக்களை பேச்சுவார்த்தை என்ற நாடகத்தின் மூலம், உடைத்துக்கொட்டும் நோக்குடனேயே செயல்பட்டது தெரியவந்தது. "விடுதலைப் புலிகள் தமக்கென ஆட்சியதிகாரத்தை நிறுவிவருகிறார்கள். இதற்கான அரசாங்கத்தின் மாற்றுத் திட்டம் என்ன?" என்ற கேள்விக்கு (இந்தியா ருடே பேட்டி) "ஆகாயக் குண்டு வீச்சை நிறுத்துதலும், தரையிலும், கடலிலும் சுடுதலை நிற்பாட்டலுமே" என்று ஜனாதிபதி கூறினார்.

தமிழ் மக்களின் போராட்டக் கோட்பாடுகள், அடிப்படை அபிலாசைகள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாத நிலையில், சந்திரிகா, விடுதலைப் புலிகளுக்கு தெரிவித்த செய்தி என்னவெனில் வடபகுதியை மீட்டது போல், ஆயுதப் போராட்டத்தின் மூலம் கிழக்குப் பகுதியையும் மீட்டு உங்கள் அரசாங்கத்தை நிறுவுங்கள். பேச்சுவார்த்தையின் மூலம் அத்தகு இணக்கத்தை தரமாட்டேன் என்பதுதான். எனவே போருக்குப் பச்சைக் கொடி காட்டியது அரசாங்கம்தான். எனவேதான் 3-ம் கட்ட ஈழப் போர் தொடங்கித் தொடர்கிறது.

3. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு இணங்காதுவிடின் போர் நடவடிக்கைதான் பதில் என்பதை சந்திரிகா உணர்ந்திருக்கவேண்டும். எனவே, போருக்கான ஆயத்தங்கள் இடம்பெற்றன. ஆயுதக் கொள்வனவுகள், ஆட்திரட்டல்கள் சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் நடந்தன. கிழக்கு மாகாணத்தைக் கபளீகரம் செய்யும் இராணுவ ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்புகள், குடியேற்றங்கள் நடந்தன. இராணுவ செலவீனம் 27% ஆல் 500 கோடி ரூபாயால் அதிகரிக்கப்பட்டது. அரசாங்கத்தின் போருக்கான ஆயத்தங்கள், முன்னாள் ரூபவாஹினித் தலைவர் வசந்தராஜா எழுதிய கட்டுரையில் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது.

4. தமிழ் மக்கள் மீது போர் தொடுக்கும் நோக்கம் எப்போதும் இருந்ததாலேயே விடுதலைப் புலிகள் மோதல் தவிர்ப்பிலிருந்து விலகியதுடன் மீண்டும் பொருளாதாரத்தடை இன்னும் இறுக்கமாக மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ளது. மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை பேரப் பொருளாக்கி, மக்களின் அடிப்படை உரிமைகளை "சலுகையாகக்" கொடுக்க முற்பட்டபோதே அரசாங்கம் தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளையும் அங்கீகரிக்காது என்பது தெரிந்துவிட்டது.

5. பேச்சுவார்த்தை நடைபெற்ற காலத்திலேயே இந்தியா சென்ற ஜனாதிபதி, தலைவர் பிரபாகரனை நாடு கடத்துவது குறித்து இந்திய அரசியல் தலைவர்களுடன் கலந்துரையாடியுள்ளார். இது இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியால் வெளிப்பட்டது.

தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகளை மறுதலித்து, இராணுவத் தீர்வின் மூலம், ஏதோ தான் விரும்பிய, சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் தீர்வொன்றைத் திணிக்க அரசாங்கம் விரும்புகிறது. இந் நோக்கத்தை மக்கள் ஆதரவுடன், ஆயுதப் போராட்ட ரீதியாக முறியடிக்க வேண்டிய நிலையில் உள்ளனர் விடுதலைப் புலிகள். சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் சிறீலங்கா அரசாங்கத்தின் இராணுவத் தீர்வு என்ற நோக்கு எப்போது சிதறடிக்கப்படுகிறதோ அப்போதே பேச்சுவார்த்தை என்பது சரிவரும்; சர்வதேச சமரசமும் அப்போதுதான் பலன் அளிக்கும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# தாயக அங்கீகாரத்தை கோரி

## வெளிநாடுகளில் விடுதலைப்புலி ஆதரவு ஊர்வலங்கள்

மேற்குலகின் பல்வேறு நகரங்களில், தமிழீழ மக்கள், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர். கோரிக்கைகள் தொடர்பான மகஜர்கள் பல்வேறு அரச தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டன. இத்தகைய ஊர்வலங்கள், ஐக்கிய இராச்சியம், சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், கனடா, அவுஸ்திரேலியா, டென்மார்க், நோர்வே, ஜேர்மனி, அமெரிக்கா ஆகிய இடங்களில் நடைபெற்றுள்ளன. மேலும், நெதர்லாந்து, சுவீடன், இத்தாலி, சுவிற்சலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் மேலும் ஊர்வலங்களும், கலந்துரையாடல்களும், விழிப்புச் செயற்பாடுகளும் இடம்பெற உள்ளன. இந்த ஊர்வலங்களின் போது, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் என்றுமில்லாதவாறு கலந்துகொண்டு, உணர்ச்சி பூர்வமாகத் தங்கள் ஆதரவை வெளிப்படுத்தியமை சிறப்பு அம்சமாகும்.

போராட்ட வெற்றிகள் கொடுத்த நம்பிக்கையே மக்கள் பெருந்திரளாகக் கூடுவதற்கு ஒரு காரணம் எனலாம். அதுமாத்திரமல்ல, சிறீலங்காவின் இனப் படுகொலை யுத்தத்திற்கு எதிராக தமிழீழ மக்கள் அனைவரும் ஒன்று திரளவேண்டும் என்ற பாச உணர்வும் இன்னொரு முக்கிய காரணம் எனலாம். இவ் எழுச்சிகரமான ஊர்வலங்களில் மக்கள் கலந்து கொள்வது, அவர்களது அரசியல், சமூக விழிப்புணர்வை வெளிப்படுத்துவது மாத்திரமல்லாமல், ஆபத்துக்கள் நிறைந்த விடுதலைப் போராட்டத்தில் பங்காளர்களாகத் தங்களை இணைத்துக் கொள்ளும் பிரக்ஞை பூர்வமான ஈடுபாட்டையும் காட்டுவதாக அமைந்தது. ஒரு போராட்டத்தின் அடிப்படைப் பலம் மக்கள் பலமே என்பதை ஆணித்தரமாக, நிதர்சன வெளிப்பாடாகக் காட்டுவதாக அமைந்தன இவ் ஊர்வலங்கள்.

மக்களையும், விடுதலைப் புலிகளையும் பிரிக்க முயன்ற எதிர்ச் சக்திகளுக்கு, மக்களும், புலிகளும் வேறு வேறு அல்லர்; மக்களுடைய அபிலாஷைகளும், புலிகளுடைய அபிலாஷைகளும் ஒன்றே என்று கூறுவதாக அமைந்தன. சிறீலங்கா அரசாங்கத்தின் பொய்ப் பிரச்சாரங்களுக்கு வேட்டு வைப்பதாகவும் இவ் ஊர்வலங்கள் இருந்தன. பிற நாடுகளை, குறிப்பாக மேற்குலக நாடுகளைத் தனது பொய்ப்பிரச்சாரத்தின் மூலம் ஏமாற்றி, நிதி, ஆயுத தளபாட உதவிகளை சிறீலங்கா அரசாங்கம் பெற்று, இனப் படுகொலையை நோக்கமாகக் கொண்ட யுத்தத்தை நடத்த விரும்பியது. விடுதலைப் புலிகளை அழிப்பதும், தமிழ் மக்கள் மீது

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


ஏதோ தான் நினைத்த தீர்வைத் திணிப்பதும்தான் அதன் நோக்கம். சிறீலங்கா அரசாங்கத்தின் பிரச்சாரத்திற்கு எடுபட்டு, மேற்குலக நாடுகள் அதன் இனப் படுகொலை யுத்தத்திற்குத் துணை போகாமல் தடுப்பதும் ஊர்வலங்களின் முக்கிய நோக்கமாகும். அது மாத்திரமல்லாமல், விடுதலைப் போராட்டத்திற்கும், தாயக விடுதலைக்கும் அங்கீகாரத்தையும், ஆதரவையும் இவ் அரசாங்கங்களிடமிருந்து கோருவதாகவும் அமைந்தன. இவ் ஊர்வலங்களில் பல்வேறு மக்கள் அமைப்புக்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவ் ஊர்வலங்களின்போது,

★ 'தமிழீழ தாயகத்தை அங்கீகரி!',
★ 'தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரி!',
★ 'தமிழீழ அரசை நோக்கிய அரசாங்கத்தை அங்கீகரி!',
★ 'சுதந்திரமே நீதியான சமாதானம்!',
★ 'சிறீலங்கா அரசாங்கமே! இனப் படுகொலையை நிறுத்து!',
★ 'சிறீலங்கா அரசாங்கத்தின் இனப் படுகொலை யுத்தத்திற்கு துணை போகாதே!',
★ 'இன அழிப்பிற்கு நிதி உதவியா?'

போன்ற கோசங்கள் சர்வதேச சமூகத்தை நோக்கி எழுப்பப்பட்டன. அதேவேளை,

★ 'எங்கள் தலைவர் பிரபாகரன்'
★ 'விடுதலையே உயிர் மூச்சு'
★ 'தமிழர் வேண்டுவது, தாயக விடுதலை'

என்றும் விடுதலை ஆதரவுக் கோஷங்கள் விண்ணை நோக்கி ஆக்ரோஷத்துடன் எழுந்து பரவின.

இவ் எல்லா ஊர்வலத்திலும், கனடாவின் ரொரன்ரோவில் நடத்தப்பட்ட ஊர்வலம் குறிப்பிடக்கூடிய விதமாய் அமைந்தது. தமிழீழப் போராட்ட வரலாற்றில், வெளிநாடுகளில் இத்தகு பாரிய ஊர்வலம் ஒன்று எக் காலத்திலும் நடத்தப் பெறவில்லை. கனடாவின் சரித்திரத்திலேயே, சிறுபான்மை சமூகத்தவர் நடத்திய அரசியல் ஊர்வலங்களில் இதுவே பெரியது என்று கணிப்பிடப்பட்டுள்ளது.










www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்










22,000-ற்கு மேற்பட்ட மக்கள், ஊர்வலத்திலும், அதன் பின்னர் நடந்த பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டதாக கனடியப் பொலிசார் தெரிவித்துள்ளனர். ஊர்வலம் ஒரு இடத்தைக் கடக்க 2-1/2 மணித்தியாலங்கள் பிடித்துள்ளன. ஊர்வலத்தின் முன்பகுதி, இறுதி இடத்தை அடைந்தபோதும், அதன் பின்பகுதி புறப்பட்ட இடத்திலேயே இருந்ததாக ஒரு அதிகாரி குறிப்பிட்டுள்ளார். பல்லாயிரக் கணக்கான, புலிச்சின்னம் பொறித்த தமிழீழ தேசியக் கொடிகளையும், கனடாத் தேசியக் கொடிகளையும், சுலோக அட்டைகளையும், விவரணப் படங்களையும் தாங்கியதாக ஊர்வலம் கம்பீரமாகச் சென்றுள்ளது. தமிழீழத்தின் யதார்த்த நிலைமைகளைத் தத்ரூபமாக நிகழ்த்திக் காட்டும் ஊர்திகளும் சென்றன.

பல்வேறு போராட்ட ஆதரவுக் கோஷங்கள் கனேடிய வீதிகளை நிறைக்க, பறையொலி வழிநடத்த ஊர்வலம் சென்றது.

இந்தப் படை போதுமா? இன்னும் கொஞ்சம் வேண்டுமா? என்பதே மிகவும் பிரபலமான கோஷமாக அங்கு ஒலித்தது. ஒட்டாவில் முன்னர் நடைபெற்ற ஊர்வலத்தின் பின்னர் நடந்த பொதுக் கூட்டத்தில் கனடியப் பிரதி வெளிவிவகார அமைச்சர் ரேமன்ட் ஷான், கனடா பிரதி சபாநாயகர் திரு. டேவிட் கில்கூர் ஆகிய பல அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். அதே போன்று ரொரன்ரோவிலும் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கனடா பாராளுமன்ற, ஒன்ராறியோ பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றினர். தமிழீழ விடுதலைக்கு ஆதரவு தெரிவித்தனர். தமிழீழ, கனடியக் கொடிகள் சமனாகப் பறக்க விடப்பட்ட கொடிக்கம்பத்தின் கீழ் அவர்களது உரை நிகழ்ந்தது. அது, தமிழீழம் விரைவில், சர்வதேச சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டு, அதில் அங்கத்துவம் பெறுவதை கட்டியம் கூறுவதுபோல் இருந்தது.

❑❑❑

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# மண்டைதீவு இராணுவ முகாம் வீழ்ந்தது

மண்டைதீவு இராணுவ முகாம், தீவுப் பிராந்தியத்தின் நுழைவாயிலில் இருக்கிறது. இவ் இராணுவ முகாம், கோட்டை முகாம் இருந்த காலத்தில் அதன் வீழ்ச்சியைத் தடுக்கும் பின்புல அரணாக விளங்கியது. கொழும்புடனான தங்குதடையற்ற வானொலித் தொடர்புகளுக்கான கேந்திரமாகவும் இது திகழ்ந்தது. கோட்டை இராணுவ முகாம் வீழ்ச்சிக்குப் பின் பரந்த கடற்பரப்பில் சிங்கள ஆதிக்கத்தை நிலைநாட்டி வலுவாகக் கண்காணித்து வர ஏதுவான கேந்திர முக்கியத்துவமும் அம் முகாமுக்கு இருந்தது.

இந்த முகாமிலிருந்து இராணுவத்தினர் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களைத் தொடுத்தனர். ஏராளமான மக்களின் சொத்து உடமைகள் நாசமாக்கப்பட்டன. தமிழீழ மீனவர்களுடைய நாளாந்த வாழ் நிலையை சீர்குலைக்கவும் இவர்கள் காரணர்களாக இருந்தார்கள்.

கடல்வழி விநியோகத்தையும், கடலின் பாதுகாப்பையும் நம்பியிருந்த இந்த இராணுவ முகாம் மீதான தாக்குதல் சிறீலங்கா அரசைத் தடுமாறச் செய்துள்ளது. தமிழீழ கடற் பிராந்தியமும் சிங்கள ஆயுதப்படையினரின் சவகுழியாக மாறிவருவது அரசாங்கத்தை திகைப்படையச் செய்துள்ளது. சிறீலங்கா ஆயுதப் படைகளுக்கு கடல்வழிப் பாதுகாப்பு என்பது எவ்வளவு தூரம் சரியான இராணுவத் தந்திரோபாயம் வாய்ந்தது என்ற கேள்வி எழுப்பப்படுகின்றது.

புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியினரின் வளர்ச்சி சிறீ




லங்கா விமானப்படையின் சுயாதீன நகர்வுகளை கட்டுப்படுத்தியுள்ள வேளையில் இந்த கேள்வி இராணுவக் கொள்கை வகுப்பாளரின் முன் பூதாகரமான பிரச்சினையாக எழுந்து நிற்கிறது. இது இன்னொரு பரிமாணத்தைச் சுட்டுகிறது. வான்வழி நகர்வு, ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவ முகாம்களின் இருப்பு போன்றவற்றை சிக்கலாக்கியுள்ளது.

தீவுப் பிராந்தியத்தின் பெருமளவிலான மக்களின் குடிபெயர்விற்கும், உறவுகளின் சிதறலுக்கும் காரணமாகி இருந்தது இவ் இராணுவ முகாம்.

யாழ். தீபகற்பத்தினை சூழ்ந்துள்ள தீவுப் பகுதிகளில், பௌதீக அமைப்பைப் பொறுத்தவரையில் அங்கு இராணுவம் பிரசன்னமாகியிருப்பது பெருநிலப் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகவும் விளங்கியது. கடல்படு திரவியங்கள் மூலம் அடையும் பெரும் பொருளாதாரம் தடுக்கப்பட்டு வருகிறது. கடல் போக்குவரத்துக்களாலும் கடல் அட்டை ஏற்றுமதிகளாலும் சுவையுணவுப் பயிர்ச்செய்கைகளாலும் பெருமளவு இலாபம் ஈட்டும் பூமியை ஆக்கிரமிக்கும் ஆக்கிரமிப்பாளர்களின் முகக்கவசமாக இந்த மண்டைதீவு இராணுவ முகாம் இருந்தது.

இந்த இராணுவ முகாம் மீதான தாக்குதலை, தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களே திட்டமிட்டு கண்காணித்துக் கொண்டிருந்தார். இருபெரும் தளபதிகளான சொர்ணம், சூசை ஆகியோர் வழிநடத்தினர்.

28-06-95 அன்று அதிகாலை, மண்டைதீவில் நான்கு முனைகளூடாக ஊடுருவிய விடுதலைப் புலிகள் அங்கிருந்த நூற்றுக்கணக்கான காவலரண்கள், பல மினி முகாம்கள் மற்றும் பிரதான முகாம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## மண்டைதீவு இராணுவ முகாம் தாக்குதலில் வெற்றிக்கு உரம் சேர்த்தும் தாய்மண்ணின் விடுதலைக்கு ஒளித் தீபமாயும் சுடரும் தியாக வேங்கைகளுக்கு

# எமது வீரவணக்கங்கள்

- மண்ணின் விடுதலைக்கு விதையான வீரர்கள்
- லெப். கேணல் குட்டி (தம்பிமுத்து கோவிந்தராஜா - வண்ணார்பண்ணை)
- மேஜர் தமிழ்மாறன் / கஜேந்திரன் (அரசரட்ணம் பாலகிருஷ்ணன் - மூதூர்)
- கப்டன் ஜவான் (செல்லப்பு தயாபரன் - புத்தூர் கிழக்கு, புத்தூர்)
- லெப். அகிலன் (அர்ச்சுனன் சிறீவரதன் - பண்டத்தரிப்பு)
- லெப். மாறன் (குலநாயகம் குலேந்திரன் - சுதந்திரபுரம், கிளிநொச்சி)
- லெப். காந்தன் (நல்லதம்பி - சுப்பிரமணியம் - மட்டக்களப்பு)
- 2-ம் லெப். கிறிஸ்ரி (கந்தையா கணேசமூர்த்தி - மட்டக்களப்பு)
- லெப். உதயா (கந்தையா இந்திரகுமாரி - நெடுங்கேணி)
- வீரவேங்கை பாமினி (சின்னவன் நகுலேஸ்வரி - புத்தூர்)

கள் என்பனவற்றை முற்றாக அழித்தனர். மூன்று மணி நேரங்களாக நடந்த தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர். இராணுவத்தினரில் பலர் அவலமான கூச்சலை எழுப்பியபடி வேலணை போன்ற ஏனைய தீவுகளுக்குச் சிதறி ஓடினர். இத்தாக்குதலை விடுதலைப் புலிகளின் படையணிகளும் கடற்புலிகளும் மகளிர் புலிகள் படையணிகளும் இணைந்து நடாத்தினர். இத்தாக்குதலில் இரு பெண் போராளிகள் உட்பட ஒன்பது விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர். இத்தாக்குதலில் ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. 350 தானியங்கித் துப்பாக்கிகள், மோட்டார்கள், இயந்திரத் துப்பாக்கிகள் இவற்றுள் அடங்குகின்றன.

மூன்றாம் ஈழப் போர் தொடங்கிய பின்பு நடந்த மிகப்பெரிய இராணுவ முகாம் தாக்குதல் இதுவாகும். பூநகரி இராணுவ இராணுவ முகாம் தாக்குதலுக்குப் பின் நிகழ்ந்த மிகப்பெரிய இராணுவ முகாம் தாக்குதலும் இதுவாகும்.

இத்தாக்குதலின் போது, மக்கள் தங்களது பூரணமான ஒத்துழைப்பை நல்கினர். தாக்குதல் ஆரம்பமானது முதல் விடுதலைப் புலிகள் வெற்றிகரமாகத் தளம் திரும்பும் வரை, வீதிகளில் போக்குவரத்து இடையூறுகளைக் கவனித்தும், வாகன உதவிகளை வழங்கியும் காயமடைந்த போராளிகளை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றும் கடமை புரிந்தனர். விடுதலைப் புலிகளின் அதிவேகப் படகுகள் மூலம் எடுத்துவரப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்கள் வெடிபொருட்கள் மற்றும் ஏனைய இராணுவப் பொருட்கள் என்பவற்றை விசைபடகுகளிலே இருந்து இறக்கி அவற்றை வாகனங்களில் ஏற்றுவதிலும் ஈடுபட்டனர். வயது வேறுபாடின்றி மக்கள் அனைவரும் கடலிலும் இறங்கி வந்து கரை சேர்க்க உதவிய காட்சிகள் மெய் சிலிர்க்க வைப்பதாக இருந்தன.

தமிழீழத்தில் வளர்ந்து வரும் கடற்புலிகளின் அபார சக்தியின் மிகப் பெரிய பரிமாணம் இத் தாக்குதலின் போது வெளிப்பட்டது. பண்டைய வரலாறுகளில் தனது பலம் மிக்க கடற்படையாலே, கங்கை முதல் கடாரம் வரை சோழ சாம்ராச்சியம் செழித்திருந்தது. இன்று தமிழீழத்தின் பரந்த விரிந்த கடற்பரப்புக்களில் பகை தொலைத்து விடியலுக்கு விளக்கு ஏந்தும் கடற் புலிகளின் கைகள் வலுவும் உரமும் பெற்று உயர்கின்றன.

நவீன போர் வரலாற்றில், இத்தகையதொரு பெரிய முகாம், மிகக் குறுகிய நேரத்தில் மிகக் குறைந்த இழப்புக்களோடு கைப்பற்றப்பட்டதற்கு சான்று எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. உலகின் போர்க் கலை ஆராய்ச்சியாளர்களின் ஆய்வுக்கு இத்தாக்குதலும் இடம்பெறப் போவது நிச்சயம்.

இந்தக் கரையோரப் பிரதேசங்களில் எல்லாம் இராணுவ ஆக்கிரமிப்புக்கு முன்பாக நாம் சுதந்திரமாகக் காலாற நடந்து திரிந்தோம் அந் நாட்களில் கடலை நம்பியே காலந்தள்ளும் மக்கள் தமது உணவுத் தேவைகளுக்காக இரவில் தீப்பந்தங்களை ஏந்தியவண்ணம் கடலில் இறங்குவார்கள். மீண்டும் எம் மக்கள் கடல் தாயின் மடியில் கூடிக் குதூகலிக்கின்ற காலமும் தீப்பந்தங்கள் சுடர்வது போன்ற அந்த ஒளிமயமான எதிர்காலமும் வெகுதூரத்தில் இல்லை.

- வாசன்



சயனைட் அருந்தி வீரமணத்தைத் தழுவிய (முதற் புலி வீரர் பகீன் - மண்டைதீவு)

ஊரின் முகத்தில்
சோகம் அப்பியது போன்ற துயரம்
உனக்கு வதையானது வீரனே!
அப்போதெல்லாம் நீ தனியனாக
அல்லது சில தோழர்களுடன்
கோடை வெய்யிலில் தகிக்க நடந்தாய்
கடல் பாட தூங்கிய உன் மண்ணை
கரிய இருள் வலையால் மூடினன் எதிரி
நீ திரும்பி வருவதாய்
ஊரில் எல்லோரும் பார்த்திருந்தார்கள்
உன் அம்மா, உனைச் சுமந்த
மடியும் நோகக் காத்திருந்தாள்.
பத்து வருடங்கள் கழித்து
உன்னைப் போலவே
வாஞ்சையோடு மண்ணைத் தழுவும்
விடுதலைக் குரல்களோடும்
புன்சிரிப்புக்களோடும்
ஊரின் முகத்தில் சோகம் அப்பியது போன்ற
கரிய இருள் துயர் வலையை
கோபக் கனல் கொண்டும் கிழித்தெறிந்தார்கள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# செம்பாடாகிய எங்கள் நிலத்தில்....



- கல்வயல் குமாரசாமி -

கருநெடும் பனைகள்
விமானம் உராய
வருகிறோம் பார் பார் வளர்ந்தென நிமிரும்
பலாலியைச் சூழ
வடலிக்கூடாக கருக்கு விலாப்புடைத் தெழும்பச்
செம்பாடாகிய
எங்கள் இடங்களுக்கெப்போ திரும்புவோம்.

பொங்கலும் பூசையும்
புளிய மரத்தடி வைரவருக்கு
வடை மாலைகளும் சாத்தி
உருவரச் சந்நதம் ஆடுவோம்.
தடைகளை வெட்டிக் கழிப்புக்
கழிப்போம்; நீற்றுப் பூசினிக் காயினை
அறுத்துக் குங்குமம் பூசி

வெட்டுவோம் வழி
எப்போ திரும்பி இவைகளைச் செய்வோம்
செம்பாடாகிய எங்கள் நிலத்தில்.

ஆலடிக் காளிக்கு ஆடும் கோழியும்
நேர்ந்தவை வளர்ந்து
பெருகி நிரம்பின
எங்கள் தலைமேல் உம்தளம்
விடுதலைச் சங்கொலி கேட்டால்
சாய்வது திண்ணம்.

உங்கள் படைகள் தலைகளை
அதிஉயர்
பீதுருதாலகாலமலையிலோ
கிரிகாலப் பொத்த உச்சி விளிம்பிலோ
சிவனொளிபாத செதுக்குப் படியிலோ
மனமுடை மங்கையர் சங்கமமாகும்
மகாவலிக்குள்ளோ களனி கங்கையிலோ
தேடிச் சிலதைப் பெறவும் கூடும்.
இந்து சமுத்திரம் எற்றும்
அலைகளில் வந்து
காலிமுகத் திடல் கரையில்
ஒதுங்கவும் கூடும்.
ஒருநாள் நிச்சயம்
வடலிக் கூடல்
படைகளின் குடலை உருவி
மாலையாய்ப் போட்டு
- ஒரு வேள்வி -
நேர்த்திக் கடனைத் தீர்ப்பது நடக்கும்.
அவ்வேளை;
கீரிமலையில் முழுகி
எம் விடுதலை வெற்றி விழாவை
விமரிசையாகச் செய்ய இருக்குஞ் செய்தியை
உங்கள்
ரூபவாஹினியில் ஒளிபரப்புங்கள்
அகதிகளெனப் போய்
வெளிநாடுகளிலே அலையும்
எம்மவர் அறியும் பொருட்டே.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் மறைவையிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகம் விடுத்த அறிக்கை

# பாவலரேறு பெருஞ்சித்திரனார்:

## தமிழீழ ஆதரவுத் தூண்



பாவலரேறு பெருஞ்சித்திரனார் - திரு. வீரமணி (தி.க.)
தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக் கிளையினரின் அழைப்பை ஏற்று பாரிஸ் வந்திருந்தபோது

பாவலரேறு பெருஞ்சித்திரனார் 11-06-95 அன்று, சடுதியாக மறைந்து போனது தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு ஒரு பெரும் இழப்பாக உள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழத்தில் பேராதரவாய் வெளிப்பட்ட குரல் அடங்கிவிட்டது. போராட்டத்தின் ஆரம்ப காலங்களில், தமிழீழ விடுதலைக்கென்று புறப்பட்ட ஏனைய தமிழ் குழுக்களையும் அவர் பெரிதாக நம்பினார். காலப்போக்கில், தமிழீழ விடுதலைப் புலிகளே விடுதலையை வென்று தருவார்கள் என்பதையும், மற்றயவை போலிகள் என்பதையும், மழைக்கு முளைத்த காளான்கள், களையப்படவேண்டிய களைகள் என்பதையும் புரிந்துகொண்டார். எனவேதான் 1990-ம் ஆண்டில் தமிழ் நிலம் இதழில் எழுதும் போது, ".... இறுதி வரை தம் ஒரே கொள்கை 'தமிழீழ விடுதலைக் கொள்கையே' என்னும் இலக்குடன் போராடி, இலங்கையின் வடக்குப் பகுதியிலுள்ள தமிழீழத்தை இன்றைக்கு முழுவதும் கையகப்படுத்தியுள்ள பெரு மாவீரன் பிரபாகரன் தலைமையிலுள்ள விடுதலைப் புலிகள் இருந்து வருவது, உலகத் தமிழினத்தை மிகவும் மகிழ்ச்சிக்கும் பெருமிதத்திற்கும் உள்ளாக்குகிற ஒரு சிறப்புச் செய்தியாகும்." என்று குறிப்பிட்டார். மேலும் அவர், "தமிழீழ விடுதலைக்காக மட்டும் இது நடைபெறவில்லை. தமிழினத்தின் விடுதலைப் போரே இது! இப் போரின் முதல் படைத் தலைவனே பிரபாகரன்! எனவே தமிழினத்தின் சார்பில் போராடிக்கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருபோதும் பின்வாங்கக் கூடாது." என்று எழுதினார். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர், இந்திய "அமைதிப்" படையுடனான சண்டையின் பின்னர், அவர் முழுமையாக விடுதலைப் புலிகளையே ஆதரித்துச் செயல்பட்டார்; போராடினார்; அடிபட்டார்; சிறை சென்றார். அவர் எழுத்தும், சொல்லும், செயலும் இம்மாற்றத்தை தெளிவாக எடுத்துக் காட்டின.

அவர் 80-க்கும் மேற்பட்ட நூல்கள், பிரசுரங்களை வெளியிட்டதாக அறிகிறோம். அவற்றில் பல தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பற்றியதாக அமைகிறது. "தமிழீழம்" என்ற நூல், விரிவாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆராயும் நூலாகும். இந்நூலில் கால ஓட்டத்துடனான, அவரது படிமுறையான கருத்து மாற்றத்தைக் காண்கிறோம். பல முறை, 16 தடவைகள் தமிழுக்காகவும், தமிழனின் விடுதலைக்காகவும், தமிழீழப் போராட்டத்தை ஆதரித்தும் சிறை சென்றிருக்கின்றார். தமிழீழ விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடை செய்து, தடா சட்டத்தின் கீழ் தமிழீழ ஆதரவாளர்கள் ஒடுக்கப்பட்டபோது அதனை எதிர்த்துப் போராடி உள்ளார். தமிழீழ ஆதரவுப் பொதுக்கூட்டங்களும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், எழுத்துக்களும் அவரது போராட்டக் கருவிகள் ஆயின. இதன் விளைவாக பலமுறை கைதுசெய்யப்பட்டு, சிறைக்குள் அடைக்கப்பட்டு கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டார். இவரது உலகத் தமிழர் முன்னேற்றக் கழகமும், ஏனைய கட்சிகளும், இயக்கங்களும் இணைந்து நடத்தி வரும் தமிழீழ, தமிழீழ விடுதலைப் புலிகள் ஆதரவுச் செயல்பாடுகளே தமிழ்நாட்டில் விடுதலை உணர்வைச் சூடாக்கி வருகின்றன. இதனை அவரே கவிதையாக,

**உலகமென்னும்**
**உருண்டைக்குள்**
**தமிழர்க்காக**
**உரிமையுள்ள ஒரு நாடு**
**தோன்றல் வேண்டும்!**
**கலகத்தால் இனமழிந்து**
**சாகும் முன்னம்**
**கயவரெல்லாம்**
**தமிழ்க்குலத்தை**
**அழிக்கும் முன்னம்**
**பலகற்ற சூழ்ச்சியினால்**
**அதிகாரத்தால்**
**பைந்தமிழர் நைந்தழிந்து**
**ஒழியுமுன்னம்**
**விலகட்டும் பகை! உரிமைக்**
**கதிர்தோன் றட்டும்!**
**விடியட்டும் தமிழீழம்!**
**விளங்கட்டுமே!**

என்று பாடினார். "தமிழீழத் தீர்விலேதான் தமிழினத் தீர்வே அடங்கிக் கிடக்கிறது." என்று எழுதினார்.

"தமிழின வரலாற்றில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின் மலைபோல் நிற்பவர் பிரபாகரனே! அவன் வீரத்திற்கு ஈடும் இல்லை; இணையும் இல்லை." என்று எழுதிய விடுதலைக் கவிஞன் இன்று எம்மோடு இல்லை. எமக்கு ஆதரவாகச் செயற்பட்ட அந்தத் தமிழ்ப் புயல் ஓய்ந்து விட்டது. சுதந்திர கீதத்தை உயர்த்தி இசைத்த அந்த குயிலின் குரல் ஒடுங்கிவிட்டது. விடுதலைப் போர் முரசு அறைவதை நிறுத்திக் கொண்டது. ஆனால் அதன் அதிர்வு தமிழினம் விடுதலை பெற்று தனக்கென்றொரு சுதந்திர நாட்டை உலகில் நிறுவும் வரை தமிழ் நெஞ்சங்கள் அனைத்திலும் உணர்வு அலைகளை எழுப்பிய வண்ணம் இருக்கும். ▣

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# சேதுக் கால்வாய் திட்டம்

## பழ. நெடுமாறன்



நூற்றாண்டு காலத்திற்கும் மேலாகப் பேசப்பட்டு வரும் திட்டம் சேதுக் கால்வாய்த் திட்டமாகும். தமிழகம், தமிழீழம் ஆகிய இரண்டு நாடுகளுக்கு இது இன்றியமையாத திட்டமாகும். தமிழர்களின் வாழ்வியல் வளர்ச்சித்திட்டம் என்பதால் இத்திட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசு மறுக்கிறது. கொழும்புத் துறைமுகம் முக்கியத்துவம் இழந்துவிடும் என்பதால் சிங்கள அரசு இதற்கு முட்டுக்கட்டை போடுகிறது.

★ **சேதுக்கால்வாய்த் திட்டம்**
★ **தூத்துக்குடி துறைமுகத் திட்டம்**
★ **கிழக்குக் கடக்கரைச் சாலைத்திட்டம்**
★ **தூத்துக்குடி சென்னை அகல இரயில் பாதைத் திட்டம்**

ஆகிய நான்கு திட்டங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்த திட்டங்களாகும். இவற்றில் தூத்துக்குடி துறைமுகத்திட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. கிழக்குக் கடற்கரை சாலைத் திட்டம் போடப்பட்டு வருகிறது. தூத்துக்குடி சென்னை அகல இரயில் பாதைத் திட்டமும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்நிலையில் சேதுக்கால்வாய்திட்டம் நிறைவேற்றப்படாமல் இருப்பது மற்ற மூன்று திட்டங்களையும் பாதிக்கும். தென்தமிழ் நாட்டின் தொழில் வணிக வளர்ச்சி இந்த நான்கு திட்டங்களும் முழுமையாக நிறைவேற்றப்படுவதில் தான் உள்ளது.

சேதுக் கால்வாய்த் திட்டத்திற்கு நீண்ட வரலாறு உள்ளது. தமிழர்களுக்கு அது ஒரு சோகம் நிறைந்த ஏமாற்றமான வரலாறாகும்.

சேதுக் கால்வாய்த் திட்டம் உலகிலேயே மிகப் பழமையான திட்டமாகும். சுயஸ் கால்வாய்த் திட்டம், பனாமாக் கால்வாய்த் திட்டம் போன்ற கால்வாய்த் திட்டங்கள் பற்றிய சிந்தனைகள் பிறப்பதற்கும் முன் உருவாக்கப்பட்ட திட்டம் சேதுக்கால்வாய்த் திட்டமாகும். கிட்டத்தட்ட 120 ஆண்டுகளுக்கு முன்னால் 1860-ம் ஆண்டில் இந்தியக் கப்பல் படையைச் சேர்ந்த கமாண்டர் டெய்லர் என்ற ஆங்கிலேயர் இந்தத் திட்டத்தை உருவாக்கினார். ஏறத்தாழ அன்றைய மதிப்பில் 50 இலட்சம் ரூபாயில் இத்திட்டத்தை முடிக்கலாம் என அவர் திட்டமிட்டார். அதற்குப் பின்னர் மற்றொரு ஆங்கிலேய பொறியியல் வல்லுனரான டௌன்சன்ட், பாம்பன் கால்வாயை அகலப்படுத்த 2 கோடி ரூபாயில் ஒரு திட்டம் தந்தார். இது அதிகமான தொகை என்கிற காரணத்தினால் இத்திட்டம் ஏற்கப்படவில்லை. 1862-ம் ஆண்டில் சேர் ஜான் கூடே என்பவர் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் புதிய திட்டத்தை வகுத்தார். இத்திட்டத்திற்கு அன்றைய இரயில்வேக் கம்பனி அதிகாரிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். எனவே, இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

1921-ம் ஆண்டில் அன்றைய சென்னை மாநில அரசு சேதுக் கால்வாய்த் திட்டத்தை எப்படியும் நிறைவேற்றவேண்டும் எனத் தீவிர முயற்சி செய்தது. ஆனால், அதற்குப் பண உதவி செய்ய இலண்டன் அரசு மறுத்துவிட்டது. இதற்குப் பின்னர் 24 ஆண்டுகள் கழித்து 1945-ம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு சேதுக் கால்வாய்த் திட்டத்தைப் பரிசீலனை செய்ய நிபுணர்கள் குழு ஒன்றினை அமைத்தது. இந்தக் குழுவின் அறிக்கையும் முடக்கி வைக்கப்பட்டது. 10 ஆண்டுகள் கழித்து நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் இந்திய அரசாங்கம் 1955-ம் ஆண்டு டாக்டர் சர். எ. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் சேதுக்கால்வாய்த் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய ஒரு குழுவினை அமைத்தது. இந்தக் குழு சேதுக்கால்வாய்த்திட்டம் லாபகரமானது என்றும், கிழக்குக் கடற்கரைக் கப்பல் போக்குவரத்துக்கு மிகவும் அவசியமானதும் என்றும் இந்திய அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்தது. இந்தக் குழுவின் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும் - சேதுக்கால்வாய்த் திட்டமும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டவை. இவை பிரிக்கமுடியாதவை. தூத்துக்குடி துறைமுகத்திற்கும் சேதுக் கால்வாய்க்கும் உள்ள உறவு என்பது கொழும்புத் துறைமுகத்திற்கும் இலங்கையைச் சுற்றிச் செல்லும் கப்பற் பாதைக்கும் உள்ள உறவுக்குச் சமமாகும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள்ளாகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிட முடியும்.

சேர். ஏ. இராமசாமி முதலியார் குழுவின் பரிந்துரைகளும் கிடப்பில் போடப்பட்டன. அதற்குப்பின் 1963-ம் ஆண்டில் மத்திய அமைச்சரவையின் அவசர நிலைக் குழு கூடி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேதுக் கால்வாய்த் திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என முடிவு செய்தது. ஆனால், இம் முடிவும் செயற்படுத்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தப்படவில்லை.

1965-ம் ஆண்டு விசி. வெங்கடேசுவரன் தலைமையில் ஒரு கமிட்டியை இந்திய அரசு நியமித்தது. இந்தக் கமிட்டி இதற்கு 37 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிட்டது. மேலும், இத்திட்டத்தினால் ஆண்டுக்கு ஒரு கோடியே 62 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கும் என்று இக்குழு கணக்கிட்டது. ஆனாலும் இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

1982-ம் ஆண்டு மத்திய நிதியமச்சர் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் "இத்திட்டம் கிடப்பில் போடப்படவில்லை. அரசின் பரிசீலனையில் இன்னமும் இருக்கிறது" என்று அறிவித்தார். இதற்கு 110 கோடி ரூபாய் செலவாகும் என அவர் கூறினார். இதற்குப் பின்னர் 1981-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எச். ஆர். லட்சுமிநாராயணன் அவர்கள் தலைமையில் மற்றொரு கமிட்டியை இந்திய அரசு அமைத்து அதுவும் சாதகமான பரிந்துரைகளை அளித்துவிட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது 9 கமிட்டிகளும் சுதந்திர ஆட்சியில் 3 கமிட்டிகளும் ஆக மொத்தம் 12 கமிட்டிகள் அமைக்கப்பட்டன. கடந்த 100 ஆண்டுகாலத்தில் வேறு எந்தத் திட்டமும் இது போல மீண்டும் மீண்டும் முழுமையாகப் பரிசீலனை செய்யப்படவில்லை. ஆனாலும் கூட 120 ஆண்டு காலமாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்படவில்லை என்பது வருந்தத்தக்க உண்மையாகும்.

**சேதுக் கால்வாய்த் திட்டத்தின் பலன்கள்:**

1) மேற்கு கடற்கரையிலிருந்து கிழக்குக் கடற்கரைக்குக் கப்பல்கள் வரும் தூரத்தில் 350 கடல் மைல்கள் குறையும்.

2) கன்னியாகுமரியில் இருந்து சென்னை வரும் கப்பல்கள் தற்போது இலங்கையைச் சுற்றிக் கொண்டு அதாவது 755 கடல் மைல்கள் செல்ல வேண்டியுள்ளது. சேதுக் கால்வாய் வெட்டப்பட்டால் இத்தூரத்தில் 355 கடல்மைல்கள் குறையும். இதைப் போலவே கன்னியாகுமரியிலிருந்து விசாகபட்டினம் செல்லும் தூரம் 295 கடல் மைல்களும், கல்கத்தா செல்லும் தூரம் 259 கடல்மைல்களும் குறையும்.

3) சேதுக் கால்வாய்த் திட்டத்தில் போடப்படும் முதலுக்கு இத்திட்டம் முடிந்த முதலாண்டில் நாலரை சதவீத வருமானம் கிடைக்கும். பதினோராவது ஆண்டில் இந்த வருமானம் ஏழு சதவீதமாகவும் பதினைந்தாவது ஆண்டில் இது 8.5 சதவீதமாகவும் முப்பதாவது ஆண்டில் 14 சதவீதமாகவும் இந்த வருமானம் உயரும்.

4) சேதுக் கால்வாயைப் பராமரிக்க ஆகும் செலவு மிகக் குறைவு.

5) சேதுக் கால்வாயில் செல்லும் கப்பல்களின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் எண்பது சதவீதம் அன்னியச் செலவாணியாகும். ஆண்டுக்கு ரூ. 150 கோடி அன்னியச் செலவாணி மிச்சமாகும்.

6) இக் கால்வாய் வெட்டப்பட்டால் தூத்துக்குடித் துறைமுகம் மிகப்பெரிய வளர்ச்சி அடையும். தூத்துக்குடித் துறைமுகம் சேதுக் கால்வாயும் சேர்ந்து தென் மாவட்டங்களில் மிகப் பெரிய பொருளாதார வளர்ச்சியை உருவாக்கும். சர்வதேச கண்டெய்னர் போக்குவரத்தில் தூத்துக்குடி துறைமுகம் ஒரு முக்கிய கேந்திரமாக மாறும். சர்வதேசக் கப்பல்கள் வந்து செல்ல வசதிகள் ஏற்படும்.

7) சேதுக் கால்வாயின் இருபுறமுள்ள துறைமுகங்கள் இதன் மூலம் வளர்ச்சி அடையும். குளச்சல், தூத்துக்குடி, இராமேசுவரம், நாகப்பட்டினம், காரைக்கால், கடலூர், பாண்டிச்சேரி, சென்னை ஆகிய தமிழ்நாட்டுத் துறைமுகங்களும், தமிழீழத்தில் காங்கேசன்துறையும் மிகப் பெரிய வளர்ச்சியை அடையும்.

8) ஏற்றுமதி, இறக்குமதி பெருகும். வணிகம் வளரும். சிதம்பரனார், நெல்லை இராமநாதபுரம், காமராசர், மதுரை, பசும்பொன், குமரி ஆகிய மாவட்டங்களில் புதிய தொழில்கள் தோன்றும். மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும். பொருளாதார வளர்ச்சி துரிதமடையும்.

(9) கடற்கரைக் கப்பல்களுக்கும் வணிகக் கப்பல்களுக்கும் பாதுகாப்பான கால்வாயாகச் சேதுக் கால்வாய் விளங்கும்.

10) புயல் அபாயமுள்ள இலங்கைக் கடற்கரையைச் சுற்றிக்கொண்டு செல்வது கப்பல்களுக்கும் ஆபத்தை விளைவித்துக் கொண்டிருக்கிறது.

11) இந்தியாவில் தமிழ்நாடு, இலங்கையில் தமிழர் வாழும் ஈழநாடு அனைத்துலகச் சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவரும் பகுதிகளாக மாறும். சேதுக்கால்வாயின் இரு பக்கமும் தமிழர்களே வாழ்வதால் இது தமிழர்கள் நலனுக்கு வழிவகுக்கும் ஒரு திட்டமாகும்.

12) நிலக்கரி, உப்பு, சிமெண்ட் போன்ற பெருமளவில் கொண்டு செல்லப்படும் பொருட்கள்

**நிலவுகளல்ல நடமாடும் எரிமலைகள் பெண்புலிகள்**

**அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து பரிதிப் புன்னகை என்றொரு கவிதை நூல் வெளிவந்துள்ளது. இந்நூலை எழுதிய செந்தமிழ் இனியன் என்ற தமிழகக் கவிஞர் நிலவுகளல்ல நடமாடும் எரிமலைகள் பெண் புலிகள் என்றொரு கவிதையை எழுதியிருக்கின்றார்.**

**இந்நூலுக்கு முன்னுரை எழுதிய புதுவை தமிழ் நெஞ்சன் முறத்தால் புலியை அடித்தாள் தமிழ் பெண்ணொருத்தி என்பது கழகக் காலம். பெண்களே புலிகளாய் பெண் புலிகளாய் இருப்பது இன்றைய புலிகளின் காலம். என்று குறிப்பிட்டுள்ளார்.**

**இந்திய அரசின் தடாவையும் தாண்டி, பெண்புலிகளின் வீரம் தமிழகக் கலைஞர்களின் மனதில் வீரத்தை ஊட்டி இருப்பது வியப்பதற்கு ஒன்றுமில்லைத் தானே.**

www.tamileelamarchive.com

**வை**கறையிற் கோடியெழில் வாங்குகின்ற ஊரும்
வாழையிலை மீதிருந்து வீழுபனி நீரும்
ஐயனவன் ஏறிவரும் அழகுமணித் தேரும்
அற்புதமாம் கற்பனைக்கு ஒப்பனைகள் பாரும்.

பச்சைநிறப் பட்டுடுத்த பரந்த வயல் வெளியும்
பால்நிலவிற் பண்ணெடுத்துப் பாடுகின்ற மொழியும்
உச்சிமரம் மீதிருந்த உரசுகின்ற கிளியும்
ஊற்றெடுக்கும் கற்பனையின் உட்புகுந்து வழியும்.

ஒற்றையடிப் பாதையது ஏறுகின்ற மேடும்
ஓரவிழியால் உள்ளத்தைக் கீறுகின்ற பேடும்
புற்தரையில் உண்டுநடை போடுகின்ற மாடும்
புத்தமுதக் கற்பனையிற் புகுந்துவிளை யாடும்.

நள்ளிரவில் தூரயிருந் தோடிவரும் பாட்டும்
நல்லநிலை வேளையிலே ஆடுகின்ற கூத்தும்
வெளிகளும் வெண்ணிலவும் சேர்ந்தொரு கூட்டும்
விந்தைமிகு கற்பனைகள் தந்துள்ளத்தை ஆட்டும்.

கற்பனைக்கு ஒப்பனைகள் காட்டிய நம் ஊரை
கார்த்திகையில் நாமிழுத்த கண்ணகியாள் தேரை
அற்புதமாய் எம்கிணற்றில் அள்ளியுண்ட நீரை
அந்தரிக்க விட்டெடுத்தோம் அகதியென்ற பேரை.

தென்றல்விளை யாடுகின்ற சோலையுடன் வயலும்
சொந்தமென நாமிருந்து சோறுதின்ற அயலும்
இன்றுபறி போனதினி என்றுவந்து சேரும்
ஈரநிலம் காயமுன்னர் போய்விடலாம் வாரும்.

*- மாலிகா -*



ஓவியம்: தயா

கடல்மார்க்கமாக இக்கால்வாய் மூலம் குறைந்த செலவில் கொண்டுசெல்ல வழி ஏற்படும். தற்போது ஆண்டுதோறும் கிழக்குக் கடற்கரை மார்க்கமாக 25 இலட்சம் டன் நிலக்கரியும் 30 இலட்சம் டன் உப்பும் 20 இலட்சம் டன் பிற சரக்குகளும் கொண்டு செல்லப்படுகின்றன.

எனவே முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் இந்திய அரசு தொடர்ந்து தயக்கம் காட்டுவது ஏன்? இலங்கையின் முன்னாள் பிரதம மந்திரி திருமதி. சிறீமாவோ பண்டாரநாயக சேதுக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப் பட்டால் கொழும்புத் துறை முகத்தின் முக்கியத்துவம் போய் விடும். இதன் மூலம் இலங்கையின் கப்பல் தொழில் அழிந்துவிடும் என்பதாலும், தமிழீழத்தில் உள்ள காங்கேசன்துறை சர்வதேசத் துறைமுகமாக மாறி ஈழத்தமிழர்கள் வளம்பெற்றுவிடக்கூடாது என்ற பதைப்பினாலும் இத்திட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்று இந்திய அரசை வலியுறுத்தியதின் விளைவாக இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இது தமிழகத்தின் நலனுக்கு எதிராக செய்யப்பட்ட சதியாகும். மத்திய அரசின் இந்தப் போக்கைக் கண்டிக்கவேண்டியது தமிழர் ஒவ்வொருவரின் கடமையாகும்.

இத்திட்டம் பற்றிச் சுருக்கமாக சொல்வதானால்,

The project is financially justified, Technically sound, Commercially worthwhile, Politically expedient

எனவே இத்திட்டத்தை உடனடியாக நிறைவேற்றவேண்டும்.

120 ஆண்டுகளுக்கு முன்னால் 50 இலட்ச ரூபாய் செலவில் முடிக்கக்கூடிய இத்திட்டத்தை இப்போது நிறைவேற்ற சுமார் 400 கோடி ரூபாயும் ஆகும் என மதிப்பிடப் பட்டுள்ளது. தள்ளிப்போடத் தள்ளிப்போட இத்திட்டத்தின் செலவு அதிகமாகுமே தவிர, குறையாது. எனவே இதனை விரைவில் நிறைவேற்றுவதன் மூலம் தமிழகமும், தமிழீழமும் பெரும் பயன்பெறும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# சுதந்திரத்தைத்தேடி..

இரண்டும் சரியான துடியாட்டம். பரபரவென வண்டுகள் போல சுழலும் கருவிழிகளில் எப்போதுமே எதையும் ஆராய்ந்து துருவும் இயல்பு தெரியும். மயூரி, வஞ்சி என்றால் எல்லோருக்கும் விருப்பம்.

இரண்டும் சரியான சின்னன்.

வஞ்சி கறுப்பு. உருண்டைக் கண்கள்.

மயூரி மாநிறம். நல்ல சொக்கு.

பால்மணம் கொஞ்சம்கூட மாறவில்லை. ஆனால் பயிற்சியின் போது 'பெரிய மனிதர்கள்' போல் நடந்துகொள்வார்கள்.

இருவரும் 1993-ம் ஆண்டின் முற்பகுதியில், மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த மகளிர் படையணியுடன் வந்திருந்தார்கள்.

மட்டக்களப்புத் தமிழ் சாதாரணமாகவே கேட்க அழகாக இருக்கும். இவர்கள் தங்கள் மழலை மொழியில் அந்தத் தமிழை உச்சரிக்கும் போது இன்னும் அழகாக இருக்கும்.

'அக்கா' என்று சொல்லத் தெரியாது. 'அக்கே, அக்கே' என்று கொஞ்சுவார்கள்.

இருவரும் சின்னவர்கள் என்பதால் எல்லோரும் இவர்களுக்குச் சரியான செல்லம். செல்லம் என்பதால் குழப்படி செய்வதில்லை. நிறையக் குறும்புகள் செய்வார்கள். மட்டக்களப்பிலிருந்து வந்த புதிதில், அங்கிருந்து வந்த எல்லோரிடமிருந்தும் பயிற்சியாளர்கள் அவ்விடத்துப் பயிற்சி பற்றிக் கேட்டு இவ்விடத்துப் பயிற்சி பற்றிச் சொல்லிக் கொடுத்தார்கள்.

அவர்களுக்கு காடு என்பது தண்ணீர் பட்டபாடு. காவல்உலாப் போகும் இராணுவ அணியை மறைந்திருந்து தாக்குவது வெல்லம் சாப்பிடுவது போல். இங்கே நடக்கின்ற தளமுற்றுகைகள், தகர்ப்புகள், வெளிகளில் நடக்கும் சண்டைகள் எல்லாம் அவர்களுக்குப் புதிது.

ஆனையிறவு வெளிகளில் எப்படிச் சண்டை நடந்தது என்று வஞ்சிக்கும் மயூரிக்கும் வாய்கொள்ளாத ஆச்சரியம்.

"எப்படி அக்கே வெளிக்குள்ளை நிண்டு சண்டை பிடிச்சீங்க? நாங்களெல்லாம் பத்தைக் குள்ள உருமறைஞ்சிருந்துதான் சண்டை பிடிப்பம். நீங்க எப்படி ஆனையிறவில சண்டை பிடிச்சீங்க?"

"ஏன் அந்தச் சண்டைக்கு ஆகாய, கடல், வெளித் தாக்குதல் எண்டு பேர் வைச்சீங்க?"

என்றெல்லாம் துருவித் துருவிக் கேட்பார்கள்.

பூநகரிச் சண்டைக்கான பயிற்சி நடந்துகொண்டிருந்த நேரத்தில் வந்ததால் இவர்களும் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இரண்டு பேருக்கும் குண்டுகள் கொடுக்கப்பட்டன.

பயிற்சியின் போது இருவரும் சரியான சுறுசுறுப்பு.

வகுப்புகளிலும் அப்படித்தான்.

ஒருமுறை சொர்ணமண்ணை, பெண்போராளிகளின் பயிற்சித் தளத்துக்கு வந்து, தான் வகுப்பில் கேட்ட கேள்விகளுக்குச் சரியாகப் பதிலளித்த ஆண் போராளிகளுக்

**கனத்த நெஞ்சும் கண்ணீர்த் துளிகளும்**
**சுமந்த வாழ்வு தொலையட்டும்.**
**விடுதலை உணர்வும் ஆயுதச் சுமைகளும்**
**சுமக்கும் வாழ்வு மலரட்டும்**




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


குப் பத்து குண்டுகளைப் பரிசாக அனுப்பியதாகவும், அதேபோல பெண் போராளிகளும் சரியாகப் பதிலளித்தால் பத்துக் குண்டுகள் தருவதாகவும் கூறினார்.

வஞ்சி, மயூரி உட்பட எல்லோரும் வகுப்புகளுக்கு வந்துவிட்டார்கள். சொர்ணமண்ணையின் கேள்விகளுக்கு வஞ்சியும், மயூரியும் சுறுசுறுப்பாக எழுந்து நின்று சரியான பதில்களைச் சொல்லிவிட்டார்கள். சரியாகச் சந்தோசப்பட்ட சொர்ணமண்ணை அடுத்தநாளே இரண்டு பேருக்கும் கொடுக்குமாறு பத்துக் குண்டுகளை அனுப்பிவைத்தார்.

குண்டுகள் கிடைத்ததில் இரண்டு பேருக்கும் சரியான புளுகு. கண்ணில் பட்ட எல்லோரிடமும் குண்டுகள் கிடைத்த விடயத்தைச் சொல்லிவிட்டு, தங்களின் பயிற்சி ஆசிரியருடன் போய் பத்துக் குண்டுகளையும் எறிந்து பயிற்சி செய்தார்கள். நாலு குண்டுகள் வெடிக்கவில்லை.

எறிந்து வெடிக்காத குண்டுகளை எப்படிக் கையாளவேண்டும் என்ற பயிற்சி அப்போது இவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. எனவே பயிற்சி ஆசிரியர், இருவரையும் அருகில் போகவிடாமல் தடுத்துவிட்டு, அந்த இடத்தை அபாயமானது என அடையாளப் படுத்தி பலகை நட்டுவிட்டு, இவர்களைப் போகுமாறு அனுப்பிவிட்டார்.

பயிற்சியாசிரியர் அந்த இடத்திலேயே ஏதோ வேலையில் மூழ்கிப் போனார். தாங்கள் எறிந்த குண்டுகள் ஏன் வெடிக்கவில்லை என்று மண்டையைக் குடைந்துபார்த்து அலுத்துப்பேன மயூரியும் வஞ்சியும், குண்டுகளைச் சோதித்துப் பார்க்கும் யோசனையுடன் இன்னுமொரு போராளியையும் அழைத்துக்கொண்டு, பயிற்சியாளரின் கண்ணில்படாமல் பற்றைக்குள் மறைந்து மறைந்து குண்டுகள்



**வீரவேங்கை வஞ்சி**
**விஜயகலா கணபதிப்பிள்ளை**
**வாகரை - வாழைச்சேனை**
**பிறப்பு: 1976-01-01**
**வீரச்சாவு: 1993-11-11**

விழுந்த இடத்தை அண்மித்தவர்கள், ஒரு தடியால் குண்டைத் தட்டிவிட்டு ஓடிவந்து நிலை எடுத்தார்கள்.

திடீரென்று குண்டு வெடித்ததில் திகைத்துப் போன பயிற்சியாசிரியர் திரும்பிப் பார்க்க, பற்றைக்குள் படுத்தவாறு மூன்று சோடிக் கண்கள் திருதிருவென முழுசிக் கொண்டிருந்தன.

“ஏன்டாப்பா இந்த வேலை செய்தியள்?” என்று கேட்க,

“என்ன நடக்கும் எண்டு பார்த்தனாங்களக்கே” என்று பதில் வந்தது.

எதையுமே உடனேயே தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இவர்களிடம் எப்போதுமே மிகுந்து காணப்பட்டது.

தங்களிடம் குண்டுகள் மட்டுமே இருப்பதை நினைத்து இடையிடையில் கவலைப்படுவார்கள்.

“சண்டைக்குப் போகேக்க குண்டுதானே தருவியள்! எங்களுக்கு அருள் 89 தாங்கோ” என்பார்கள்.

சின்னன்கள் விருப்பத்தைக் கெடுக்கக்கூடாது என்று அருள் 89களைக் கொடுத்தால், பயிற்சித் தளத்துக்குப் போய் அவற்றை ஏவி, வெடிக்கச் செய்துவிட்டு துள்ளிக் குதிப்பார்கள்.

சண்டைக்கான பயிற்சி காலை ஐந்து மணிக்கு ஆரம்பித்தால் நள்ளிரவு கடந்து மறுநாள் அதிகாலை ஒரு மணி அல்லது ஒன்றரை மணிவரையில் நடக்கும். அது முடிந்து தளத்துக்குத் திரும்பி வந்து படுக்க அதிகாலை நான்கு மணியாகிவிடும். படுத்துவிட்டு ஐந்து மணிக்கு விழுந்தடித்து எழும்பி, பல்லை விளக்காமலேயே மைதானத்துக்குப் போகும் வழியிலுள்ள அருவியில் முகத்தைக் கழுவிக் கொண்டு ஓடிப்போகும் வழியிலேயே தலையை கைகளால் கிளறிச் சீர்ப்படுத்திக்கொண்டு, மைதானத்துக்குப் போய்ச் சேர்வார்கள். இவ்வளவு வேலைகளும் கண்கள் மூடிய நிலையிலேயே நடைபெறும். அவ்வளவு நித்திரை.

**சிந்திடும் குருதித் துளிகளில் எங்கள் தேசம் தெரிகிறது.**
**சந்ததிக் காகச் செத்திடும் வாழ்வே சரித்திரம் ஆகிறது.**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திடீரென்று நெற்றி வலிக்கும். திடுக்கிட்டு கண்களை விழித்துப் பார்த்தால் மைதானத்துக்குப் போகும் ஒற்றையடிப்பாதையிலிருந்து விலகி, காட்டுமரமொன்றுடன் மோதியிருப்பது தெரியும். நெற்றியைத் தடவியவாறே மீண்டும் ஒற்றையடிப் பாதையால் ஓட்டம்.

ஓரளவு வெட்டையான இடங்களில் எழும்பி ஓடுவதற்கு அனுமதியில்லை. ஊர்ந்துதான் போகவேண்டும். காடுகள் என்பதால் இரவு நேரங்களில் மாடுகள் ஓரிடத்தில் கூட்டம் கூட்டமாக தங்கியிருந்துவிட்டுக் காலையில் போகும். அந்த இடம் ஒரே சாணமாக இருக்கும். சும்மாவே முழங்காலளவு சேறும், அதற்கு மேல் அரையடி உயரம் வரை தண்ணீரும் நிற்கும். அதற்குள் மாட்டுச் சாணமும் சேர்ந்தால், நிலைமையைச் சொல்லத் தேவையில்லை.

அந்த அழகான பாதையால் தான் எங்கள் படையணி ஊர்ந்தவாறு செல்லும். நடக்கின்ற போதே நித்திரை செய்யக்கூடிய வல்லமை கொண்டவர்கள் ஊர்ந்துபோகத் தொடங்கினால்....

பின்னால் வந்த அணியைக் காணவில்லையே என்று திரும்பிப் பார்த்தால் எல்லோரும் தூங்கி வழிந்துகொண்டிருப்பார்கள். அந்தச் சேற்றுக்குள் வஞ்சியையும் மயூரியையும் கைகளை விட்டுத் தேடினால்தான் கண்டுபிடிக்கலாம். எல்லாரையும் தட்டிவிட்டு, "என்ன பிள்ளையள், நித்திரையோ?" என்று கேட்டால்,

"சீ நாங்கள் நல்ல முழிப்பு. ஆர் சொன்னது நித்திரையெண்டு" என்றவாறு ஊர்ந்துபோவார்கள்.

எழும்பி நடக்கின்ற வேளைகளில் பார்த்தால், விண்வெளியில் நடமாடுவது போல சமநிலை இல்லாமல் ஆடி ஆடிப் போவார்கள்.

பெரும்பாலான போராளிகள் வயதில் இளையவர்கள். வஞ்சி, மயூரி போல மிகச் சின்னவர்களும் இருக்கிறார்கள். அம்மா அப்பாவுடன் செல்லப் பிள்ளைகளாக துள்ளிக் குதித்துத் திரிய வேண்டிய பருவத்தில், சூரியக் கதிர்கள் கூட ஊடுருவச்சிரமப்படும் அடர்ந்த காட்டுக்குள், நாட்கணக்காக குளிக்காமல், ஒழுங்காகச் சாப்பிட நேரமில்லாமல், நித்திரையில்லாமல் தங்களை வருத்தி ஒவ்வொரு போராளியும் பயிற்சி எடுப்பதைப் பார்க்க நெஞ்சுக்குள் ஏதோ செய்யும்.

ஆனால்.... தமிழன் வலை வீசி மீன்பிடித்த நாகதேவன்துறையில்,



**2ம் லெப். மயூரி**
தபோதினி சிதம்பரநாதன்
டச் பாலம் - கல்லடி, மட்டக்களப்பு
பிறப்பு: 1976-03-30
வீரச்சாவு: 1993-11-11

தமிழன் வேளாண்மை செய்த பூநகரியில், ஒரு அந்நிய மொழி பேசுகின்ற இராணுவம் ஆளுவதை நினைத்தால்.....

"விடக்கூடாது" என்று வெறி வரும்.

"அக்கே பசிக்குதக்கே"

என்று வஞ்சியும், மயூரியும் முன்னால் வந்து இருப்பார்கள். சட்டியில் இருக்கும் குழைத்த சோற்றை உருட்டி கையிலெடுத்து நிமிர்ந்து பார்த்தால் இருவரும் நித்திரை தூங்கிப் போயிருப்பார்கள். மெல்லமாக வாயைத் திறந்து ஊட்டிவிட்டால், வாய்க்குள் சோற்றை வைத்தபடியே உறங்குவார்கள்.

"அம்மன், வாய்க்குள்ள இருக்கின்ற சோத்தை விழுங்கம்மா"

என்று சொல்லிச் சொல்லி, அவர்களைத் தட்டித்தட்டி, ஒவ்வொரு சோற்று உருண்டையாக ஊட்டி அவர்களைச் சாப்பிட வைக்கும்போது.... எங்கள் மனங்களில் எழும் வேதனையையும் விஞ்சி... 'இந்தத் துன்பம் அடுத்த தலைமுறைக்கு வரவிடக்கூடாது. எங்களோடேயே எல்லாம் முடியட்டும்' என்ற எண்ணம் வலுப்பெறும்.

ஒருநாள் அதிகாலை 'மாதிரிச் சண்டை' செய்து பார்க்கப்பட்டது. இரவு ஒரு மணிக்குத் தொடங்கிய சண்டை அதிகாலையில் நிறுத்தப்பட்டு, இராணுவத் தளத்தின் மாதிரியைச் சூழ போராளிகள் நிலையெடுத்துப் படுத்திருந்தனர். அணிகளின் பிரதான பொறுப்பாளர்கள் எல்லா நிலைகளுக்கும் போய் நிலைகள் சரியா என்பதைச் சோதித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஓரிடத்தில் எல்லோரும் அப்படியே நின்றுவிட்டனர். அவசர அவசரமாக கைகளால் கிண்டி அமைக்கப்பட்ட நிலை ஒன்றில் ஒரு சின்ன உருவம் தன்னையும் தன் ஆயுதத்தையும் குழைகளால் உருமறைத்த நிலையில் நல்ல நித்திரை. உடையும் ஈரம். நிலமும் ஈரம். ஆனால் நல்ல நித்திரை. யாரென்று பார்த்தால் மயூரி!

"மயூரி, எழும்பு. முன்னுக்கு ஆமியின்ர இடம். நீ நித்திரை கொள்ளுறாய், என்ன?"

என்று ஏச, எழும்பி பொறுப்பாளரின் முகத்தைப் பார்த்துவிட்டு, பேசாமல் நின்றாள். பொறுப்பாளர் போய்விட்டார். அவர் திரும்பி அடுத்ததரம் நிலைகளைச் சோதித்துக்கொண்டு வரும்போது பார்த்தால், மயூரி நல்ல நித்திரையில் இருந்தாள்.

"மயூரி, எழும்பு" அதட்டினார்.

கண்களைக் கசக்கியவாறே எழும்பிய மயூரி, பொறுப்பாளரின் முகத்தை பரிதாபமாகப் பார்த்து,

"அக்கோய், பேசாதீங்கக்கா.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


எனக்கு இப்படி இரவில நித்திரை முழிச்செல்லாம் பழக்கமில்லை யக்கா, எனக்கு நித்திரை நித்தி ரையா வருது'' என்று கண்ணீர் வடிய கெஞ்சினாள்.

பொறுப்பாளருக்கோ இந்த வயதில், மழைக்காலத்தில், வீட் டிலே தான் குளிராமல் போர்த்துக் கொண்டு படுத்திருந்தது நினை வுக்கு வர, ஒரு நிமிடம் கலங்கிப் போனார்.

"சரி. இனி அலேட்டாய் இரு" என்று சொல்லிவிட்டுப் போய்விட் டார்.

பயிற்சி நடைபெறும் நேரங்க ளில் சுறுசுறுப்பாக ஓடித்திரியும் மயூரிக்கும் வஞ்சிக்கும், வகுப்பு நேரத்தை நினைத்தாலே நித்திரை வரும். பயிற்சி ஆசிரியர் முன்னுக்கு நின்று தாக்குதல்களைப் பற்றியோ, ஆயுதங்களைப் பற்றியோ விளக்கிக் கொண்டிருப்பார். அமர்ந்திருந்து கேட்பவர்கள் எல்லோரும் மிகவும் சிரமப்பட்டு விழித்துக்கொண்டி ருப்பார்கள்.

வஞ்சி ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருப்பாள். கருமுகில் ஒன் றைக் கண்டதும் பக்கத்திலிருப்ப வளைச் சுரண்டி முகிலைக் காட்டு வாள். அடுத்த முகிலைக் கண்ட தும் மீண்டும் சுரண்டி,

"ரெண்டு முகிலும் முட்டினவு டனே மழை பெய்யும் பார்'' என்பாள்.

ஒரு துளி மழை விழுந்தாலும் போதும். தங்களுடைய அறைக்குப் போவதற்கு ஆயத்தமாகிவிடுவாள். மழை பெய்து, பயிற்சியாசிரியர் எல்லோரையும் போகுமாறு சொல்லி வாய்மூட முன்னரே வஞ்சியும், மயூரியும் அறைக்குள் ஓடிப்போய் படுத்துவிடுவார்கள்.

காட்டுக்குள் ஒருமுறை நாங்கள் புதிய கொட்டிலொன்றை அமைத் துக்கொண்டிருந்தோம். நாங்கள் வேலைசெய்துகொண்டிருக்கும் போது ஒரு பாம்பு வர, அதை அடித்து வாலில் கட்டி, கொட்டில் வாசலில் தொங்க விட்டு விட்டு, வேலையைச் செய்துகொண்டிருந் தோம். எங்களைத் தேடி வஞ்சி யும் மயூரியும் வந்துவிட்டார்கள். வாசலில் தொங்கிய பாம்பைப் பார்த்துவிட்டு,

"ஏன் பாம்பைத் தொங்கவிட்டி ருக்கிறீங்கக்கா?'' என்றார்கள். அதற்கு நாங்கள்,

"இந்தக் கொட்டில் கட்டி முடிய இதுக்குள்ள வச்சுச் சமைக்கப் போறம்'' என்று புளுக ஆரம்பித் தோம்.

"என்னண்டக்கா சமைக்கிறது?"

"தலைப் பக்கமாகவும் வால்ப் பக்கமாகவும் ஒரு அங்குலம் வெட்டியெறிஞ்சு போட்டு, சின்னச் சின்னத் துண்டா வெட்டிப்


பூநகரி இராணுவ முகாம் தாக்குதல் ஆயத்தத்தின் போது

பொரிச்சுக் குழம்பு வைக்கப் போறம். ஏன் நீங்க ஒருநாளும் சாப்பிடேல்லையோ?"

"மட்டக்களப்புக் காட்டிலையும் பாம்பு இருக்குத்தானக்கா. ஆனா நாங்க பாம்புக்கறி சாப்பிடுறதில் லைக்கா. இஞ்ச நீங்க சாப்பிடு றனீங்க எண்டு சொல்லுறவங்கள். ஒரு பாம்பு என்னண்டு எல்லோ ருக்கும் கறி வைக்கக் காணும்?"

"இண்டைக்கு புதுக் கொட்டி லில சமைக்க வேணுமெண்டுதான் பாம்பைப் பிடிச்சனாங்கள். எல் லோருக்கும் குடுக்கக் காணாது தான். சும்மா எல்லோரும் ரேஸ்ற் பண்ணிப் பாப்பம்"

இருவரும் உண்மையிலேயே நம்பிவிட்டார்கள். பேசாமல் பாம் பையே பார்த்துக் கொண்டிருந்தார் கள். எங்களுக்குச் சிரிப்பு வந்து விட்டது. சிரித்துவிட்டோம். இருவ ரும் வியப்புடன் எம்மைப் பார்த் தார்கள்.

"நாங்கள் சும்மா சொன்னனாங் கள். பாம்புக் கறி சமைக்கேல்ல. பாம்பை வெட்டி உறுப்புக்களைப் பார்க்கிறதுக்குத்தான் வச்சிருக் கிறம்"

என்றோம். பாம்பை நெடுக்கு வெட்டாகக் கீறிப் பிளந்து, இதயம் குடல் போன்றவற்றைக் காட்டிய போது ஆர்வத்துடன் பார்த்தார் கள்.

"அதென்னக்கா, இதென்னக்கா" என்று ஆர்வத்துடன் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள். பாம்பைப் பற்றிய புதிய விடயங்களை அறிந்து கொண்டதில் இருவருக்குமே மகிழ்ச்சி.

ஒரு நாள் இருவரிடமும்,

"உங்களைச் சண்டைக்கு விடாட்டி என்ன செய்வீங்க?'' என்று கேட்டோம். உடனேயே இருவரும் வரிந்து கட்டிக்கொண்டு,

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

"நாங்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்ததே அண்ணையப் பாத்திட்டு, சண்டைக்குப் போயிட்டு திரும்பிப் போறதுக்குத்தான். அதெப்படிச் சண்டைக்கு விடாமலிருக்கலாம்? எங்களை விட்டிட்டுப் போனாலும் நாக ஒருத்தருக்கும் தெரியாம, வாகனம் ஒண்டில ஏறிச் சண்டை நடக்கிற இடத்துக்கு வந்திடுவம்." என்றார்கள்.

சண்டைக்குப் போவதற்கு என்ன தடை வந்தாலும் தாண்டத் தயாராக இருந்தார்கள். சண்டை விடயம் தவிர்ந்த ஏனைய எல்லாவற்றிலும் குழந்தைகளாகவே நடந்துகொள்வார்கள்.

காட்டிலிருக்கும் போது சிற்றுண்டிகள் வந்தால் முதலில் எங்களுக்கு வந்து, பின்னர்தான் ஆண் போராளிகளுக்குப் போகும். வாகனத்தில் ஏறி எமக்குரியதை இறக்கிவிட்டு, வாகனத்தின் ஓட்டுனருக்குத் தெரியாமல் ஆண் போராளிகளுக்குரிய பொதிகளில் ஓட்டை வைத்து எடுத்து, காற்சட்டைப் பைக்குள் வைத்துக்கொண்டு இறங்கிவிடுவார்கள். இரண்டு பேருமே பிரபலமற்ற, ஆனால் மிகப்பெரிய சிற்றுண்டித் திருடர்கள்.

நல்லூர் கோயில் திருவிழாவுக்குக் கூட்டிப் போயிருந்தோம். இரண்டு, இரண்டு ஐஸ்கிறீம் குடித்துவிட்டு, ஊதுகுழல் வாங்கித் தருமாறு அடம்பிடித்து, வாங்கி ஊதுகுழலை ஊதியவாறே நல்லூரைச் சுற்றிப் பார்த்தார்கள். இந்தமாதிரி எங்கேயாவது கூட்டிப் போனால் இருவருக்கும் உற்சாகம் வந்துவிடும். சின்னவர்கள்தானே?

ஒருமுறை மக்கள் குடியிருப்புப் பகுதியில் தங்கிநின்ற போது பக்கத்துக் கோயிலொன்றில் திருவிழா நடந்தது. எங்களுடைய இடத்தில் நின்று பார்த்தால், சிற்றுண்டிக் கடைகள் தெரியும். விடுவார்களா வஞ்சியும் மயூரியும்?

"அக்கோய், கலர் கலரா நிறைய முட்டாசிக் கடையக்கா. எங்களைக் கூட்டிக்கொண்டு போகமாட்டீங்களாக்கா?"

என்று கேட்டதால் இருவரையும் கூட்டிப் போனோம். வாய் நிறைய, காற்சட்டைப் பை நிறைய இனிப்புகளுடன் திரும்பினார்கள்.

சண்டைக்குப் போகமுதல் எல்லோருக்கும் முடிவெட்டி, முழுகி, அவரவரின் ஆயுதங்களுடன் படம் பிடிப்பது வழக்கம். வஞ்சியும் மயூரியும் முடிவெட்டிவிட்டு எங்களிடம் வந்து,

"வடிவா இருக்கிறோமாக்கா?" என்று கேட்டு விட்டு,

தங்களுடைய குண்டுகளையெல்லாம் கட்டிக்கொண்டு, ஒரு மணற் குவியலுக்கு மேல் ஏறி நின்று கம்பீரமாய் போஸ் குடுத்துவிட்டு,

"நீங்களும் எங்களோட நிண்டு எடுங்கக்கா"

என்று தங்கள் பொறுப்பாளர்களிடம் கேட்டு படம் எடுத்தார்கள். பொறுப்பாளர் அவர்களுடன் நின்று படம் எடுத்ததில் ஒரே சந்தோசம்தான்.

சண்டைக்குரிய சகல வேலைகளும் முடிவடைந்துவிட்டன. இனி அடிக்கவேண்டியதுதான். ஒவ்வொரு அணிக்கும் ஒவ்வொரு இலக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

மயூரி, வஞ்சிக்குரிய பாதையில் வழிகாட்டியுடன் இவர்கள் முன்னே போய் முட்கம்பி வேலியைத் தகர்த்தவுடன் இந்த இடைவெளியூடாக அணிகள் உட்சென்று தாக்குவதுதான் ஏற்பாடு.

எதிரியின் அரணுக்கு முன்னால், முள்வேலியையும் மேவி வெள்ளம் நின்றது. தண்ணீர் சலசலக்காமல் அமைதியாக முன்னேறிய வஞ்சியும் மயூரியும் மிகுந்த உற்சாகத்துடன் இருந்தார்கள். ஏதேதோ கனவுகளெல்லாம் அவர்களுக்கு. சண்டை முடிந்து வந்து அது செய்யவேண்டும், இது செய்ய வேண்டும் என்றெல்லாம்.......

எதிரியின் காவலரணுக்கு முன்புள்ள முள்வேலிகளை நெருங்கிய சமயத்தில், தற்செயலாக எதிரி ஏவிய டொங்கான் எறிகணை ஒன்று இவர்கள் அருகில் வந்து விழ.....

இரண்டு குஞ்சுகளும் காணாமற் போனார்கள்.

இரண்டும் கடைசி நேரத்தில் புகைப்படக் கருவிக்குப் 'போஸ்' கொடுத்த அழகில் மயங்கியதும்.....

எதையும் சுறுசுறுப்பாகவும் ஆளுமையுடனும் செய்வதைப் பார்த்து, இந்தச் சண்டை முடிய இருவருக்கும் நல்ல பொறுப்புக்களைக் கொடுக்க வேண்டும் என்று நினைத்திருந்ததும்.....

இன்னும் எங்களுக்கு மறக்கவில்லை.

அந்தப் பிஞ்சுகளைச் சுற்றி நாங்கள் கட்டியெழுப்பியிருந்த கனவுக்கோட்டையெல்லாம் பூநகரியில் ஓடிய இரத்த ஆறுடன் கரைந்துபோனது.

சுவரில் இருந்து சிரித்துக்கொண்டேயிருக்கின்ற இரண்டு சின்னன்களையும் பார்க்கும் போதெல்லாம் "எந்தத் துன்பத்தையும் நாங்கள் அடுத்த தலைமுறை வரை தொடர விடக்கூடாது. எல்லாமே எங்களோடு முடியட்டும்"

என்ற எங்களின் எண்ணம் இன்னும் வலுப்பெறுகின்றது.

**- மலைமகள்**

**நீண்டகாலமாக, வளர்ச்சி கண்ட நாடுகளில் தொடர்ச்சியாக நடந்துவந்த உரிமைப் போராட்டங்களின் பலாபலனாக பெண்ணினம் குறிப்பிடத்தக்க சில வெற்றிகளை மட்டும் ஈட்டிக்கொள்ள முடிந்தது. அடிப்படையான மனித உரிமைகளையும் அரசியல் சுதந்திரங்களையும் பெண்கள் வென்றெடுக்க முடிந்தது. கல்வி வாய்ப்பும் தொழில் வாய்ப்பும் பெற்றுக்கொள்ள முடிந்தது. எனினும் இந்த நாடுகளில் பெண்ணின் பிரச்சினைகள் தீர்ந்தபாடில்லை.**

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**வே. பிரபாகரன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம் 

# கேள்வி ★ பதில்

தனேந்திரன் - பாரிஸ்

**தமிழீழத்திலிருந்து வரும் ஈழ நாதம் பத்திரிகையில் லக்ஸ்மன் கதிர்காமரை நன்றியுள்ள பிராணி என்று குறிப்பிட்டிருந்தது ஏன்?**

உலகமெல்லாம் பஞ்சு போல பறந்துகொண்டிருப்பவர்தான் லக்ஸ்மன் கதிர்காமர். அமைச்சர் பதவி என்ற எலும்புத் துண்டுக்கான விசுவாசமும், அதனைப் பாதுகாப்பதற்கான ஆவேசமும் என்று நினைக்கிறேன்.

இளவழதி - பாரிஸ்

**காத்தான்குடியில் முஸ்லீம் மக்களை விடுதலைப் புலிகள் வெளியேறச் சொன்னதாக பொய்யான பிரச்சாரத்தை சிறீலங்கா அரசு பரப்பி வருவதிலுள்ள உள் நோக்கம் என்ன?**

"Divide and Rule" - பிரித்து மோதவிட்டு ஆளுதல் என்ற பழைய எஜமான் கற்பித்த பாடம்தான்.

சுரேஸ் - ஸ்ருகார்ட்

**சிறீலங்கா அரசு பாரிய யுத்த முன்னெடுப்புக்களை எடுத்து வருகிறது. மிகப் பெரிய கொடிய யுத்தத்தை கட்டவிழ்த்து விடும் என்ற அச்சம் ஏற்படுகிறது.**

தங்கள் அச்சம் சரியானதுதான். அச்சத்தை தற்காப்பு அரணாக மாற்றுதல் வேண்டும். முன்னைய அரசாங்கங்கள் முயன்று தோல்வி கண்டதையே தற்போதைய அரசும் செய்கிறது. இன அழிப்பு யுத்தத்தை எதிர்கொள்ள எம்மைப் பலப்படுத்தி மக்களைப் பாதுகாத்து வெல்வதைத் தவிர வேறு வழியில்லை.

மரியதாஸ் - ஜேர்மனி

**வெளிநாடுகளில் அகதிகளாக வாழும் நம் இனத்தோரில் சிலர் தேசவிடுதலைப் போர் தமக்குச் சம்பந்தம் இல்லாதது என்று ஒதுங்கி வாழ்கின்றனர். இவர்களுக்கு இவர்களது இன்றைய உண்மையான நிலை பற்றி என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

அரசியல் அகதி என்பதே அவர்களுக்கு உரிய அந்தஸ்து. அப்படியிருக்கும் போது தமது நிரந்தரமான பாதுகாப்புக்கும் வாழ்வுக்கும் எதிர்கால வளர்ச்சிக்குமான தேசவிடுதலையில், அரசியல் கட்டமைப்பில் பங்குபற்றாதவன் போக்கிரி மட்டுமல்ல; (தன் தலையிலே மண்ணை வாரி இறைக்கும்) தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளும் ஏமாளியும் கூட.

யஸ்லீன் - முல்ஹவுஸ், பிரான்ஸ்.

**கடந்த வருடம் தமிழீழம் சென்று வந்த நண்பன் தமிழீழ வைப்பகத்தில் தன் கடந்தகால சேமிப்பு முழுவதையும் வைப்பிலிட்டு இங்கு வந்தான். இன்னும் ஒரு வருடம் உழைத்து தமிழீழ வைப்பகத்தில் இட்டுவிட்டு தான் நிரந்தரமாகவே யாழ்ப்பாணம் போகப் போவதாகச் சொன்னான். இந்த நிலைப்பாட்டை எடுக்க இது சரியான நேரம் தானா?**

தமிழீழ வங்கியில் தனது சேமிப்பை வைப்பிலிடுதல் என்பது பல்வேறு காரணங்களுக்காக வரவேற்கப்படவேண்டிய விடயம். ஏராளமானோர் தாயகத்திற்குத் திரும்புவது பற்றியே எண்ணமில்லாது இருக்கும் போது, ஒரு வருடம் கழித்து நிரந்தரமாகவே தாயகம் செல்லப்போவதாகக் கூறுவதும் வரவேற்கப்படவேண்டியதே.

தோமஸ் - லண்டன்

**இன்றைய போர்ச்சூழலிலும் எமது தேசத்தின் நிர்மாணப் பணிகளைப் பார்க்கும் போது எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில் எமது தேசம் விடுதலை அடைவது மட்டுமல்ல, தெற்காசியாவில் ஒரு தலைசிறந்த நாடாக விளங்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இந்தியப் பார்ப்பனியம் எமது உயர்வில் வெறுப்புறுவது இயல்பு. ஆனால், தமிழ்நாட்டு அரசியல்வாதிகளில் சிலரும் தம்மினத்துக் எதிராக விஷம் கக்குவதேன்?**

தேசியத் தலைவரின் வழிகாட்டலில் சிறந்த நாடாக தமிழீழம் உருவாகும் என்பதில் ஐயமில்லை. இந்திய ஒருமைப்பாட்டுக்கு, தமிழீழ நாடு தடையென்று கருதும் பார்ப்பனிய சக்திகள் திட்டமிட்ட ரீதியில் இதற்கு எதிராகச் செயற்படுதலைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், சுயநல நோக்கத்திற்காக, குறுகிய அரசியல் இலாபத்திற்காக சில தமிழக அரசியல்வாதிகள் விஷம் கக்குகிறார்கள். இச்சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் வளர்ச்சியை நோக்கிய வரலாற்று ஓட்டத்தில் அடையாளமில்லாது போய்விடுவார்கள்.

**மக்களிடத்தில் ஏற்படும் போராட்டம் தொடர்பான ஐயங்களைப் போக்கும் பொருட்டே இக் கேள்வி பதில் பகுதியை ஆரம்பித்திருக்கிறோம். இந்தப் பகுதிக்கான கேள்விகளை ஒவ்வொரு மாதமும் பத்தாம் திகதிக்கு முன்னதாக கிடைக்கும் படி அனுப்பி வையுங்கள்.**

**எரிமலைக்கு கட்டுரை, சிறுகதை, கவிதை, துணுக்குகள் ஆகியவற்றை எழுதி அனுப்ப விரும்புபவர்கள், எரிமலையில் காணும் முகவரிக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள். மேலும், எரிமலை குறித்த உங்கள் அபிப்பிராயங்கள், விமர்சனங்களையும் எமக்கு அவ்வப்போது அறியத் தாருங்கள்.**

**- ஆ. ர்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வெண்மையின் வருகை

**செ. போ. சிவனேசு**

மப்பு, மந்தாரம் சூழ்ந்த நிலை. வீசுகிற மென் காற்றிலே இதமான குளுமை இல்லையே! நடுநிலப் பகுதிதான். ஏனோ, கடலோரத்தை ஒத்த கசகசத்த வெப்பம்! இதற்குள் தெற்கு வானமோ அதீத கட்டி இருட்டாய்; கன்னங்கரிய, பூதாகார அண்டாவால் கவிழ்த்து மூடியதாய். இருந்துகொண்டிருப்பது படலையடியில். தென் திசையே நேரெதிர்ப் பார்வையில். அங்கிருந்தே தோன்றத் தொடங்கியது - புள்ளியாய்; வெள்ளையாய். என்னதானோ?.... புரியவேயில்லை! குழப்பம்! மெல்ல மெல்ல மிக மிக மெல்ல - இங்கு நோக்கியே வருகிறது.

எட, ஏதோ சிறகு போல தெரியுது! ...... உதிர்ந்திருக்குமோ ..... ஏதாவது பறந்துகொண்டிருந்த வெள்ளைப் பறவையில இருந்து? இதென்ன, இப்ப கொஞ்சம் பெரிசாத் தெரியுது; சிறகடிக்கிற மாதிரியும் இருக்குது! கொக்கோ? கொக்கு _ கொக்கு மாதிரித்தான்.

திடீரென்று சில குரல்கள். மிக மிக அருகில்; உடலை உரசி நிற்பதாய். அக்கம் பக்கம் பார்த்தால் யாருமே இல்லை. கண்ணெட்டும் தூரங்களும் துழாவியாயிற்று. ஆள் நடமாட்ட அறிகுறி துளியுமில்லை.

இதென்னடா புதுமையாய் கிடக்கு!

குரல்கள்!... குரல்கள்.... மிக அருகிருந்து பேசுவதாய்க் குரல்கள்!

ஒரு குரல்: "அந்தா, வெள்ளைப் புறா வருகுது!.... அமைதி!.... இனி மேல் அமைதி! .... தீர்வு!...... இனி மேல் தீர்வு!....."

"ஓம்.... ஓம்..... வெள்ளைப் புறாதான்!.... அது வெள்ளைப் புறாவேதான்! இனி அவலங்கள் இல்லை! எங்கட துன்பங்கள் தீரப் போகுது!" - ஏனையவை.

துள்ளி ஆடுவது போல் தோன்றியது. யாரையுமோ கண்ணாற் புலனுணர இயலவில்லை. குரல்கள் குதூகலமாய் ஆரவாரித்தே இருந்தன. ஒப்பவில்லை. ஒப்புக்கொள்ள உளம் உடன்படவில்லை.

என்ன இதுகள்? விசர்க் கூட்டங்கள்! ஏன் இப்படி அப்பாவிகளாய் இருக்குதுகள்?

குனிந்து நிமிரவேண்டியிருந்தது. 'ஆ...ஆ' வெனப் பிளந்து மூடியது தான் வாய். வார்த்தைகளோ என்றால் வரவேயில்லை. திண்ணமாய்த் தொண்டைக்குட் பஞ்சடைத்தாற் போலிருந்தது. திணறல்! யாரையுமே கண்ணிற் படவில்லை. கத்துவதில் முயற்சி.

திடீரென்று ஏதோ கனதியாய்



கத்த வேண்டும் போலிருந்தது. இயலவில்லை - 'இல்ல, நம்பாதேங்கோ! எதுக்கும் கிட்ட வரட்டும்! அதுக்குப் பிறகுதான் உறுதி!' - எழுந்தால் இயலவில்லை. திக்குமுக்காடி எழுகிற முயற்சி. இரண்டு கைகளும் உயர்ந்தன. குனிந்து

விழுந்தது. அருகே - உடலருகே நிலத்தில். 'மளா'ரெனப் பேயொலி வெடித்தது இமைப்புக்குள்.

ஐயோ! ..... செத்தன்! செத்துப் போனன்! ..... செத்துப் போ..... சாகேல்லையே?..... இல்ல.... சாகேல்ல!....

www.tamileelamarchive.com

கிடந்தது வீழ்ந்து தான். அவ்விதமாய்த் தலை மட்டும் நிமிர்ந்தது. சுற்றும் முற்றும் பார்க்க அதிர்ச்சி. மனிதர்கள் இல்லை முன்போலவே. குரல்களுமோ எல்லாமாய் அற்று விட்டன. ஆனாலோ....

ஐயோ! இதென்ன சதை சதையாக் குவியல்.... துண்டு தூளா மனிசர்...... எல்லா இடமும்!..... இஞ்ச..... தெருவெல்லாம் இரத்தம்!..... பெருமழை விட்ட மாதிரி பெருக்கா ஓடுது!.....

துணுக்குற்றது. சடுதியாய் இமைகள் பிரிந்தன. கரிய துணியாற் கண்களைக் கட்டிவிட்டதென இருட்டு.

ஆ..... நான்..... நான்..... எங்க இருக்கிறன்?......

தன்னியல்பின்றிக் கைகள் துழாவின. தலைமாட்டில் ஏதோ தட்டுப்பட்டது. தீப்பெட்டி. தட்டினால் விளக்குத் தெரிந்தது. கொளுத்தியாயிற்று. தலையின் அமுக்குதலில் இருந்து தலையணை தப்பிக் கிடந்தது.

திகைப்பு சற்று நொடிகளைக் கரைத்தது. ஆசுவாசம். ஏதோ விதம் மேசைக்குப் பார்வை போனது. நாட்குறிப்பு புத்தகம் பட்டது.

## 2

கொடுத்தவன் போராளி நண்பன். "மச்சான், இந்த டயறிய ஒருக்காப் பார். வீரச்சாவடைஞ்ச போராளி ஒருவன்ரை. உனக்கு உதவும். கதை, கவிதை எழுதுறனீ."

ஏற்கனவே படித்தாயிற்று. மீண்டும் படிக்க விருப்பம் கிளர்ந்தது.

நிதானமாய் பக்கங்கள் புரண்டன.

"எதிரியின் பீரங்கி நிரந்தரமாய் குளிர்கிறவரை எங்களது கண்களும் நெஞ்சங்களும் அனலாகவே இருக்கும்; எங்கள் துப்பாக்கிகள் போல." இவ்வித சிந்தனைகள்.

அதிகம் என்றில்லை. அங்கொன்று இங்கொன்று.

# சந்திரிகா பின்னும் சதி வலைகள்

தென் தமிழீழத்தில் பலத்த இராணுவத் தோல்வியை அடைந்து வரும் சிறிலங்கா அரசும் அதன் இராணுவமும் பல சதிகாரச் செயல்களில் ஈடுபட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத் தலைமைப் பீடம் காட்டுப் புறங்களில் அமைக்கப்பட்டுள்ள 20 இராணுவ முகாம்களையும் பல பொலிஸ் நிலையங்களையும் தலைமைப் பீடம் மூடிவிட தீர்மானித்து உள்ளது.

மூன்றாம் ஈழப்போர் தொடங்கிய சில காலத்துள்ளேயே 500-க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் எந்த நேரமும் பகலிலும் இரவிலும் விடுதலைப் புலிகள் தாக்குவார்கள் எனற அச்சநிலை அவர்களை உலுப்பி எடுக்கிறது.

இந்த நிலையில் பரவலாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களை எப்படிப் பாதுகாப்பது என்று பாதுகாப்பு அமைச்சுக்கு ஏற்பட்டிருக்கும் சிக்கலைத் தீர்த்துக்கொள்ள விடுதலைப் புலிகளால் தாக்கப்படக்கூடிய முகாம்களை மூடி ஏனைய பாரிய முகாம்களை விஸ்தரிக்க இராணுவ தலைமைப் பீடம் முடிவெடுத்துள்ளது. தரவைக்குள முகாமும் வேறு பல முகாம்களும் தாக்கப்பட்டதன் எதிரோலியாகவே இவை நடைபெறுகின்றன. இவ்வாறான தோல்வி நிலையில் சந்திரிகா அரசு கிழக்கு மாகாணத்தில் தமிழ்மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் இடையே இனக்கலவரங்களைத் தோற்றுவிக்க சிலசக்திகள் மூலம் முயன்று வருகிறது.

இத்தகைய கலவரங்களை தோற்றுவித்து தமிழர்களை மேலும் பலவீனப்படுத்துவது அவர்களின் திட்டமாக இருக்கிறது.

தென் தமிழீழத்தில் விடுதலைப் புலிகள் வலுப்பெற்று வருவதை முறித்துக் கொட்டும் நோக்குடன் கூடிய இச்சதியின் உள் நோக்கம் குறித்து மக்கள் விழிப்பாய் இருக்க வேண்டும்.

இஸ்ரேலுடனான ராஜரீக உறவுகள் விவகாரம் தொடர்பாக முஸ்லீம் மக்கள் அரசாங்கத்தின் மீது ஆத்திரமடைந்த நிலையில் இருக்கின்றனர்.

இந்த நிலை தொடரும் பட்சத்தில் முஸ்லீம் காங்கிரஸ் உடனான உறவுகள் முறிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வேளையில் தமிழ்மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மூலம் முஸ்லீம் மக்களின் கவனத்தை திசை திருப்பி விடுவது இவர்களின் நோக்கமாகும்.

இஸ்ரேலுடனான உறவுக்ளை ஏற்படுத்துவதினால் வரும் எதிர்ப்பை தமிழ், முஸ்லீம் மக்களை மோதவிட்டு இருவரையும் பலவீனப்படுத்துவதன் மூலம் சரிக்கட்ட முனைகிறது. காத்தான்குடியிலிருந்து முஸ்லீம் மக்களை வெளியேறுமாறு விடுதலைப் புலிகள் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக வெளிவந்த செய்திகள் அமைந்திருந்தன. இது குறித்து விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில் இதனை வன்மையாக மறுத்திருக்கிறது. விடுதலைப் புலிகளை முஸ்லீம் மக்களிடமிருந்து அன்னியப்படுத்தி தமிழ் முஸ்லீம் மக்களிடையே முரண்பாட்டையும் கலவரத்தையும் தோற்றுவிக்கும் நோக்கில் இந்த விசமத்தனமான பிரச்சாரத்தை அரசாங்கமே முடுக்கிவிட்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு முஸ்லீம் மக்களும் ஆதரவு வழங்கும் நிலைமை தோன்றியிருந்தது. இந்தப் புதிய திருப்பத்தை பொறுத்துக்கொள்ள முடியாத சந்திரிகா அரசும் அதற்கு சார்பான சக்திகளும் முஸ்லீம் மக்களை விடுதலைப் புலிகளுக்கும் தமிழர்களுக்கும் எதிராகத் தூண்டிவிடும் நோக்கிலேயே இந்தப் புரட்டுச் செய்திகளை கட்டவிழ்த்து விட்டுள்ளன. அரசாங்கத்தின் இந்தக் கபட நோக்கம் குறித்து முஸ்லீம் மக்கள் மிகவும் விழிப்பாக இருந்து செயல்பட்டு வருகின்றனர். காத்தான் குடியிலிருந்து ஒரு முஸ்லீம் குடிமகனுமே வெளியேறவில்லை என்பதன் மூலம் அதனை உணர்ந்துகொள்ளலாம். அரசின் சதித் திட்டத்தின் மீது விழுந்த பேரிடியே இது. இருந்தும் சந்திரிகா அரசு இதுபோன்ற பல சதிவலைகளைத் தொடர்ந்தும் பின்னுவதில் தன் காலத்தைச் செலவிடக்கூடும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ச்சாய்..... கோடி பொன்னும் ஈடில்ல! மணி மணிக் கருத்துக்கள்!

கவிதை போல இன்னொன்று:

**"ஓயாது ஓர்நாளும் கடலலை**
**காணாது மீளாது கரை தனை**
**சாயாது மாயாது போர்ப்படை புலி**
**பாயாது மீளாது விடுதலை!"**

பெரும்பாலும் நாளாந்தக் கடமைகள் பற்றியவை. எல்லாவற்றுக்கும் மேலே ஒரே வசனம்: 'உயிருடனிருந்தேன்' - "இன்று காலை 8.00 மணி முதல் காலை 6.00 மணி வரை உயிருடனிருந்தேன்." இதன் கீழேதான் குறிப்பு: "வடமுனையின் முன்னணிக் காவலரண்கள் ஒன்றில் பணி."

இதென்ன?.... இந்த உயிருடனிருத்தலுக்கு என்ன விளக்கம்?.... ஓ..... கடமையிலிருக்கிற மனிசன் உயிர் மனிசன்..... மற்றவன் செத்த பிணம்.... அட..... என்ன அருமையான கோட்பாடு!



பக்கங்கள் ஆர்வமாய் புரண்டு போயின. படித்து முடித்ததே தெரியவில்லை. ஆழ்ந்த சிந்தனை. மெல்லக் கண்கள் சுழற்றியது. தன்வசமின்றி தலை மேசையிற் சாய்ந்தது.

## 3

வேடுவனே தான். அம்பு, வில்லு, அம்பறாத் தூணி, ஈட்டி; பறட்டைத் தலை; வெற்றுடம்பு. ஆனால் ஒன்று நீளக் காற்சட்டை போட்டிருந்தான். இராணுவத்தினரது போல். ஒரே குழப்பம்.

இதென்ன வினோதமாக இருக்கு! ஆதிகால காட்டுமிராண்டிதான். ஆனா...... எப்பிடிக் காற்சட்டை போடுவான்?.... தோலுரியோ, மரவுரியோ எல்லோ கட்டுவான்!...

சிக்கிய வெள்ளைப் புறா மிரள முழித்தது. கையிற் கிடந்து திணறியது. எதிரே ஒரு மனிதன். "வேண்டாம்!.... விட்டுவிடு!... பாவம்!...."

சிபிப் பேரரசன் போலில்லை. தலையில் முடி இருந்தது தான். தங்கம், வைரம் அல்ல, சாதாரண தலைமுடி. பளபளக்கும் பட்டாடைகள் அல்ல. சராசரிப் பொது மக்கள் உடை.

"கொல்லாதே!.... விட்டுவிடு!... உயிர்வதை பெரும்பழி!....."

வேடுவன் பல்லிளித்தான். காலில் வீழ்ந்தான் மனிதன்!

"சரி, விட்டுவிடுகிறேன். இந்தப் புறாவின் எடைக்கு ஈடாக உன் உடம்பிலிருந்து சதையை வெட்டித் தரவேண்டும்!"

மனிதன் சடுதியாய் எழுந்தான். "இதோ! உடனேயே!"

"இந்தா கத்தி!"

ஒரு தட்டில் புறா. மனிதனின் சதை மறுதட்டில். தராசோவென்றால் நேர் காட்டுவதாய் இல்லை. மீண்டும் வெட்டினான். மீளவும்!.... மீளவும்!!.... மீளவும்!!!.... அசையவே இல்லை. ஏறியே விட்டான் முழு மனிதனாக. காட்டியது நேர்.

"என்னை முழுவதாக எடுத்துக் கொள். வெள்ளைப் புறாவை விட்டுவிடு!"

இனி என்ன? பழையபடி வேடுவன் சிவனாக மாறுவான். மனிசனை வாழ்த்தி அருள் புரிவான். இந்தா மாறப்போறான்..... மாறப்போறான்.... இந்தா.... இந்தா.... இதென்னடா இது, மாறுறானில்ல? கதை எல்லோ தலைகீழா மாறுது!

இடம் வலமாய்த் தலையசைத்தான். வேகமாய் அசைத்தான். எக்காளமாய்ச் சிரித்தான். பாரிய பாறை பிளந்ததென வாய். கோரமாய்த் தெரிந்தன பற்கள். வெள்ளைப் புறாவின் கழுத்தைத் திருகினான். வாயருகே கொண்டு போனான். 'லபக்' - விழுங்கியே விட்டான். கூரிய, நீண்ட வாளைத் தூக்குகிறான்! மனிதனை நோக்கி ஓங்குகின்றான்!..... ஓங்குகின்றான்!..... ஓங்குகின்றான்!....

மளாரென்றது. தரை இடித்த இடம் தலையில் வலித்தது. நாற்காலி சாய்ந்து கிடந்தது. எரிந்து கொண்டிருந்தது இன்னமும் மேசையில் விளக்கு. அணைத்து விட்டுத்தானே படுக்கையிற் சாய்ந்தது.

## 4

தெருவெங்கும் பரபரப்பு. மகிழ்ச்சி. குதூகலம் பெருக்கெடுக்கிறது. படலைக்கு வந்தால், ஒரே மக்கள் கூட்டம். ஆளையாள் கட்டித் தளுவுகிறார்.

பருத்த தொந்தியுடன் முதியவர் மல்லாடுகிறார். தடித்த உடலம் இயன்ற வேகத்தில் ஓடுகிறது. "விடுதலை கிடைச்சிட்டுது! ....விடுதலை கிடைச்சிட்டுது!...."

இளைய பெண்கள், ஆண்கள் மிதிவண்டிகளில் பறக்கிறார்கள். எல்லா வண்டிகள், ஊர்திகளிலும் தேசியக் கொடி. கூச்சலிடுகிறார்: "தமிழீழத்தை ஐ. நா. சபை ஏற்றுக் கொண்டிட்டுது!"

சிவப்பு, மஞ்சள் உடைகளில் எல்லாக் குழந்தைகளும், மூதாட்டிகளின் கைகளிலெல்லாம் தேசியத் தலைவர் - உயர்த்திப் பிடித்து நிற்கிறார்கள் படங்களை. தாமரைகள் பூத்துக் கிடக்கின்றன. - சுருக்கம் வழுந்த பொக்கை வாய்கள். வரிப் புலிச் சீருடை வீரரின் அணிநடை; எந்தத் தெருக்களில் புகுந்தாலும் ஒலிபெருக்கிகள் தாயக எழுச்சிப் பாடல்கள், பந்தல்கள். அலங்கார வளைவுகள். தெருக்களில் இருபுறமும் மக்களின் திரளல்.

யாரோ ஒருவர் திடீரென தெருவின் நடுவே பாய்கிறார். "என்னப்பா, இன்னுமே வேடிக்கை பார்க்கிறியள்? உந்தக்குணம் ஒரு காலமும் விட்டுப் போகாதே?"

www.tamileelamarchive.com

மக்கள் மத்தியில் திடீர் உணர்ச்சி வேகம். சங்கு சேமக்கலம் ஒலிக்கத் தொடங்குகிறது. உயர்ந்து.... உயர்ந்து கொண்டே வருகிறது.

கிட்டவே வந்து விட்டதாய்!.... காதுக்குள்ளே ஒலிப்பதாய்!....

உண்மையிலேயே கேட்கத்தான் கேட்டது. பக்கத்துக் கோவிலில் திருவெம்பாவை வழிபாடு. பாட்டின் இடையிடை சங்கு. சேமக் கலம்.

5

வழிபாடு முடிந்து மணி யோசை கேட்டது. தலை வாசலைத் திறக்க குளிர்காற்று வருடியது. அடிவானில் பாரிய செந்தாமரை பூக்கத் தொடங்கி விட்டது. படியிற் குந்தியாயிற்று. பக்கத்து வீட்டில் ஆளரவம். புகையிலைக் கன்றுகளுக்குத் தண்ணீர் வார்க்க ஆயத்தமாகிறார்கள். பேச்சிற் குறுக்கிட எண்ணமில்லை. இங்கிருந்தே கேட்கத் தான் விரும்பியது.

"பிரச்சினை தீருற மாதிரி இல்லை!" - முதிய குரல்.

"ஒண்டுக்கும் இராணுவம் விடாது! இந்தியாவும் ஏதோ சாட்டுக்கு 'வரவேற்கிறோம்' எண்டுது. உள்ளார்ந்தமா விருப்பமில்லை! சிங்கள அரசாங்கம் எல்லாத்துக்கும் நசிஞ்சு போகுது! பிறகு எங்கை தீர்க்கப் போகுது?" - நடுத்தரம்.

"உடனடிப் பிரச்சினையைத் தீர்ப்பம் எண்டினம். இப்ப, அடிப்படைப் பிரச்சினையள முதலில ஆராய்வம் எண்டினம். உடனடிப் பிரச்சினையைத் தீர்க்கப் பின்னடிக் கறவையே அடிப்படைப் பிரச்சினையைத் தீர்க்கப் போகினம்?" - இளமை.

"அதுதானே!.... இராணுவத்தின்ர அநியாயத்தில சாகிறதுகள் ஒரு பக்கம். வேறை வழியளாலையும் சாகிற சனங்கள் கொஞ்சமே?"

"எங்களைப் போல கிழசு கட்டையள் மட்டுமே; இளசுகள், பொம்பிளையள், கெற்பனியள், குழந்தை குஞ்சுகள்.... ச்சூ.... எண்ணி மாளாது!"

"நேற்று பேப்பரில பாத்தியளே? சாவகச்சேரியில இருதய நோயால பாதிக்கப்பட்ட ஆக்களில் எண்பது வீதம் சைக்கில் விறகு வியாபாரியளாம்! கொஞ்ச நஞ்சப் பேரே தொழில் வாய்ப்பை இழந்து அல்லல்படுதுகள்?"

"ஆசுபத்திரியளில போதிய மருத்துவ வசதியில்ல. மருந்துகளுக்கும் தடை. கேள்விப்படாத புதுப் புது பயங்கர வியாதிகளும் வேறை. இதுவும் கூட திட்டமிட்ட இன அழிப்புத்தான்!"

புறப்பட்டுவிட்டார்கள்.

நினைவுக்கு வந்தது. போராளியின் நாட்குறிப்பில் இருந்தது: "பூக்களா சொரிகின்றன? கொடும் குண்டுகளல்லோ பொழிகின்றன உங்கள் பீரங்கிகளின் வாயிலிருந்து! அதனூடு எப்போது வெள்ளைப் புறாக்களை அனுப்பப் போகிறீர்கள்? இல்லாவிடில் உங்கள் மீதான நம்பிக்கையை எங்கள் மீது கட்டியெழுப்புவது உங்களுக்கு இயலாததே!

▣▣▣

# கானகம் ஒரு கெரில்லா வீரனுக்குத் தாயும் கூட

ஒரு கெரில்லா வீரன் கானகத்தை தன் தாயாக கருதுகிறான். தன்னை மறைத்து எதிரியிடமிருந்து தன்னைக் காத்து நிற்கிறாள் என்ற உன்னதத்தை அவன் சதா உணர்கிறான். காட்டின் உயிர்ப்பும் உறக்கமும் விழிப்பும் அவனுக்குத் தெரியும்.

அதே போன்று கானகத்தின் அருமையை இந்த மனிதகுலமும் நன்கு உனர்ந்துள்ளது. தென்றல் தழுவும் சுகத்தை துய்த்த எவனுக்கும் அதன் அருமையைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி நிற்கும்.

பூமிக்கு குடையாய் நின்று, நிழலும் தந்து, குளிரும் தந்து, காற்றும் தந்து நிற்கும் பசிய வனங்கள் உலகத்தின் உயிர் நாடி.

இத்தகைய உயிர்நாடியாய் திகழும் பசிய வனங்கள், தென் தமிழீழத்தில் சிறிலங்கா படையினரால் அழிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 600 ஹெக்டேயர் காடுகள் படையினரால் அழிக்கப்பட்டு விட்டன. அதுமாத்திரமன்று திருமலையிலிருந்து ஆனையிறவு வரையிலான அடர்ந்த காட்டுப் பகுதியை இராணுவ ஆதாயம் கருதி அழிக்கவேண்டும் என்று ஒரு பௌத்த தலைமைப் பிக்கு அண்மையில் அரசுக்கு ஆலோசனை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

தன் கையைக் கொண்டே கையை வெட்டச் செய்வது போன்ற நிலையில் தென் தமிழீழ பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள் இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டே பெருமளவிலான காட்டுமரங்கள் கட்டாயப்படுத்தி வெட்டுவிக்கப்படுகின்றன. வெட்டப்படும் காட்டு மரங்களைக் கொண்டு பாதுகாப்பு அரண்களை அமைத்து வருகின்றார்கள். இத்தகைய காடுகள் அழிக்கப்படுவதின் பின்னால் உள்ள காரணங்களில் ஒன்றாக விடுதலைப்புலிகளின் தாக்குதலைக் குறிப்பிடுகிறது இராணுவம்.

பூமியின் இயற்கை அரண்களாக விளங்கும் வனப்பகுதி அழிந்து, பார்க்கும் இடம்தோறும் பாலைவெளியாகி வரும் அவலம் சுற்றுப்புறச் சூழலுக்கே கெடுதலாக அமைந்துவிடுகின்றது.

அயலவர் நிலம் என்ற சிந்தனை கூட இல்லாதவர்களுக்கு உலகச் சுற்றுப்புறச் சூழல் குறித்த சிந்தனை எப்போது வரும்?

துரோகங்களாலும், இன வெறிப் பகையுணர்வாலும் வலுவாக ஆழ்பட்ட இராணுவம் தமிழீழ வளங்களை திட்டமிட்டு அழித்துவருகிறது.

தமிழின விரோத உணர்வு தமிழர் வாழும் பூமியின் வளப்பம் மிகுந்த இயற்கையோடும் வலுவாக வளர்ந்துவிட்டது. போர் நிலைமையையும் மீறி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேச உவர் நிலப்பகுதிகளில் கருவேப்பில மரநடுகைத் திட்டங்களும், கரையோரப் பிரதேசங்களில் சவுக்கு மரநடுகைத் திட்டங்களும், இலட்சக்கணக்கான பனை மரங்களையும் தேக்கமரங்களையும் நடும் திட்டங்களும், தாவரவியல் பூங்காக்களை உருவாக்கும் திட்டமும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதனால் பசுமையும் செழிப்பும் மிக்க வளம் மிக்க பூமியாக தமிழீழம் உருவாகி வருகின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




தமிழர்களின் சேவகனாகி,
தமிழர்களின் தொண்டனாகி,
தமிழர்களின் தளபதியாகி,
தமிழர்களின் தலைவனாகி,
தமிழர்களின் பலமாகி,
தமிழர்களின் கவசமாகி,
தமிழர்களின் மணிமகுடமாகி....
அடக்கி, ஒடுக்கப்பட்டு
முடங்கி சுருண்டு கிடக்கும்
உலகத் தேசிய இனங்களுக்கு
ஒரு முன்னுதாரணமாகி....
பூகோளத்தின்
முள்ளந்தண்டை சிலிர்த்திட
வைக்கும் ஒரு பெரும்
தலைவனின் சிந்தனைத்
துளிகள் அடங்கிய
"தலைவனின் சிந்தனைகள்"
என்னும் கைநூல் ஒன்று
வெளிவந்துள்ளது. அவ் அரிய
சிந்தனை துளிகளில் சில:

- சமாதானத்தை நான் ஆக்கபூர்வமாக விரும்புகிறேன். எனது மக்கள் நிம்மதியாக, சமாதானமாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழவேண்டும் என்பதே எனது ஆன்மீக இலட்சியம்.
- விடுதலைப் புலிகள் மக்களிலிருந்து வேறுபட்டவர்களல்ல; விடுதலைப் புலிகள் ஒரு மக்கள் இயக்கம். புலிகள் தான் மக்கள்; மக்கள் தான் புலிகள்.
- எமது மக்கள் போற்றப்படவேண்டியவர்கள். தேசியப் போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல; அவர்களது பங்களிப்பு அளப்பரியது என்றுதான் சொல்வேன். இலைமறை காயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்குத் தோள் கொடுத்து வரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மனவுறுதிபடைத்த மா மனிதர்கள் என்று அழைக்கவேண்டும்.
- அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி; மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு.
- உலகெங்கும் தமிழினம் பரந்து வாழ்ந்தாலும், தமிழீழத்திலேதான் தேசிய ஆன்மா விழிப்புப் பெற்றிருக்கிறது; தமிழீழத்திலே தான் தேசிய ஆளுமை பிறந்திருக்கின்றது; தமிழீழத்திலேதான் தனியரசு உருவாகும் வரலாற்றுப் புறநிலை தோன்றியிருக்கின்றது.
- சுதந்திர எழுச்சியின் உந்துதலால் தான் மனித வரலாற்றுச் சக்கரம் சுழல்கின்றது.

www.tamileelamarchive.com




**கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள் - எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள் - எதிரியின் படைப்பலத்தை மனப்பலத்தால் உடைதெறியும் நெருப்பு மனிதர்கள்.**

- தலைவர் வே. பிரபாகரன்

★★

## மின்னலெனத் தோன்றி மில்லரானவன்

சின்ன வயசிலே
கிட்டிப் புள்ளு விளையாடிய தெருவில்
1987 ஆடி 5
நெல்லியடியில்
கொடும் பகைவர் முகாமுக்குள்
சொல்லிக்கொண்டு போனான்
எங்கள் ஊரெல்லாம்
ஒரு கணம் உருண்டு புரண்டது
முதற் கரும்புலியாகிய
பிறப்பெடுப்பால்
எத்தனை.. எத்தனை...
அக்கினிப் பூக்கள் பூத்தன
சில்லென்று பூத்த - அவன்
சிரித்த முக அழகு
ஊருத் தெருவில் திரியும்
மனிதர் முகங்களிலெல்லாம்
கொட்டிக் கிடக்க
மின்னலெனத் தோன்றி மில்லரானவன்

- மித்திலன், ஒஸ்லோ

★★

## தேசத்தின் விடுதலைக்காய் தம் இனிய உயிரை அர்ப்பணித்த வீரர்களின் தியாகத்தை போற்றிப்பாடும் நாள்

சிறீலங்கா இராணுவத்தின் ஆகாய கடல் மார்க்கமான மூர்க்கத் தாக்குதல் நடந்துகொண்டிருக்கையில் மக்கள் இராணுவக் கொடுமைகளாலும், அச்சத்தாலும் அல்லலுற்றார்கள். துன்பக்கேணியில் அவர்கள் வாழ்வு சுழன்ற போது கரும்புலிகளில் முதல்வனாய் மில்லர் எழுந்தான். நெல்லியடியில் சிங்கள் இராணுவ முகாம் பொடிபட வெடிமருந்தேற்றிச் சென்றான்.

தமிழ் மக்கள் வாழ்வில் புதிய நம்பிக்கை ஒளியை ஏற்றி வைத்தான். பலமற்றுக் கிடந்த எமது மக்களின் பலமான உயிராயுதமாக கரும்புலிகள் திகழ்கிறார்கள். கடலிலும் தரையிலும் பெரும் தீப்பிழம்பாய் எழுந்து காற்று வெளியில் கரைந்து போகும் இந்த விடுதலை வீரர்கள், விடுதலையின் உச்சங்களைத் தொட்ட உயரிய மானுடர்கள். அத்தகைய உயரிய விழுமியங்களையும் பண்புகளையும் உடைய கரும்புலி வீரர்களின் நினைவில் நனைவோம்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ‘வானம் எம் வசம்’

“வானம் எம் வசம்” என்னும் கவிதை நூல் ஒன்று தமிழீழத்தில் வெளிவந்திருக்கின்றது. இந்நூலில் 29 கவிஞர்களின் கவிதைகள் உள்ளன. அந்தக் கவிதைகள் தமிழர் படைப்பலத்தின் வளர்ச்சி காரணமாக பிறந்த மகிழ்ச்சி நிலையை பதிவுசெய்துள்ளன.

இந்நூலினை தமிழ்த்தாய் வெளியீட்டகம் வெளியிட்டிருக்கிறது.

1995 சித்திரை 28, 29 - தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தளவில், புதிய சகாப்தத்தின் தொடக்க நாட்கள். தமிழ் மக்களை சதா அச்சுறுத்தியபடி இருந்த சிங்கள வான்படை விமானங்களில் இரண்டை - யாழ்ப்பாண வான்பரப்பில் வைத்து - புலி வீரர்கள் சுட்டு வீழ்த்திய நாட்கள் அவை. இந்த நாட்களில் வாழ்ந்த ஒவ்வொரு தமிழனும் - தமிழச்சியும் அதற்காகப் பெருமை




அடைவதுடன், தாங்கள் இறக்கும் வரை இந்த நிகழ்ச்சியை மறக்கவும் மாட்டார்கள். அந்த அளவுக்கு இந்த இராணுவ சாதனை, எமது மக்களுக்குப் பெரும் புளகாங்கித உணர்வைக் கொடுத்திருந்தது. வீதிகளில் குழுமி நின்றும், வீடுகளில் இருந்த படியும் எமது மக்கள் வெளிப்படுத்திய இந்தப் பேருவகையை, எமது மண்ணின் கவிஞர்கள் சிலர் இந்நூலில் பதிவு செய்துள்ளனர். இந்தக் கவிதை நூலை உருவாக்கத் தொடங்கும் போதே நூல் வெளியீட்டு விழா தொடர்பாக தமிழ்த்தாய் வெளியீட்டகம் ஒரு முடிவை எடுத்து வைத்திருந்தது. சிங்கள வான்படை வானூர்திகளால் தமது இரத்த உறவுகளை இழந்த குடும்பங்களின் உறுப்பினர்களை அழைத்து, இந்த வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்த கவிஞர்களைக் கௌரவிப்பது என்பதே, அந்த முடிவாகும். இந்த இராணுவ சாதனை நிகழ்த்தப்பட்டு ஒரு மாத நிறைவு நாளில் அந்த முடிவை நடைமுறைப்படுத்தி தமிழ்த்தாய் வெளியீட்டகத்தினர் மனநிறைவு அடைந்தனர்.

**இந்நூலில் உள்ள சில கவிதைகளை எரிமலை வாசகர்களுக்காகத் தருகிறோம்**



## வரைகோடு

- அ. ஜேசுராசா

சித்திரை 1995
படமொன்று நாளிதழில்....
வானத்து இராட்சதன்
வீழ்ந்த சிதைவுகள்.
எத்தனை கூட்டம்
எத்தகு மகிழ்ச்சி!
நினைவுச் சின்னமாய்ய.....
சிதறல்கள் எடுக்கும்
பெருமித முகங்கள்
வெளிச்சக் குண்டாய்
வெடிக்கும் ஒரு நினைவு -

ஆவணி 1977
எரிந்து கிடந்த ‘யாழ்’
பேருந்து நிலைய
கடை வரிசை.
வளைந்த கம்பிகள்
குவிந்த சாம்பல்;
உயரத்தில் தொங்கிப்
படபடத்த,
விளம்பரத் தகரம்.
இயலாமை நிறைந்த
எங்களின் முகங்கள் -
“பொலிஸ்....!”
சத்தம் கேட்டால்
ஓடத் தயாராய்,
சைக்கிளைப் பிடித்து
நின்ற நாங்கள்!

சாம்பலில் தொடங்கிய
வரைகோடு
உச்சப் புள்ளியைத்
தொட்டதெப்படி?

“மாறியது காலம்!”
இல்லை - மாற்றினர் புலிவீரர்!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


## நானே விழுத்திய நடப்பு

- புதுவை இரத்தினதுரை

அதிர்ஷ்டம் எப்போதும் என் பக்கமில்லை
என்றாலும்
அன்று என்னோடிருந்தது.
அப்போது ராஜவீதியில் இருந்தேன்
வானத்தில்....
மின்னலடித்தது.
மேலே பார்த்தேன்
காலையில் யாரோ கதைத்துக் கொண்டது
காதில் உறைத்தது.
"விசயம் விளங்கியது"
ஆகாய ஊர்தியை
தமிழன் சுட்டு விழுத்துவதைப்
பார்க்கும் பாக்கியம் சித்தித்தது.
மேனிச்சுமை குறைந்து மிதந்தேன்.
காற்றில் கைவீசி நடந்தேன்
முகிலைக் கடந்து நிலவைத் தொட்டேன்.
என்ன நடந்தது என்னில்?
அசாதாரணம்தான்
என்னால் முடிந்தது அப்போது
சுட்டது நானில்லை
சுட்ட இடத்திலும் நானில்லை
நானே விழுத்திய நடப்பு எனக்கு
என் இளவல் ஒருவனாலும்
இயலுமென்பதே
என் திமிர்.
இனி எவருக்கு நேரேயும் நிமிர்வேன்
அந்நாளில் நானும் இருந்தேன்
என் ஜீவிதத்துக்கும் அர்த்தம் உண்டு
அது போதும்.





## வானம் வசப்பட்ட காலைப் பொழுது....

- தெல்லியூர் ஜெயபாரதி -

காலை வழக்கம் போல்
வேளையோடு விடிந்தது.
கோயில் மணியோசை ஓமென்று சொல்லி
எயில் மூவெரித்த இறைவனை எழுப்பிற்று
வீட்டில்,
தட்டிப்பாயில் படுத்த அம்பி தவிர
எல்லோரும் எழுந்து எல்லாம் முடிக்க
மெல்ல மணி எட்டானது.

நீள் வகிட்டு றோட்டில்
கால் பதித்து, பல கதைத்து
பள்ளிக்குச் செல்கிற போது
வாகனங்களிரண்டு
பலமாய் முட்டும் சத்தமொன்று
சூரியன் தீப்பற்றி எரிந்தது
"பிளேன் சரியாம் நவக்கிரியில்"
கிழவரொருவர் நடைபாதையில்
சொல்லக் கேட்டுத் திகைப்பாகி,
மீளப் பூரித்து
"இது எங்கள் பூமி
இது எங்கள் வானம்" என்றார்.

## எழுச்சி

-சசிவர்ணன்

அன்று வேங்கைகள்
அடித்த அடியிலே
அவ்ரோ மட்டுமா
தகர்ந்தது?
அரசின் செறுக்கு
ஆதிக்க முனைப்பு
ஆள நினைத்திடும் ஆணவம்
என்னவும் செய்யலாம்
என்ற புளிப்பு
ஈழத்தை நசுக்கலாம்
என்னுங் கணிப்பு
இவை யாவுமே
அன்றுடன் அழிந்தன!
எம்மைப் பிடித்த பிணி
எம்மைப் பிடித்த தனை
என்பவை கூடவே
அறுந்தன! - இனி
தமிழ் ஈழத்தை
அசைத்திட முடியாது!
தரணியில் எழுந்தது
புதுநாடு!



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பொருளாதார நிர்வாகம் பெண்கள் கையில் வரவேண்டும்

ஆசிய நாடுகளில் பெரும்பாலும் குடும்பங்களின் முழு நிர்வாகத்தையும் கவனிப்பவர்கள் பெண்களாகத்தான் இருக்கிறார்கள். குடும்பங்களுக்கான உணவுத் தயாரிப்பிலிருந்து, குழந்தைகளுக்குரிய உடைகள், பாடசாலை உபகரணங்களை வாங்குவது வரை சகல வேலைகளையும் பெண்களே கவனித்துக் கொள்கிறார்கள். மேலும் பெரும்பாலான குடும்பங்களில் சிறு சிறு திருத்த வேலைகளைக் கூட பெண்கள்தான் தமது மேற்பார்வையில் செய்விக்க வேண்டியிருக்கிறது. பார்க்கப்போனால் குடும்பத்தின் மிகப் பெரும் பொறுப்பு பெண்கள் கைகளிலேதான். ஆனால் பல சமயங்களில் பெண்களால் தமது பொறுப்புக்களைச் சரிவர நிறைவேற்ற முடியாமல் போய்விடுகின்றது. இதன் காரணம் பொருளாதார நெருக்கடி.

பொருளாதார நெருக்கடி என்று நாம் இங்கே குறிப்பிடுவது ஒரு குடும்பத்துக்குரிய செலவுகளை ஈடுகட்டுவதற்குரிய வருமானமின்மையை மட்டுமல்ல. வருகின்ற கொஞ்ச வருமானமும் பெண்களின் கைக்கு முழுமையாக வந்து சேருவதில்லை என்பதைத்தான் நாம் பிரதானமாகக் குறிப்பிடுகின்றோம். தன் கணவன் நாளாந்தம் ரூபா 50.00 தான் உழைப்பவன் என்றால், அந்தப் பணத்துக்குள்ளேயே அன்றைய நாளுக்கான செலவுகளை ஈடுகட்டும் திறமை பெரும்பாலான பெண்களிடம் இருக்கின்றது. ஆனால் அந்தப் பணம் கூட முழுமையாகப் பெண்களிடம் கொடுக்கப்படுவதில்லை என்பதுதான் இங்கு பிரச்சினைக்குரிய விடயம். வருமானத்தில் பாதிக்குமேல் கணவனின் சீட்டாட்டத்திலோ, குடியிலோ செலவாவதுதான் வழமை. தற்செயலாக என்றாவது ஒருநாள் வருமானமே இல்லாது போய்விட்டால், மனைவியின் கையில் எஞ்சியிருக்கும் சில்லறைகளைப் பறித்துக்கொண்டு போய்விடுவார்கள். வசதியற்ற குடும்பத்துப் பெண்களின் நிலை இப்படியிருக்க,



நடுத்தர வர்க்கத்துப் பெண்களின் நிலை வேறுவிதமாக உள்ளது. அந்தந்த மாத வருமானம் அந்த மாதங்களிலேயே முழுமையாக செலவு செய்யப்படுமாயின், திடீரென்று ஏற்படுகின்ற பண நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியாமல் போய் விடும். ஆகவே ஒட்டு மொத்தமாகப் பார்க்கையில் பெண்களின் கையில் பொருளாதார வலு இருக்க வேண்டியதன் தேவை நமக்கு நன்றாகப் புரிகின்றது.

பொருளாதாரத்தை சிறந்த முறையில் பாதுகாக்க, சேமிக்க சிறப்பான வழி என்னவென்றால், வைப்பகத்தில் தமெக்கென ஒரு கணக்கைத் தொடங்கி முதலிடுவது தான். ஒவ்வொரு பெண்ணும் தனித் தனியாகத் தம் பெயரில் கணக்குகளை ஆரம்பித்து, சேமிப்புக்களை மேற்கொள்வது இன்றைய நாளில் ஒரு அவசியமான செயற்பாடாகும். சேமிப்புக்களை மேற்கொள்ளும் பழக்கம் நிச்சயமாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும். வாழ்கையை உயர்த்தும் இப் பணியில் வைப்பகங்கள் செம்மையாக ஈடுபட்டுள்ளன. எனவே தனது, தன் குடும்பத்தினது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விரும்பும் ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் சிறிய அளவிலான தொகையையேனும் வைப்பகத்தினூடாகச் சேமிக்கவேண்டும்.

நமது தமிழீழ வைப்பகத்தில் பெண்களுக்கென தனியான கணக்குகள் என்று எதுவுமில்லை. எனினும் சாதாரணமான சேமிப்புக் கணக்குகளிலேயே பெண்கள் தமக்குரிய கணக்குகளையும் ஆரம்பிக்க

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


லாம். அண்மையில் நாவாந்துறை மண்பிட்டிக் கிராம மக்கள் தம்மை மேம்படுத்தும் நோக்கில் தமக்கான கணக்குகளைத் தமிழீழ வைப்பகத்தில் திறந்துள்ளனர். ரூபா 200-உடன் கணக்குகளை ஆரம்பித்துள்ள இவர்கள் மாதாந்தம் ஆகக் குறைந்தது ரூபா 50-ஐ வைப்பிலிடுகிறார்கள். இக்கணக்குகளை ஆரம்பித்ததன் மூலம் பல குடும்பங்களுக்கு கடன் உதவிகளைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அன்றாடம் உழைக்கும் கரையோர மக்களான இவர்களுக்கு தமிழீழ வைப்பகத்தின் இந்த வைப்புக் கணக்குகளும் கடனுதவியும் பெரிதும் பயன்படுகின்றது.

அப்பகுதியிலுள்ள பெண்களிடம் நாம் இது பற்றிக் கதைத்த போது, "எமக்கு இது மிகவும் பயன் தருகின்றது. அடுத்த மாதம் வைப்புச் செய்யவேண்டும் என்பதற்காக நாம் அன்றாடம் வருகின்ற பணத்தில் சேமித்து வைக்கிறோம். இதனால் எமது அவசரத் தேவைக்காக வைப்பகத்திலிருந்து நாம் கடன் பெறக்கூடிய வாய்ப்பு ஒன்று ஏற்பட்டுள்ளது." என்று கருத்துத் தெரிவித்தனர்.

ஆனால் அதே நேரம் நாம் இன்னொரு விடயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

இலங்கை வங்கி 1992-ம் ஆம் ஆண்டில் பெண்களுக்கெனத் தனியானதோர் சிக்கனத் திட்டம் ஒன்றை ஆரம்பித்தது. 1992 ஜூலை 29-ல் அறிமுகப்படுத்தப்பட்ட இக்கணக்கு "மகளிர் பொற் கணக்கு" என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

சனசக்தி உதவி பெறும் பெண்களும் தோட்டப் பெண் தொழிலாளர்களும் ரூபா 200-உடன் இக்கணக்கை ஆரம்பிக்கலாம். தொடர்ச்சியான மாத வைப்பீடாக ரூபா 100-ஐ வைப்பிலிடலாம். ஏனைய பெண்கள் ரூபா 500-உடன் இக்கணக்கை ஆரம்பித்து மாதாந்த வைப்பீடாக ரூபா 250-ஐ வைப்பிடலாம். பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தம் பெயரில் மகளிர் பொற் கணக்குகளை ஆரம்பிக்கலாம். பெண்களைப் பெரும் எண்ணிக்கையில் இக் கணக்குகளில் ஈடுபடுத்தும் நோக்கில் இலங்கை வங்கி சில சலுகைகளைச் செய்கின்றது.

மகளிர் பொற்கணக்குக்கான வட்டி வீதம் சாதாரண சேமிப்புக் கணக்கின் வட்டி வீதத்தை விட 1 வீதம் அதிகமாகும். தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதப்படி மகளிர் பொற் கணக்குகள் ஆண்டு ஒன்றுக்கு 13 வீதம் வட்டியைப் பெறும் இக்கணக்கில் உள்ள பணத்தை மீளப் பெறுவதாயின், வங்கியில் வைப்பில் இடவேண்டிய ஆகக் குறைந்த தொகைக்கு மேலதிகமாக உள்ள பணத்தை மீளப் பெறலாம்.



தனது, தன் குடும்பத்தினது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த விரும்பும் ஒவ்வொரு பெண்ணும் கட்டாயம் சிறிய அளவிலான தொகையையேனும் வைபகத்திநூடாக சேமிக்க வேண்டும்

இலங்கை வங்கியின் யாழ் மாவட்டக் கிளைகளில் மட்டும் நமது பெண்களால் 3,700 பொற் கணக்குகள் திறக்கப்பட்டு 30 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. இதே போன்று இலங்கை வங்கி தவிர்ந்த, கொழும்பில் இயங்குகின்ற ஏனைய வங்கிகளின் யாழ். மாவட்டக் கிளைகளில் மட்டும் 3,000 கணக்குகள் திறக்கப்பட்டு 38 மில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளது. நமது பெண்களின் கைகளில் இவ்வாறு பல மில்லியன் ரூபாக்கள் இருக்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே.

இதில் சிக்கலான விடயம் என்னவென்றால் மகளிர் பொற் கணக்குகள் யாவும் இலங்கை அரச கட்டுப்பாட்டிலுள்ள வங்கிகளிலுள்ள கணக்குகளாகும். வடக்கு, கிழக்கில் அசாதாரண நிலை காணப்படுவதாகச் சொல்லித் திரியும் இலங்கை அரசு, எமது தாயகப் பகுதியிலுள்ள தனது வங்கிகளில் திரவப் பணத்தை பெரியளவில் விட்டு வைப்பதேயில்லை. பாதுகாப்புக் காரணங்களைக் கூறி அத்தனை பணத்தையும் தனது தலைநகருக்குக் கொண்டு சென்று விடுகிறது.

இதனால் பொற் கணக்குகளில் வைப்புச் செய்துள்ள நமது பெண்கள் தம் திடீர்த் தேவைகளுக்குக் கூட ஒரு பெருந்தொகைப் பணத்தை மீளப் பெறமுடியாத நிலைதான் இன்று காணப்படுகின்றது.

பெறமுடியாமல், எட்டாக் கனி போல் தோற்றம் தரும் இவர்களின் வைப்புக்கள் அங்கே, நம் மக்களை அழித்தொழிப்பதற்கான இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்யும் பணியில் செவ்வனே

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஈடுபட்டுள்ளன.

இலங்கை வங்கி பெண்களுக்கான சிக்கனத் திட்டத்தை ஆரம்பித்ததன் நோக்கம் நல்லதா, கெட்டதா என ஆராய்வதல்ல நம் நோக்கம். மகளிர் பொற்கணக்கு உட்பட இலங்கை வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள தமிழரின் சேமிப்புக்களை இலங்கை அரசு எவ்வாறு தமிழரை அழிப்பதற்கான பொறிக் கிடங்காகப் பயன்படுத்துகின்றது என்பதையே நாம் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

நமது சமூக அமைப்பின் படி பெண்களே குடும்பத்தின் முழு நிர்வாகத்தையும் கவனிக்கிறார்கள். எனவே அவர்களின் கையில் பொருளாதார நிர்வாகமும் இருக்க வேண்டியது அவசியமாகின்றது. வழமையான நமது பெண்கள் 'சீட்டுப் பிடித்தல்' முறை மூலம் ஓரளவுக்காவது பொருளாதாரத்தை கைவசம் வைத்திருக்கிறார்கள். ஆனால் தமிழீழ வைப்பகத்தில் தமக்கென கணக்கு ஒன்றைத் திறந்து வைப்பிலிடுவதில் உள்ள பாதுகாப்பு இச்சீட்டு பிடிக்கும் முறையிலோ, இலங்கை வங்கியில் மகளிர் பொற்கணக்கொன்றைத் திறந்து வைப்பிலிடுவதிலோ இல்லை என்பது உண்மையே.

- ஜெயஜோதி

# மறுபக்கம் பார்க்க



## இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

"என்னடாப்பா கனகாலமாய் ஒண்டும் எழுதாமல் இருக்கிறாய். கதைய ஒண்டை எழுதலாம் தானே"

"கதையோ"

"ஓமோம் நல்லதொரு சிறுகதை"

"ம்"

"என்ன யோசினை"

"சிறுகதை எழுதி நாளாச்சு"

"அதுகென்ன இப்ப எழுதவேண்டியதுதானே"

"எழுதலாம் தான்"

"பேந்தென்ன யோசினை"

"என்னத்தை எழுதிறது"

"என்னத்தையோ"

"ஓமோம் துவக்கைப் பற்றியும் தெரியாது. சண்டை பிடிக்கிறதையும் பாக்கேல்லை. போராட்ட காலத்தை வைச்சு எப்படிக் கதை எழுதுறது"

"துவக்கு, சண்டை இல்லாமல் ஒரு கதை எழுதன்"

"அப்படி எழுதினால் பிரச்சினை இல்லையே.... போராட்ட காலத்திலை துவக்கையும் சண்டையையும் விட்டுப்போட்டு கதை எழுதுறது எண்டது சரிவருமே, அதுதான் யோசினையாய் இருக்கு"

"அப்பிடியே விசியம். அது சரி இப்ப என்ன முயற்சி நடக்கு"

"இப்ப என்ன தோட்டம்தான்"

"எண்ணைக்கும், உரத்துக்கும் தட்டுப்பாடு வர என்னடாப்பா செய்தனி. இப்பவும் உதுகளுக்கு பிரச்சினை தானே"

"எண்ணெய் தட்டுப்பாடு, உரத்துக்குத் தட்டுப்பாடு வந்தாலும் தோட்டத்தை விடலாமே. எண்ணெய் தட்டுப்பாடான காலத்தில பட்டையும் துலாவும் தான் துணை."

"அப்ப நீ எண்ணெய் தட்டுப்பாடாலை சோர்ந்து போகேல்லை. தோட்டம் செய்யிறதையும் விடேல்லை. அப்படித்தானே"

"என்னண்டு விடுறது. என்ர அப்பராக்கள் என்னண்டு அந்த நாளிலை தோட்டம் செய்தவை"

www.tamileelamarchive.com



# நேர்காணல்

# சாந்தன்

## நேர்முகம் கருணாகரன்

**கடந்த முப்பது வருட காலமாக தொடர்ந்து எழுதி, எம்மண்ணுக்குப் பெருமை சேர்த்து வருபவர் சாந்தன். நாவல், குறுநாவல், சிறுகதை, கவிதை, விமர்சனம் என்று இலக்கியத்தின் பல கூறுகளுடனும் தன்னைப் பழக்கப் படுத்திக் கொண்டு எழுதிவருபவர். தமிழுடன் ஆங்கிலம், சிங்களம், ரஷ்ய மொழிகளில் இவர் தேர்ச்சி மிக்கவர். ஆங்கில மொழியில் The Sparks என்ற சிறுகதைத் தொகுதியை எழுதி வெளியிட்டுள்ளார். ஈழத்தில் மட்டுமின்றி இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் அறியப்பட்டவர். வெளிச்சத்தின் முதலாவது இதழிலிருந்து தொடர்ந்து எழுதி வருமிவர் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பாலும் முழுமையான மனுக்குல விடுதலையின் பாலும் தன்னை இறுக்கமாகப் பிணைத்துக் கொண்டவர். கடுகு, ஒட்டுமா, பார்வை, ஆரைகள், கிருஷ்ணன் தூது, முளைகள், ஒரே ஒரு ஊரிலே, இன்னொரு வெண்ணிலவு, காலங்கள் எனப் பல இலக்கிய நூல்களை தமிழுக்குத் தந்தவர். இவருடைய கதைகள் ரஷ்ய, ஆங்கில, சிங்கள மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளன.**

**✸ எழுத்தாளர் சாந்தனென்றும், சுதுமலை அண்ணாமலைப் பரியாரியாரின் பேரனென்றும் எங்கும் நன்கறியப்பட்ட தங்களின் தோற்றம், வளர்ச்சி என்றான பின்புலத்தை அறியத்தாருங்கள்:**

★ 1947-ல் பிறந்தேன். தந்தையார், திரு. ஐயாத்துரை, சாதாரண கமக்காரனின் மகனாகப் பிறந்து தம் உழைப்பால் நிர்வாக சேவை தரம் வரை உயர்ந்தவர். தாயார், 'கார்கில்'ஸில் காசாளராக இருந்தவரின் ஒரே மகள். இசையிலும் இலக்கியத்திலும் ஈடுபாடு மிக்கவர். நீங்கள் குறிப்பிடுகிற அண்ணாமலைப் பரியாரியார் - எங்கள் அப்பு - தாயாரின் சிறிய தந்தையார். 'இறைவன் சந்நிதியில் எல்லோரும் சமம்' என்பதைத் தமது மருந்துச் சீட்டுக்களில் மட்டுமன்றி தம் உள்ளத்திலும் பொறித்து அதற்கேற்ப வாழ்ந்தவர்.

ஐந்தாம் வகுப்பு வரை சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலையில் படித்தேன். இந்தப் பள்ளி வாழ்க்கைதான் பின்னர் எனது "முளைகள்" கதையில் பதிவானது. ஆறாம் வகுப்பிலிருந்து க. பொ. த. (சா/த) வரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில். இந்தக் காலத்தில்தான் பேனா பிடிக்கிற ஆசை வந்தது. அதற்குக் காரணமாக இருந்தவர் திரு. வரதலிங்கம் என்கிற தமிழாசிரியர்.

க.பொ.த (உ/த)-வுக்கு யாழ். இந்துக் கல்லூரிக்குப் போனேன். அங்கும் எனக்கு ஆதர்சமாக ஒருவர் வாய்த்தார். திரு. ம. சி. பிரான்சிஸ். எங்கள் பிராணியியல் ஆசிரியர். அவரைப் பார்த்துத்தான் என் கையெழுத்தை தமிழிலேயே வைக்கத் தொடங்கினேன். இதற்காகப் பின்னர் சில விலைகள் கொடுக்க நேரிட்டது என்றாலும் - உத்தியோக வரவேட்டிலிருந்து, சிறீலங்கா கடவுச்சீட்டு வரை எல்லாவற்றிலும் என் ஒப்பம் தமிழிலேயே இருந்தது.

நாங்கள் பயின்ற காலத்தில் யாழ். இந்துவின் எழுபத்தைந்தாவது ஆண்டு விழா இடம்பெற்றது. திரு. தேவன் - யாழ்ப்பாணம் மேற்பார்வையில் 'வாழ்க்கைப் படகினிலே' என்றொரு நாடகத்தை வெற்றிகரமாக மேடையேற்றினோம். நான் வில்லன்.

1968-ல் கட்டுப்பெத்தைக்குப் போனபோதே நான் எழுத்தாளனாகத்தானிருந்தேன். 1968-ல், சிற்பி அவர்களின் 'கலைச்செல்வியில்' எனது முதலாவது கதை 'பார்வை'யும், தொடர்ந்து 'விவேகி'யில் சில கதைகளும் பிரசுரமாகியிருந்தன.

கட்டுப்பெத்தை வாழ்வு என்னளவில் மிக முக்கியமானது. அது நான்காண்டுகள் நீடித்தது. முதலாமாண்டு, முழுநேர வரைவல்லுனர் பயிற்சிநெறி. பிறகு மூன்றாண்டுகள் கட்டுமானப் பொறியியல். வார இறுதி வகுப்புகள் படித்துக்கொண்டிருக்கும் போதே வேலையும் கிடைத்துவிட்டதால், எனது முதலாவது தொகுதியான 'பார்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வை'யை வெளியிட்டேன். மாவை நித்தியானந்தன் போன்ற பலர் நண்பர்களாயினர். மாணவர்களாகவே 'எழில்' என்றொரு மாசிகையை வெளியிட்டோம். ஐந்தோ, ஆறோ இதழ்கள் வந்தன.

அது, மாணவர் பேரவை இயங்கிக் கொண்டிருந்த காலம். தமிழர் பிரச்சினை தொடர்பான எங்கள் சிந்தனைகளிலும் புது முனைப்புகள் ஏற்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியற் பீட மாணவர்கள் சிலர் மிகுந்த உற்சாகத்துடன் செயற்பட்டு வந்தனர். 'தமிழ் இளைஞ'னை அவர்கள் வெளியிட்டுக்கொண்டிருந்தனர். அவர்களுக்கும் கட்டுப்பெத்தைக்கும் தீவிர தொடர்புகள் ஏற்பட்டன. பிறகு எழுந்த என் எழுத்துக்களின் போக்கு இங்கேதான் தீர்மானிக்கப்பட்டிருக்கவேண்டும்.

1969-ல், விடுமுறைக்கு வீட்டிற்கு வந்த போது 'விடிவு' என்றொரு சரித்திர நாடகத்தை மேடையேற்ற முயன்றேன். ஒத்திகை, மற்ற ஏற்பாடுகள் எல்லாம் முடித்து, நோட்டீசும் அடித்தாயிற்று. 'இன்றைய எம் நிலைக்கு மாற்றுத் தருகிற கருத்தை இதிலே காணுங்கள். தமிழ் இளைஞர்கள் இதைப் பார்த்துவிட்டு சிந்திக்கவும் வேண்டுகிறோம்..... பெரும்பான்மையினரின் எதேச்சாதிகாரத்தால் பாதிக்கப்பட்ட சிறுபான்மைக் கடம்பர்கள், தங்கள் 'விடி' விற்காக மரகதபுரியில் கிளர்ந்தெழுகிறார்கள். அவர்களின் முடிவு - 'விடிவு' சொல்லும்! ஆனால், 'விடிவு' முடிவைச் சொல்ல முடியாமலே போனது. அதை மேடையேற்ற பொலிஸ் அனுமதி கிடைக்கவில்லை!

எழுபதுகளின் தொடக்கத்தில், 'கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழக'த்தை ஆரம்பித்தோம். அ. யேசுராசா, நெல்லை. க. பேரன், குப்பிளான் சண்முகன் போன்ற பல நண்பர்கள் அதில் இருந்தார்கள். எங்கள் வளர்ச்சிகளுக்குக் கழகம் வலு உதவியாயமைந்தது. எழுபதுகள் முழுவதுமே அது உயிரோடிருந்தது. இக்காலகட்டத்தில் 'மல்லிகை'யுடன் தொடர்புகள் ஏற்பட்டன. அதில் எழுதலானேன்.

அடுத்த ஒரு பத்தாண்டு காலத்திற்கு 'மல்லிகை' எனக்கு நிறையவே களம் தந்து எனது வளர்ச்சிக்கு துணை நின்றது. சிறுகதைகள் மட்டுமன்றி, 'சோழன்' என்ற பெயரில் சில கவிதைகளும் 'தங்கதேவன்' என்ற பெயரில் பல கட்டுரைகளும் அதில் எழுதினேன். 'கணையாழி'யில் எழுத ஆரம்பித்ததும் இதே கட்டம்தான். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தொடர்புகளும் இவ்வேளையில் ஏற்பட்டன.

எண்பத்தோராம் ஆண்டு ஊரோடு வந்தேன். நானும் நண்பர்கள், புதுவை, செ. யோகநாதன், செம்பியன், சிறுப்பிட்டி பத்மநாதன் முதலியோர் சேர்ந்தமைத்த 'விசை' என்னும் இலக்கிய அமைப்பு, இரண்டே ஆண்டுகள் தான் செயற்பட்டாலும், எங்களுக்கு அது ஓர் குறிப்பிடத்தக்க களமாக அப்போது அமைந்தது.

அடுத்த முக்கிய கட்டம் - அநேகமாய் எல்லோருக்கும் போலவே

**சுவிஸ் 'வோ' மாநிலத்தில் அன்னை பூபதியின் 7-வது ஞாபகார்த்த எழுச்சிவிழா 5-6-95ல் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரால் நடாத்தப்பட்டது. "என்று தணியும் எங்கள் அன்னிய மோகம்" என்னும் தலைப்பின் கீழ் நடந்த கவியரங்குக் காட்சி.**






**விடுதலைப் பாடல் ஒன்றுக்கு அபிநயிக்கும் சிறுமியர்கள்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



எனக்கும் - எண்பதுகளின் கடைக் கூற்றிலிருந்து தொடங்கிற்று. இந்தக் கட்டத்தில நண்பர் ராதேயனைக் கட்டாயம் குறிப்பிட்டாக வேண்டும்.

தொகுத்துப் பார்க்கையில், இது கால வரையிலான ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சிப் போக்கின் இயல்பான வெளிப்பாடுகளில் ஒன்றே என்னுடையதும் என்றுதான் படுகின்றது. உண்மையில் 'என்'னுடையது என்று சொல்ல என்ன இருக்கின்றது? எல்லாம் இந்த சமுதாயத்தின் சுயம்புவான வெளிப்படுத்தல்களே. 'நான்' வெறுங்கருவி. வழிகோலியவர்களும் சக பயணிகளுமெனப் பயணம் நெடுகிலும் பலரைச் சந்தித்தேன். விமர்சனங்களின் மூலம் இந்த 'என்' வளர்ச்சிக்கு வித்திட்டவர்களெனப் பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி மற்றும் ஏ. ஜே. கனகரட்ணா, நா: சுப்பிரமணியன், சபா. ஜெயராசா, சோ. கிருஷ்ண ராஜா எனப் பலர் வாய்த்தமை என் பேறு.

*** ஒரு காலத்தில் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கியஸ்தராகவும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராகவும், சிங்கள, தமிழ் தேசிய ஒருமைப்பாட்டுக்கு முன்னின்று உழைத்த தாங்கள், அன்று தொட்டே தமிழ்த் தேசிய உணர்வு மிக்கவராகவும், தமிழர்களுக்கென்று ஒரு நாடு வேண்டுமென்றும் உழைத்தும் எழுதியும் வருகின்றீர்கள். இந்த நிலையைத் தங்களுக்குள் ஏற்படுத்திய ஏதுகாரணிகள் எவை?**

* உங்களுடைய இந்தக் கேள்விக்கு ஒரு நாவலைத்தான் நான் பதிலாகத் தர வேண்டும்...

நான் பிறந்ததற்கு அடுத்த ஆண்டு இலங்கை 'சுதந்திரம்' பெற்றது. நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டே நானும் வளர்ந்தேன். 56 - பிறகு 58 - கொழும்பிலிருந்து கப்பலேறி வந்த எங்கள் வகுப்பில் சேர்ந்த நண்பர்கள்; அவர்கள் சொன்ன கதைகள். பிறகு கச்சேரி சத்தியாக் கிரகத்தின்போது பள்ளியிலிருந்து ஊர்வலம் போனோம். ஐயா, தடித்த தமிழரசு. ஆனால் என்னை அது கவரவில்லை.

வவுனியா சுந்தரலிங்கம் தான் ஆரம்பத்தில் என்னை ஈர்த்தவர். 'டெயிலி மிரரி'ல் அவரின் கட்டுரைத் தொடரைப் படிக்க முயன்று வந்தேன். என்றாலும், ஆலயப் பிரவேச பிரச்சினைகளால் அவரின் சமூகக் கண்ணோட்டம் எனக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை.

எழுபது மட்டில் என்று நினைக்கிறேன் - அப்போது யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்றுக்கொண்டிருந்த சில புதிய போக்குகளுடன் தொடர்பு ஏற்படுத்தவென்று கட்டுப்பெத்தை நண்பர்களுடன் வந்து ஒரு நாள் முழுவதும் கீரிமலையில் காத்துக்கொண்டிருந்தும் கைகூடவில்லை.

மட்டக்களப்பு நண்பர்கள் சச்சி, ஜெயாவுடன் இதே போன்றதொரு அலுவலுக்காக அங்கு புறப்பட்ட வேளையில், 71-ன் சேகுவாரப் பிரச்சினை வந்து தடுத்தது.

பிறகு, ஊர்காவற்துறை வீ. நவரத்தினம், எழுபதுகளின் தொடக்கத்தில், நம்பிக்கை ஊட்டுபவராகத் தெரிந்தார். 'விடுதலை' என்ற பத்திரிகை கூட அப்போது வெளிவந்தது. ஆனால், அதுவும் நிலைக்கவில்லை.

தந்தை செல்வாவை அவரது கொள்ளுப்பிட்டி இல்லத்தில் சந்தித்துப் பேசினோம். திருப்தி வரவில்லை.

இளமையின் துடிப்பு, இலட்சிய வேகம், எதையும் உதிரியாக - தனி மனிதனாக நின்று சாதிக்க முடியாது என்னும் போதம்- இவற்றால், ஒரு அரசியல் அமைப்போடு சேர்ந்துகொள்ள வேண்டும் என்பது தவிர்க்க முடியாததாயிருந்தது. என்றாலும், எவரோடும் இனங்காண முடியாத தவிப்பு மிகுந்தது. நண்பர்களும் ஒவ்வொருவராக மேற்படிப்பு, உத்தியோகம் - என்று பிரிய வேண்டியிருந்தது.

இன்றைய வாழ்க்கை கஷ்டம் மிகுந்ததென்று எவர் சொன்னது? சரியான வழி தெளிவாகத் தெரிகிறது. நேரே நடக்க வேண்டியது தான். கஷ்டமான விஷயமென்னவென்றால், சரியான வழியைக் கண்டுபிடிப்பதுதான். இன்றைய தலைமுறையினருக்கு இந்தக் கஷ்டம் இல்லை. ஆனால், போன தலைமுறையைச் சார்ந்த எங்களுக்கு அது இருந்தது. சரியான பாதையைக் கண்டுபிடிக்கும் கஷ்டம். நாங்கள் இருளிற் குழம்பினோம். இன்று, பாதை தெளிவாகத் தெரிகிற வெளிச்சம் வந்திருக்கிறது.

ஒரு விதத்தில், நானும், நண்பர்கள் புதுவை, செ. யோகநாதன் ஆகியோரும் ஒரே விதமான பாதைகளைக் கடந்து வந்தவர்கள் தான்.

பாதை பற்றிச் சொல்கிறபோது கோவை. மகேசன் அவர்கள் ஒரு முறை எனக்குக் கூறியது நினைவுக்கு வருகிறது. 'நீரும் நானும் வெவ்வேறு வழிகளில் போய்க் கொண்டிருந்தாலும் ஒரே இடத்திற்குத்தான் போய்க் கொண்டிருக்கிறோம்' என்றார் அவர்.

அப்போது என் முன்னாலிருந்தவை இரண்டு: ஒன்று, தமிழரசுக் கட்சி, மற்றது கம்யூனிஸ்ட் கட்சி. 'அவர்களோடு சிலது ஒத்துப் போகிறது, இவர்களோடு சிலது ஒத்துப் போகிறது. எவரோடும் என்னை முழுமையாக இனங்காட்ட முடியவில்லை' என்ற அந்தரம் இருந்தது. அதை எழுதவும் செய்தேன்.

வி. பொன்னம்பலத்துடன் சேர்ந்து 'செந்தமிழர் இயக்கத்'தை அமைத்தோம். அதன் பெயர், முதலில், 'தமிழ் ஈழக் கம்யூனிஸ்ட் கட்சி' என்றே உத்தேசிக்கப்பட்டிருந்தது. பிறகு, ஏனோ பொன்னம்பலம் அதனை 'செந்தமிழர் இயக்கம்' என மாற்றினார். வெகு விரைவில் அதுவும் கலைந்து போனது.

இந்த வேளையில், கம்யூனிஸ்ட் கட்சி, தனது முந்திய கால நடவடிக்கைகளை சுயவிமர்சனஞ் செய்திருந்ததுடன், 'தமிழர்கள் ஒரு தனித் தேசிய இனம்' என்றும், 'பிரிந்து செல்லும் உரிமை உட்பட சுயநிர்ணய உரிமை அவர்களுக்கு உண்டு' என்றும் பிரகடனம் செய்திருந்தது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


என் அபிலாசைகளுக்கு மிகக் கிட்டியதாக இதைவிட வேறெந்தக் கொள்கையும் அப்போது வெளிப் படையாக வைக்கப்படவில்லை என நினைக்கிறேன். இதனாலும், எமது இலக்கியப் போக்குகளில் இயல்பாகவே இடம்பெற்றிருந்த இடதுசாரித் திசையமைவுகளாலும் நான் கம்யூனிஸ்ட் கட்சியைத் தேர்ந்தெடுத்தேன்.

தமிழர்கள் சுரண்டப்படுவதற் கும் ஒடுக்கப்படுவதற்கும் எதிராக என் குரலை உயரத்திக் கொண்டி ருந்த வேளையில், நான் ஒற்று மைக்கு எதிரானவனாகவும் இருக்க வில்லை. எல்லா எல்லைப்பாடுக ளையும் மீறிய ஒரு மனிதனாகவே என்னை நான் காண முயன்றேன். ஆனால், அது எப்போதும் அசாத் தியமாகவே இருந்தது. இந்தத் தீவின் யதார்த்தம் என்னை அதற்கு அனுமதிக்கவில்லை. 'நீ தமிழன்' என்று எனக்கு அது ஒவ்வொரு விதத்திலும் நினைவூட்டிக் கொண்டே இருந்தது.

'சர்வதேசியம்' என்பதன் அர்த் தம், தேசமே இல்லாத அகதி என்ப தல்ல என்பதை நான் அன்றும் இன்றும் நன்றாகவே உணர்ந்திருக் கிறேன். ஒற்றுமைக்கு உழைத்த வேளையிலும் கூட, 'தேசிய ஒருமைப்பாடு' என்பது பிழையான சொற் பிரயோகம் எனவும், 'இனங் களுக்கிடையேயான ஒற்றுமை' என்பதே சரி எனவும் வாதிட் டேன். ஏனெனில், இலங்கைத் தீவில் இரண்டு தேசிய இனங்கள் இருப்பதை மாக்ஸிய அளவுகோல் கள் வரையறுத்துத் தெளிவாகவே காட்டியிருந்தன.

இதே அளவுகோல்களின்படி, 'தமிழர்கள் ஒரு தமிழ் தேசிய இனம். அவர்களுடைய சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட முடியாது. எந்தவிதச் சுரண்டல்கள், பாகுபாடு கள், அடக்குமுறைகள், அடிமைத் தனங்களுக்கும் ஆளாகாமல், இறைமையோடும் கௌரவத் தோடும் தாங்கள் வாழ எந்த வழி ஏற்றது என்பதைத் தெரிவு செய்கிற சுதந்திரம் அவர்களுக்கு உண்டு. எந்த விதத்திலென்றாலும் அவர்க ளுக்கு நியாயமும் பாதுகாப்பும் இருக்கவேண்டும்'- என நான் எழுதினேன்.

'ஒற்றுமை' என்பது எனது இந்த அடிப்படை நோக்கிற்கு மாறானதா யிருந்தால் அடுத்த தீர்வு என்ன என்பதிலும் நான் மிகமிகத் தெளி வாக இருந்தேன்.

இந்த நிலைப்பாடு 81-ல் பிரசுர மான எனது நெடுங்கதையான 'கிருஷ்ணன் தூதி'லிருந்து 92-ல் 'வெளிச்சம்' இதழில் வெளியான 'மூண்டெரியுந் தீயின் மூலப்பொறி' வரை தெளிவாகச் சொல்லப்படு கிறது.

முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தைப் பொறுத்தவரை, அது ஒரு பரந்த அமைப்பாக - பல்வேறு பட்ட சிந்தனைகளும் போக்குக ளும் கொண்டவர்களை உடைய தாக இருந்தது. ஒரு அடிப்படை நோக்கில் ஒன்றுபட்டுச் செயற் பட்ட இவர்களுக்கிடையே இருந்த முரண்பாடுகள், வித்தியாசமான போக்குகள் என்பவை வெளித் தெரியுமளவிற்கு சங்கத்தின் செயற் பாடுகள் ஆழமாக அமையவில்லை. இலக்கியத்தின் சமுதாயக் கட மையை ஏற்றுக்கொண்ட எழுத் தாளர்கள் எல்லோரும் அதிற்

## வேண்டாத புன்னகை

பலரை இங்கு காணவில்லை
தேர்ந்த கவிஞர்கள்
ஆருயிர் நண்பர்கள்
சிறிதளவு பழகியவர்கள்
நலமுடன் வாழ்க.

பாபம் செய்பவர்களை
மோதி மிதித்துவிடுதலும்
அவர் முகத்தில் உமிழ்ந்து விடுதலுமே
எமது தாரக மந்திரம்.

இதை மறந்தவர்கள்
'அட்ஜஸ்ட்' பண்ணத் தெரியவில்லையே
என்பவர்கள் போய் வருக.
சேர்ந்தவுடன்
பெரிய மேடையாகப் போடுங்கள்
ஓங்கி முழங்குங்கள் பாரதி குரலை
பத்து நாட்கள் நடத்துங்கள் விழாவை
மின்விளக்குகளின் ஒளியில்.

உங்கள் சரிகை வேட்டிகள் ஒளிரட்டும்.
இல்லாதவர்கள் வாடகைக்கு எடுங்கள்
மன்றத்தில் வழக்கைத் தொடருங்கள்
உங்களுக்கா தெரியாது தலையங்கம் அமைக்க
பாரதி புரட்சிக் கவிஞனா? ஆன்மீகக் கவிஞனா?
பட்டிமன்றத்தில் முடிவெடுக்காதீர்கள்
பின்பு அதுவே உங்களுக்கு வசதியாக அமையும்.
எமக்கும் இந்தச் செய்திகள் கிடைக்கும்.
சிரித்துக் கொள்வோம்.
ஒரு நன்மை இருக்கிறது நீங்கள் போனதில்.

எமக்கு வேண்டாத புன்னகையொன்று
உதிர்த்திடத் தேவையில்லை
அதற்காக உங்களுக்கு நன்றி.

- மயன் -

www.tamileelamarchive.com

சேர்ந்து செயற்பட்டார்கள். சுரண்டல்கள், ஒடுக்குமுறைகளுக்கெதிராகத் தம் எழுத்துக்களை ஆயுதமாகப் பயன்படுத்த முனைந்த பலர் அதில் இடம்பெற்றார்கள்.

இன ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்குமெதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்த நானும் அதில் இருந்தேன். 'சாந்தன் வகுப்புவாதி, பிற்போக்காளன்' என வெளியிலிருந்தவர்களும் உதிரிகளும்தான் கூக்குரலிட்டார்களே யொழிய, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒரு தரமாவது அப்படிக் கூறியதுமில்லை; என்னை விமர்சித்ததுமில்லை. இதிலும் முக்கியமானது என்னவெனில், பிரச்சினைக்குரியதாகக் கருதப்பட்ட எனது 'அந்நியமான உண்மைகள்' கதை பிரசுரமானதன் பின்பும் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்னை உவந்தேற்றுக்கொண்டது.

இன ஒடுக்குமுறைகளை எடுத்துக் கூறும் என் கதைகள், முற்போக்கு முகாமிலிருந்தே வந்ததால், கூடுதல் கவனிப்பைப் பெற நேர்ந்தது என்பதையும் இங்கே மறுதலிக்க முடியாது.

✸ இன்றும் இலங்கைத் தேசிய மாயையுடன் இருக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்குத் தாங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

★ இன்று வரையான யதார்த்தங்கள் இவர்களுக்குப் புரிய வைக்காததையா நான் கூறிவிடமுடியும்?

யதார்த்தம் பற்றிப் பேசும், அவற்றை எழுத விழையும் எமது எழுத்தாளர்கள், அவற்றைப் புரிந்து கொள்வது அவசியம். மக்களுக்காகப் பேனா பிடிக்கிறோம் என்பவர்கள் மக்களின் அபிலாஷைகளை எப்படி மறுதலிக்க முடியும்?

ஒற்றுமை, சமாதானம் எல்லாம் நல்ல விஷயங்களே. எந்த ஒரு மனிதனும் விரும்பும் விஷயங்களே. ஆனால், இவையெல்லாம் எதில் தங்கியுள்ளன? நியாயத்தில், சமத்துவத்தில், சுதந்திரத்தில். இவையின்றி முன்னவை எப்படிச் சாத்தியமாகும்?

✸ அப்படிச் சாத்தியப்படாத பட்சத்தில் அடுத்தது என்ன?

★ சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் ஒரு தேசிய இனமே உள்ளாகி அகப்பட்டுக்கொண்டுள்ள வேளையில் ஏனைய சமூக நீதிகளை நாம் நிலைநிறுத்துவது எவ்வாறு? இதை மறந்து அல்லது புறக்கணித்து சமூக மேம்பாடு பற்றியெல்லாம் பேசிவிட முடியுமா?

தன்னுடைய இந்த வரலாற்றுக் கடமையினின்றும் வழுகி விடுகிறவன், எழுத்தாளன் என்ற சொல்லுக்கே அருகதையற்றவனாகி விடுகிறான்.

✸ 'புலம் பெயர்ந்தோர் இலக்கியம்' என்ற புதியதொரு சொற்பிரயோகம் அண்மைக்காலமாக வழங்கி வருகின்றது. ஈழத் தமிழரின் சர்வதேச இலக்கியப் புகழை புலம்பெயர் இலக்கியமே பெற்றுத்தரும் எனக் கூறப்படுகிறது. இது பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

★ இந்தப் 'புலம்பெயர்ந்தோர்' எனப்படுபவர்கள் யார்? எதற்காகப் புலம் பெயர்ந்தவர்கள்? இவர்கள் படைக்கும் 'இலக்கியம்' எது? அதற்கான உந்துதல்கள் எவை? இவ்வளவு தொகையான பருவ வெளியீடுகளை அவர்கள் உருவாக்குவது எப்படி? ஏன்? இவ்வளவு கேள்விகளையும் உங்கள் ஒரே கேள்வி என்னுள் எழுப்பி விடுகிறது.

புலம் பெயர்ந்தோர்களை நான்கு விதமாகப் பிரிக்கலாம் என நான் நினைக்கிறேன்.

முதலாவது வகை, இங்குள்ள நிலைமைகள் உக்கிரமடையும் முன்பே, வெளிநாட்டு மோகத்தால் மண்ணைத் தட்டிவிட்டுப் போனவர்கள். இரண்டாவது வகை, போராட்டத்திற்கு முகம் கொடுக்க முடியாது புறப்பட்ட அப்பாவிகள். மூன்றாவது வகை, இந்த நிலைமைகளைச் சுரண்டித் தம்மை வளர்த்துக்கொள்ள முயலும் ஒடுகாலிகள்.

இந்த மூன்றாவது வகையினரும் சேர்மதி இந்தப் புலம்பெயர் இலக்கியம் படைக்கிறோம் என்று பம்மாத்துப் பண்ணுகிறவர்களில். இவர்கள், மேல் நாடுகளின் வாழ்க்கைச் சொகுசு, போராட்டம் நடத்துகிறோம் என்ற பெருமை - இரண்டையும் ஒரே சமயத்தில் பெற விரும்புகிறவர்கள். அதுவும் நோகாமல் நொடியாமல், போன இடத்தில் இவர்கள் தங்கள் பாட்டுக்குச் சந்தோஷமாக இருக்கட்டும்; பரவாயில்லை. ஆனால் அதை விட்டிட்டு, இலக்கியம் படைக்கிறோம், ஈழத்தை உருவாக்குகிறோம் என்றெல்லாம் செப்படி வித்தை காட்டக்கூடாது.

இவர்களுடைய இந்த வேலையில் இரட்டைத் 'தப்புதல் தன்மை' இருக்கலாமெனவும் எனக்குப் படுகிறது. முதலாவது, மனச்சாட்சியுள்ள எந்த ஒரு பிரஜைக்குமுரிய பொறுப்புக்களிலிருந்து தப்பி ஓடினார்கள். இரண்டாவது, வரலாறு தம்மீது சுமத்தப் போகும் குற்றச்சாட்டிலிருந்து தப்புவதற்காக - தாங்களும் ஏதோ செய்கிறார்களெனத் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்வதற்காக - ஏதோ எழுதுகிறார்கள். இந்த 'இலக்கியம்' என்ன செய்ய முடியும்?

இந்த எழுத்துக்களில் இரட்டைத் தப்புதல் மட்டுமன்றி, இரட்டைச் சுரண்டலும் இருப்பதாகப் படுகிறது. அடைக்கலம் கொடுத்த நாடுகளைச் சுரண்டி வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொள்வது முதலாவது. தாங்களும் போராடுகிறோம் என்று சொல்லி, எமது மண்ணின் எரியும் நிலைமைகளைச் சுரண்டி 'இலக்கியம்' படைத்து, பெயர் புகழ் தேட முயல்வது இரண்டாவது. இந்த எழுத்துக்களை 'சுரண்டல் இலக்கியம்' என்று தான் சொல்ல முடியும்.

குண்டும் ஷெல்லும் எப்படி இருக்குமென்று இவர்களா எங்களுக்குச் சொல்லித் தருவது? இவர்கள் ஒன்று வேண்டுமானால் செய்யலாம்.

அங்கங்கே தமக்குக் கிட்டுகிற அனுபவங்களை வேண்டுமானால் எழுதட்டும். அது பரவாயில்லை. ஆனால், அதிலும் ஒரு சேட்டை இருக்கிறது. 'பார், பார், முன்பெல்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

லாம் அணில் கோதுவதைப் பற்றித் தானே பாடினேன். இப்போ, அப்பிள் பழத்தை அணில் கோதுவதைப் பாடுகிறேன் பார்!' என்று கெட்டித்தனம் காட்டுகிற சேட்டை இருக்கிறது.

நான்காவது வகை இனி வருகிறது.

இவ்வளவு காலமும் 'போராட்டம் போராட்டம்' என்று அறைகூவி விட்டு, போராட்டத்தை எதிர்கொண்டுள்ள இந்தப் பொறுத்த வேளையில் எதற்கென்றே இல்லாமல் தடம் புரண்டு - தம் அடிப்படை நோக்கத்தையே மறந்து - புறப்பட்டவர்கள். அந்த இலட்சியத்தை ஊறுபடுத்தும் விதமாக எழுதி வருபவர்கள். இவர்கள் நடத்துவது நிழல் யுத்தம். எதற்கெதிராய் என்றே தெரியாத இந்த எழுத்துக்களும் என்ன செய்யும்?

இன்னுமொன்றை முக்கியமாக மனதில் கொள்ளவேண்டும். புகழுக்காக படைக்கப்படுவதல்ல இலக்கியம். அது மக்களுக்காகப் படைக்கப்படுவது. அந்தந்த மண்ணிலிருந்து அந்தந்த மக்களோடு, அந்தந்த வாழ்வினடியாகத்தானே பிறப்பது. அதை விட்டு, மண்ணையும் மக்களையும் யதார்த்தத்தையும் புறக்கணித்துச் சென்றவர்கள் ஆக்குவது எப்படி இலக்கியமாகும்? அது இலக்கியமில்லை என்றாகும் போது, பிறகென்ன சர்வதேசப் புகழ்?

இலக்கியம் ஒரு புறம் இருக்கட்டும். தங்களின் அடுத்த தலைமுறை தங்கள் மொழியையும் பண்பாட்டையும் இழந்துவிடாமல் காப்பாற்றுவது இவர்களுக்கு எவ்வளவு தூரம் சாத்தியப்படப் போகிறது? கடலிற் கரைந்த புளியாக இவர்களின் தனித்துவமும் கரைகிற ஆபத்து நிதர்சனமானது - இந்த நிலைமையில் இலக்கியம்? யாருக்கு அது?

✹ **போராடும் எம் தேசத்தில், போராடும் இக் காலத்தில் வாழும் கலைஞனோ, எழுத்தாளனோ, கவிஞனோ எப்படி வாழவேண்டும்? எந்த வகையில் இப் போராட்டத்துக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டுமென நீங்கள் விரும்புகிறீர்கள்?**

★ எல்லாவற்றுக்கும் முதல், ஒரு நல்ல பிரஜையாக, மற்றவர்களுக்குச் சரியான முன்னுதாரணமாக அவன் வாழ்ந்து காட்டவேண்டும்.

போராட்ட இலட்சியத்திலும் அதன் வெற்றியிலும் விசுவாசம் மிக்கவனாக அமைய வேண்டும்.

பிறகு படைப்பாளியாக, முடிந்த விதங்களிலெல்லாம் - தன் கலையாற்றலை தேச விடுதலையை முன்னெடுப்பதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

தேச நிர்மாணத்தில் தன் பங்கு, பணி பற்றிய பொறுப்புணர்வும் பெருமையும் மிக்கவனாக மிளிர வேண்டும்.

✹ **ஆசிரியராக, தொழில்நுட்பவியலாளராக, எழுத்தாளராக, மொழிபெயர்ப்பாளராக எல்லாம் செயற்படுகிறீர்கள் - இதில் தங்கள் பிரியத்திற்குரிய துறை எது?**

★ எழுத்துத்தான் - என்றாலும், எல்லாத்துறைகளுமே பரஸ்பரம் பரிமாணங்களை அகலிக்க உதவுவதுடன், ஒட்டுமொத்தமாக எனது தளவிசாலிப்புக்கு உதவுகின்றன.

✹ **எங்களின் விடுதலைப் போராட்டம் தங்களுக்கு ஏற்படுத்தியுள்ள உணர்வுகள் எவை?**

★ முன்னர் இருந்த நிலைமைகளில் 'எமக்கென்றொரு நாடு' என்பதே எட்டாக் கனவாக இருந்தது. ஆனால், இன்றோ, எமது இளைய தலைமுறையினரின் இந்த உலகே கண்டிராத எழுச்சியையும், ஓர்மத்தையும், அதன் பிரமிக்கத்தக்க வழிநடத்தலையும் நேருக்கு நேரே தரிசிக்கிறபோது, 'எம்முடைய நாடு உலகிற்கே வழிகாட்டும்' என்ற நம்பிக்கை எழுவது தவிர்க்கமுடியாதது ஆகிறது.

எங்கள் போராட்டம் என்னும் போது, இதில் தங்களை ஆகுதியாக்கிக் கொள்கிற அதிமானிடர்கள், வெறுமனே ஒரு அரசியல் சுதந்திரத்தை மட்டும் நாடி நிற்பவர்களாக எனக்குப்படவில்லை. வாழ்வின் முழு விடுதலையையே அவாவி, மனித வாழ்வின் அர்த்தத்தையே தேடி நிற்பவர்களாகவே படுகிறது.

உலக வரலாற்றில் இடம்பெற்ற எத்தனையோ வீரங்களும் தியாகங்களும் எம்மைப் பிரமிக்க வைத்ததுண்டு. ஆனால், இன்று எங்கள் கண்முன்னே நடப்பவை, அவற்றையெல்லாம் பகலில் விளக்குகளென ஆக்கிவிட்டிருக்கின்றன. இவையெல்லாம் இலக்கியமாக்கப்பட வேண்டும். எப்படி எங்கள் போராட்டம் உலகிலேயே பெருமைக்கும் சிறப்பிற்குமுரியதாய் உள்ளதோ, அதேபோல அதனடியாய் எழுகிற இலக்கியமும் அமையும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

■■■

## வைர மரம் வீழ்ந்ததென வாடுகிறோம் ஐயா

ஐயா பாவல ரேறே!
பெரும் புலவீர் உங்கள்
கைதாங்கி நின்ற
ஒரு பேனாப் புலிநகத்தால்
செய்த தமிழ் இன்று
உறுமித் தமிழ் காக்கும்
பெய்த மழை போல
பயன்பட்டு வாழ்கின்றீர்!

பெருஞ்சித்திரனாரே!
பெருங் கவியே நாம் மறவோம்
அரும்பாடு பட்டு
அழகுத் தமிழ் வளர்த்தீர்
வருங்காலம் உங்கள்
வரலாற்றை வரைந்துவைக்கும்
திரும்பாது கொள்கையிலே
இறுதிவரை நின்றவர் நீர்

தமிழீழம் அதன் தலைமை
இரண்டையுமே ஏற்றீர்
எழும் அரச பெருங் கொடுமை
இருண்டசிறை பார்த்தீர்
விழுந்தமரம் வைரமாக
மாறுதலாய் சொல்வர்
வைரமரம் வீழ்ந்ததென
வாடுகிறோம் ஐயா!

- அமுதநதி சுதர்சன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# ஐயத்துமும் அர்த்தமும்

அவர் ஒரு சிறந்த நாவலசிரியர். பிரபல நாடகாசிரியர். இலக்கிய விமர்சகர். நோபல் பரிசுபெற்ற இலக்கிய கர்த்தா.

அவர் ஒரு அரசியற் சிந்தனையாளர். மனிதத்துவவாதி. மார்க்சியவாதி.

அவர் ஒரு தத்துவாசிரியர். தத்துவத்தில் வித்தகர். பிரஞ்சு இருப்பியத்தின் பிரதம குரு.

அவர்தான் ஜோன் போல் சாத்தர். (JEAN PAUL SARTRE, 1905-1980). அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக ஐரோப்பிய கருத்துலகை ஆட்டிப்படைத்தவர். பெரும் சிந்தனைப் புயல்களுக்கு மையமாக நின்றவர். தனித்து நின்று கம்யூனிச உலகத்துடன் கருத்துப்போர் தொடுத்தவர். இருப்பு என்னும் பேரியக்கத்தில் தனி மனித இருப்பிற்கு முதன்மை கொடுத்தவர். தனிமனிதனின் இருப்பும் அவனது வாழ்வனுபவமுமே, பேருண்மைக்குப் பொருளையும் அர்த்தத்தையும் கொடுப்பதாகச் சொன்னவர். சமூக வரலாற்றுக் காவியத்தில் தனிமனிதனின் அடையாளத்தைப் பொறித்துவிட முனைந்தவர்.

சாத்தரின் படைப்புலகம் பெரிது. எழுத்துக் கலையை ஒரு உன்னத சமூகப்பணியாக வரித்து அவர் ஓய்வில்லாமல் எழுதிக் குவித்தார். தத்துவமாக, நாவலாக, நாடகமாக, வாழ்க்கை வரலாறாக, சுயசரிதமாக, கட்டுரையாக செறிந்துகிடக்கும் சாத்தரின் பரந்த சிந்தனையுலகை சுருக்கிச் சொல்வது சிரமம். மிகவும் கனமான, பூடகமான, சிக்கலான மொழியில் அவர் எழுதினார். அர்த்த பரிமாணங்களின் எல்லைக்கோட்டிற்கு அப்பால் வார்த்தைகளை நெகிழ்த்திச் சென்று சொற்சிலம்பாடுவதில் அவர் ஒரு விற்பன்னர். இலக்கியத்திலும் தத்துவத்தைப் புகுத்தினார். கருத்துகளின் குறியீடுகளாக கதாபாத்திரங்களைப் படைத்தார். விவாதமேடைகளாக நாடகங்களை எழுதினார். உரையாடல்களில் தத்துவ விசாரணைகளை எழுப்பினார். இருப்பிய சிந்தனையின் கலைவடிவங்களாக அவர் இலக்கியத்தைச் சிருஷ்டித்தார்.

மனிதத்துவத்தின் மையத்தில் நின்றபடி சாத்தர் தன்னை ஒரு இருப்பியவாதியாக இனம் காட்டிக் கொண்ட போது, அவரது உலகப் பார்வையில் பல சிந்தனை உலகங்கள் சங்கமித்து நின்றன. காலத்திற்கு காலம், வெவ்வேறு தத்துவ தரிசனங்களால் அவர் ஆகர்ஷிக்கப் பட்டார். இதனால், காலத்திற்கு காலம், அவரது உலகப்பார்வை மாற்றம் கண்டது. அத்தோடு அவர் வாழ்ந்த காலமும், இடமும் புறநிலைச் சூழலும், அந்தக்காலத்தில் கட்டவிழ்ந்த வரலாற்று நிகழ்வுகளும் அவரது சிந்தனையோட்டத்தில் திருப்பங்களை நிகழ்த்தின.

சாத்தரை சரிவரப் புரிந்துகொள்வதாயின் சாத்தரை ஆட்கொண்டு நின்ற சிந்தனை உலகங்களை தெரிந்துகொள்வது அவசியம். சாத்தரின் சிக்கலான மொழிநடையையும், அவரது ஆழமான தத்துவப் பார்வையையும் கிரகித்துக் கொள்வதற்கு இது முக்கியம். சாத்தரை ஈர்த்த சிந்தனை உலகங்கள் என்ற வரிசையில், ஹுசேளின் உணர்வாய்வுத் தத்துவம் (HUSSERL'S PHENOMENOLOGICAL PHILOSOPHY), கைடேகரின் இருப்பியம் (HEIDEGGER'S EXISTENTIALISM), ஹேகலின், இயங்கியல் (HEGEL'S DIALECTICS), பிராய்டின் மனப்பகுப்பியல் (FREUD'S PSYCHOANALYSIS), மார்க்சின் வரலாற்றுப் பொருளியம் (MARX'S HISTORICAL MATERIALISM) ஆகியன வற்றை குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஹுசேளின் சிந்தனைகள் சாத்தரின் ஆரம்பகால எழுத்துக்களை ஆக்கிரமித்து நிற்கிறது. ஹுசேள் ஒரு ஜேர்மானிய தத்துவாசிரியர். அவரது தத்துவம் மனித புலனானுபவத்தை கூர்மையாக விசாரணை செய்கிறது. புலன்களின் வெளிச்சத்தில் புலனாகும் இந்த உலகத்தின் தோற்றப்பாட்டை மிகவும் நுண்ணியமாக ஆராய விழைகிறது. பட்டுணர்வின் பண்புகளை விளக்க முனைகிறது.

எனது அகவுலகம் வாயிலாகவே நான் புறவுலகத்தை பட்டுணர்ந்து கொள்ளுகிறேன். எனது அகமானது ஒரு திட்பநுட்பமான அளவுகோல் அல்ல. அது ஒரு களங்கப்பட்ட கண்ணாடி. கடிவாளம் பூட்டிய குதிரை. அது பழைமையில் கட்டுண்டு கிடக்கிறது. மூடநம்பிக்கைகளில் மூழ்கிப்போயிருக்கிறது. ஏற்கனவே திணிக்கப்பட்ட எண்ணற்ற அனுமானங்களில் சிறைபட்டுக் கிடக்கிறது. இந்த மாசுபடிந்த மனத்தினால் பிற உலகின் மெய்யுண்மையை கண்டு கொள்ள முடியாது. மனமானது முதலில் தூய்மை பெறவேண்டும். பழைமை, பொய்மை என்ற தளைகளிலிருந்து விடுதலை பெறவேண்டும். அனுமானங்களிலிருந்து விடுபடவேண்டும். தூய்மையான பிரக்ஞை மூலமே துல்லியமான பார்வை சாத்தியமாகும். அந்தக் களங்கமற்ற வெளிச்சத்தில் தான் தீட்சண்யமான அறிவைப் பெறலாம். வெறும் தோற்றப்பாட்டின் பின்புலத்திலுள்ள மெய்யுண்மையைக் கண்டுகொள்ளலாம்.

பட்டுணர்வை கூர்மைப்படுத்தும் நுட்பமான ஆய்வுமுறைமையாக ஹுசேளின் தத்துவம் அமைகிறது. கருத்துருவங்கள், கற்பிதங்களிலிருந்து மனதைச் சுத்திகரித்து

**பிரம்மஞானி**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அந்தக் களங்கமற்ற கண்ணாடியில் காட்சிதரும் மெய்யுலகை, அப்படியே விபரித்துக் கூறும் புதுமையான உத்தி ஒன்றை அவர் விளக்கிக் காட்டுகிறார்.

ஹுசேளின் உணர்வாய்வுத் தத்துவம் இருப்பியல்வாதிகள் பலரைக் கவர்ந்துகொண்டது. மனிதானுபவத்தை, மனவுணர்வுகளை ஆழமாக விபரித்துக்கூற இந்தப் பார்வை ஒரு சிறந்த வழிமுறையாக விளங்கிற்று. ஹுசேளின் சிந்தனை, சாத்தரின் ஆரம்பகால எழுத்துக்களை ஆக்கிரமித்து நிற்கிறது.

குமட்டல் (NAUSEA) என்ற சாத்தரின் முதலாவது நாவலும், இருத்தலும் இல்லாமையும் (BEING AND NOTHINGNESS) என்ற அவரது ஆரம்பகால தத்துவ நூலும் ஹுசேளின் தரிசனத்தை தழுவி நிற்கும் படைப்புகள்.

NAUSEA ஒரு பரிசோதனை நாவல். நனவோடை உத்தியில் எழுதப்பட்டது. உணர்வு நிலைகளை படிமங்களில் சித்தரித்துக் காட்டமுனையும் ஒரு வித்தியாசமான படைப்பு.

கதாநாயகன் ஒரு தனியன். வாழ்வோட்டத்திலிருந்து அந்நியப்பட்டு நிற்பவன். வேரற்ற உறவற்ற மனிதன். வாழ்வை அபத்தமாகக் காண்பவன். மற்றவர்களை வெறுப்பவன். தனது மனக்குகையின் அந்தரங்க மாளிகையில் வாழ்பவன். முன்பின் தெரியாத அந்தப் பட்டினத்துக்கு வருகிறான், ஒரு பிரபுவின் வாழ்கைக் குறிப்பு எழுதுவதற்கு. எதிலும் மன இருப்புக் கொள்ளவில்லை. மனவுளைச்சலில் அலைகிறான். பட்டினத்துப் பூங்கா அவனுக்குத் தஞ்சம் கொடுக்கிறது. பிரமாண்டமான ஒரு விருட்சத்தின் முன்பு அமர்ந்து கொள்கிறான். அதிலிருந்தபடி சிந்தனையில் ஆழ்ந்துபோகிறான். அவனது மனம் உலகத்தை அசைபோடுகிறது. அகமும் புறமும் புணர்ந்துகொள்ளுகிறது. அந்தப் புலனானுபவத்தில் திடீரென அவனுக்கு ஒரு புத்துணர்வு பிறக்கிறது.

என்றுமில்லாதபடி மனம் விழிப்புக்கொள்ளுகிறது. மனத்திரை விலகிக்கொள்கிறது. பொருட்களில் ஒட்டியிருந்த வார்த்தைகள் கழன்று விழுகின்றன. பூச்சுக்கள் அழிந்து போகிறது. குறியீடுகள் அர்த்தமிழந்து செத்துப்போகின்றன. மனமானது இயற்கை மீது போர்த்திருந்த ஆடைகள் அவிழ்ந்து விழ, பொருட்கள் பொருளிழந்து விடுகின்றன. அந்தப் பெருமரமும் அதன் பருத்த முறுக்கேறிய வேர்களும், நிலத்தின் மேல் படுத்திருக்கும் அந்தப் புற்தரையும், பூச்செடிகளும், பூங்காவின் கதவுகளும், ஆங்காங்கே குந்தியிருக்கும் ஆசனங்களும், எல்லாமே தத்தம் தனித்துவத்தை இழந்து மறைந்துபோக, வெறும் தோற்றப்பாடு மட்டுமே தெரிகிறது. திடீரென, இருப்பானது தனது நிர்வாண தோற்றத்தில் அவனுக்கு காட்சி கொடுத்தது. எங்கும் எல்லாம் அவனைச் சூழ அடையாளமற்ற உருவங்களாக, பொருண்மத் திரள்களாக, பிண்டங்களாக, பூதாகரத் தோற்றம் கொண்டது. இந்தத் திடீர் வெளிப்பாட்டினால் சாத்தரின் கதாநாயகன் கலங்கிப்போகிறான். இருப்பின் மெய்த்தோற்றம் அவனுக்கு பயத்தைக்கொடுத்தது. அருவருப்பை எற்படுத்தியது. குடல் புரண்டு குமட்டியது. இருப்பின் தரிசனம் அவனுக்கு அங்கலாய்ப்பை ஏற்படுத்துகிறது. அதற்கும் அவனுக்கும் என்ன உறவு? அந்த உறவில் என்ன அர்த்தம்? அவனால் ஒன்றும் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

"இந்த உலகில் இருப்புக் கொள்வதெல்லாம் காரணமெதுவுமின்றித் தோன்றுகிறது. பலவீனத்துடன் நிலைத்திருக்க முனைகிறது. தற்செயலாகச் செத்துப்போகிறது. ஏன், எதற்காக, இந்த உலகம் தோற்றம் கொண்டது? இருப்பிற்கு பதிலாக இல்லாமை இருந்திருக்கலாம் அல்லவா. எதையுமே என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.'' அவன் சிந்திக்கிறான். இருப்பு அபத்தமாகத் தோன்றுகின்றது.

இறுதியில் தனது வரலாற்று ஆய்வைக் கைவிட்டு அந்தப் பட்டினத்திலிருந்து வெளியேறுகிறான். புகையிரத நிலையத்தில் தனது எதிர்காலம்பற்றி கவலைகொள்கிறான். அபத்தமான வாழ்க்கையில் அர்த்தம் காண்பது எப்படி எனச் சிந்திக்கிறான்.

சிருஷ்டிப்புக் கலைதான் உன்னதமானது. கலைஞனாக வாழ்வதில் தான் அர்த்தமிருக்கிறது. படைப்புத் தொழிலில் ஒருவன் தனது இருப்பின் அடையாளத்தை நிலைநிறுத்துகிறான். தனது வாழ்வனுபவத்தை மற்றவர்களுக்கு உணர்த்திவிடுகின்றான். இறந்தபின்னரும் தனது சுவட்டை இந்த உலகத்தில் விட்டுச்செல்கிறான். ஒரு நாவல் எழுத வேண்டுமென கதாநாயகன் உறுதி செய்து கொள்வதுடன் தனது நாவலை முடிக்கிறார் சாத்தர்.

'குமட்டல்' என்ற இந்த நாவல் சாத்தரை பிரஞ்சு இலக்கிய உலகில் அறிமுகப்படுத்தியது. கலைவடிவத்தில் தத்துவத்தை விளக்கும் பரிசோதனை முயற்சியாக அவர் இந்த நாவலை எழுதினார். கமு

**நேற்று வரையும் வாழ்ந்த வாழ்வு**
**நெருப்பில் எரிந்து சாகட்டும்**
**சோற்றுக்காகச் சுதந்திரம் விற்றார்**
**என்ற பழிச் சொல் மாறட்டும்**



www.tamileelamarchive.com

வின், அன்னியனுக்கும், சாத்தரின் குமட்டலுக்கும், சில ஒருமைப் பாடுகளைக் காணலாம். ஆனால் அடிப்படையில் வேறுபாடுகள் உண்டு. இரு கதாநாயகர்களும் வாழ்க்கையில் விரக்திகொண்ட அபத்த மனிதர்கள். கமுவின் கதா நாயகனுக்கு மரணத்தின் வாயிலில் ஞானோதயம் பிறக்கிறது. வாழ்வின் அர்த்தத்தை அவன் உணர்ந்து கொள்கிறான். ஆனால் சாத்தரின் கதாநாயகனுக்கு இருத்தல் அசிங்க மாகத் தெரிகிறது. இருத்தலின் வெளிப்பாடு அருவருப்பைத் தோற்றுவிக்கிறது. வாழ்வு அபத்தமாக இருப்பினும் எழுத்தில் அர்த்தத்தைக் காணலாம் என்ற முடிவுக்கு வருகிறான். இருப்பு பற்றிய ஒரு எதிர்மறையான சித்திரிப்பை இங்கு சாத்தர் தருகிறார். ஆனால் நாவலின் மையக்கருத்து வேறு. மனித மொழிக்கும், அந்த மொழியால் மனிதன் உருவகப்படுத்த முனையும் மெய்யுலகத்திற்கும் மத்தியில் பெரிய விரிசல் உண்டு. சொற்களால், கருத்துருவங்களால் மனிதன் கட்டியெழுப்பும் உலகம் வேறு. மெய்யுலகம் வேறு. வார்த்தைகளுக்கு அப்பாலான, கருத்துகள், அனுமானங்களுக்கு அப்பாலான தூய்மையான பிரக்ஞையில் இருத்தலின் மெய்மையைக் கண்டுகொள்ளலாம். ஹுசேளிடம் உள்வாங்கிய இந்தத் தத்துவமே நாவல் வடிவம் எடுத்திருக்கிறது.

பிந்திய ஒரு காலகட்டத்தில், அதாவது 26 ஆண்டுகளுக்குப் பின்னர் சாத்தர் தனது முதலாவது நாவலை கடுமையாக விமர்சித்திருக்கிறார். "உலகம் பற்றிய அன்றைய பார்வையில் எனக்குத் தெளிவு இருக்கவில்லை. இன்று மெய்யுலகின் உண்மைநிலையை என்னால் உணர்ந்துகொள்ள முடிகிறது. குழந்தைகள் பசியினால் மடிந்துபோவதை நான் கண்டிருக்கிறேன். செத்துக் கொண்டிருக்கும் ஒரு குழந்தையின் அவலத்திற்கு எனது அந்த நாவல் ஈடாக முடியாது." என்று அவர் எழுதியிருக்கிறார்.

*1943*-ம் ஆண்டு பாரிஸ் நகரை ஜெர்மானியர் ஆக்கிரமித்திருந்த காலத்தில் இருத்தலும் இல்லாமையும் (BEING AND NOTHINGNESS) என்ற சாத்தரின் பிரபல தத்துவ நூல் வெளியாகியது. ஆயிரம் பக்கங்களைக் கொண்ட இந்த நீண்ட, கனமான தத்துவப்படைப்பு மனித பிரக்ஞையின் பல்வேறு உணர்வுநிலைகளை மிகவும் நுணுக்கமாக அலசிப் பார்க்கிறது. ஹுசேளின் உணர்வாய்வுத் தத்துவத்தைத் தழுவிநின்றபோது, சாத்தரின் இருப்பியக் கருத்துக்கள் இந்த நூலில்தான் அறிமுகம் செய்யப்பட்டது.

மனவுலகத்தையும் பொருளுலகத்தையும் இருப்பின் இரு முகங்களாக, இரு முரண்பட்ட சக்திகளாக விளக்கிக்காட்ட முனையும் சாத்தர் அகத்தினதும் புறத்தினதும் சிக்கலான உறவுபற்றி மிகவும் நீண்ட தத்துவார்த்த வியாக்கியானங்களைத் தருகிறார். இந்த உறவு பற்றிய ஆய்வில் மனித மனம் முதன்மை பெறுகிறது. தனித்துவம் பெறுகிறது. எல்லா நிர்ணய சக்திகளுக்கும் அப்பால் சுயாதீனம் கொண்டதாக, சுதந்திரம் பெற்றதாக சித்திரிக்கப்படுகிறது.

மெய்யுலகம் எனக்குப் புறம்பாக இருக்கிறது. என்னைச் சூழ இருக்கிறது. எனது புலனுக்கு எட்டிய தூரதில் எங்கும், எல்லாவிடமும் வியாப்பித்து நிற்கிறது. எனது தோற்றத்திற்கு முன்பே அது இருந்தபடியே இருக்கிறது. ஏற்கனவே, எப்படியோ, ஏதோ ஒரு வழியில், அது உருவாக்கபெற்று நிற்கிறது. இருப்பாக இருந்துகொண்டே இருக்கிறது. அதற்கு வடிவமில்லை. உருவமில்லை. பண்புகளில்லை. அவை எல்லாம் மனித மனதினால் சிருஷ்டிக்கப்பட்டவை. மனமே இந்த உலகத்திற்கு பொருளைக் கொடுக்கிறது, பண்பைக் கொடுக்கிறது, அர்த்தத்தைக் கொடுக்கிறது. காலம் என்று, வெளி என்று, காரணகாரியமென்று, தேவை என்று, பண்பு என்று, தோற்றம் என்று, மாற்றம் என்று, நாம் பாவிக்கும் பதங்கள் எல்லாம் இந்த உலகத்தைத் தரம்பிரித்து, வகைப் படுத்த நாம் கையாளும் கருதுகோள்கள்; அளவுகோல்கள்.

மனித மனமே இந்த உலகத்திக்கு ஆடைகளை அணிந்து அழகு படுத்தியிருக்கிறது. பூச்சுக்களைப் பூசிவிட்டிருக்கிறது. அர்த்தங்களைப் பிதுக்கிவிட்டிருக்கிறது. விரும்பியவாறு, தனது இயல்புகளிருந்து, தனது அளவுகோல்களிலிருந்து, இந்த உலகத்தை மனமே சிருஷ்டித்துள்ளது. ஆனால் இந்த உலகமானது மனித கணிப்புகளுக்கு அப்பால், மனிதனுக்கு புலனாகாத மெய்ப்பொருளாய் மெய்யுண்மையாய் இருப்புக்கொண்டு இருக்கிறது. நாம் காணும் இந்த நிஜவுலகம், நாம் பட்டுணர்ந்துகொள்ளும் இந்தப் புறவுலகம் மனிதனின் உலகம். மனிதனால் வனையப்பட்ட உலகம்.

சாத்தரின் இந்தத் தத்துவார்த்த விளக்கம், பொருளுலகத்தை, புலனானுபவத்திற்கு அப்பாலான

(தொடர்ச்சி 42-ம் பக்கம்)

> **தமிழீழத் தனியரசு என்ற இலட்சியத்தை அடைவதிலுள்ள இமாலய இடையூறுகளை நாம் அறியாமல் இல்லை; அன்றியும் இந்த இலட்சியத்துக்கு எதிராக, எந்தெந்த சக்திகள் எப்படியெல்லாம் செயற்படும் என்பதும் எமக்கு தெரியாதது அல்ல. பிராந்திய வல்லரசின் ஆதிக்க அபிலாசைகளும், உலக வல்லரசுகளின் கேந்திர இலக்குகளும் எத்தகைய தலையீடுகளை ஏற்படுத்தும் என்பதையும், நாம் எதிர்பாராமல் இருக்கவில்லை. இந்தச் சவால்கள் எழுந்தபோதெல்லாம் நாம் அதை துணிந்து எதிர்கொள்ளத் தவறவில்லை. அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்ட பொழுதும், நாம் கொண்ட கொள்கையை கைவிடவில்லை; ஆதிக்க சக்திகளின் ஆவேசப் புயல்களும் எம்மை ஆட்டங்காணச் செய்யவில்லை.**
>
> **தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழக அகதி முகாம்களில் இலங்கைத் தமிழன் அவலநிலை

## ஐதராபாத்தில் நடந்த தற்கால அகதிகள் பிரச்சினை பற்றிய கருத்தரங்கில் கவலை

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையத்தின், இந்தியாவில் உள்ள ஆணையமும், ஐதராபாத் 'அவேர்' நிறுவனமும் கூட்டாக ஏப்ரல் கடைசி வாரத்தில் நடத்திய் தற்கால அகதிகள் பிரச்சினை பற்றிய கருத்தரங்கை ஜஸ்டிஸ் பகவதி தொடக்கி வைத்தார். அகதிகள் ஆணையத்தின் இந்திய தலைவர் டாக்டர் சம்சுல்பாரி உலகம் முழுவதும் உள்ள அகதிகள் பிரச்சினை பற்றி விரிவுரையாற்றினார். இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலிருந்து அரசு சாரா நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், பொதுத்தொண்டு நிறுவனங்கள் ஆகியவை சார்பில் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

தமிழகத்திலிருந்து ஜஸ்டிஸ் பகவதி, அமைதி அறக்கட்டளை செயலர் பால் பாஸ்கர், இலங்கை ஏதிலிகள் மறுவாழ்வு குழு அமைப்பாளர் சந்திரஹாசன், கரூர் நுகர்வோர் பாதுகாப்புக் குழு செயலர் கரூர் சுப்ரமணியம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

கருத்தரங்கில் கலந்துகொண்ட பலரும் உலக நாடுகளில் உள்ள அகதிகள் பிரச்சினைகள், ஆசிய நாடுகளில் உள்ள அகதிகள் பிரச்சனைகள் ஆகியவைகளை விரிவாக எடுத்துக் கூறினர். பேராசிரியர் பரிமல் குமார்தாஸ், அமல்ராஜ் ஆகியோர் இந்தியாவில் உல்ள அகதிகள் பிரச்சினை பற்றி விரிவாக விளக்கினர்.

பொதுவாக, இந்தியா அகதிகள் பற்றிய 1951 ஐ. நா. ஒப்பந்தம், 1967-ம் ஆண்டு அது பற்றி வகுக்கப்பட்ட விதிமுறைகள் ஆகியவைகளில் நாளது வரை கையெழுத்திடாமல் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. அதனால் அகதிகள் பற்றிய ஐ. நா. பிரிவு இந்தியாவில் உள்ள அகதிகளுக்கு, குறிப்பாக இலங்கையிலிருந்து வந்த தமிழர்களுக்கு ஏதும் செய்யமுடியாத நிலை விளக்கப்பட்டது.

இந்தியாவில் தற்போது 7 நாடுகளில் இருந்து அகதிகள் உள்ளனர். அவர்களில் சக்மா அகதிகள் 200000, ஈரானியன் வகையறா 10000, திபெத்தியர்கள் கணக்கில்லை. ஆப்கானியர்கள் 25000, ஈழ அகதிகள் 140000 பேர். அவர்களில் பதிவுசெய்துகொண்டு வெளியில் வாழ்பவர்கள் 80000. முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளவர்கள் 80000 (1983 ஜூலை கலவரத்தின் போது இந்தியாவிற்கு ஓடி வந்தவர்கள் சுமார் 200000. அவர்களில் ஒரு பகுதியினர் திரும்பிச் சென்றுவிட்டனர்) - இந்தக் கணக்கில் இலங்கையிலேயே அகதிகளாக்கப்பட்டு முகாம்களில் உள்ள தமிழர்கள் சுமார் 630000 பேர் இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை.

இடம்பெயராத ஈழத் தமிழர்கள் கூட மருந்து, உணவுப்பொருள், எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் தமிழர் பகுதிக்கு செல்லத் தடைப்பட்டிருப்தால் அவர்கள் இடத்திலேயே அவர்கள் அகதிகள் போல் தான் வாழ்கிறார்கள்.

இந்தியாவில் உள்ள அகதிகளில் சக்மா அகதிகளுக்கு அரசுசாரா நிறுவனங்களும் பொதுத் தொண்டு நிறுவனங்களும் வைத்திய வசதி முதலியவைகளைச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். திபெத்திய அகதிகள் சுதந்திரமாக அலைய விடப்பட்டும் இந்திய அரசின் தாராள உதவிக்கு உட்பட்டுமுள்ளார்கள். அவர்களின் தலைவர்கள் பெரும் பெரும் தொகைகளுடன் வந்ததனால் அவர்கள் சவுகரியமாக வாழ்க்கை நடாத்துகின்றனர். ஆப்கானிய அகதி ஒவ்வொருவருக்கும் ஐ. நா. அகதிகளுக்கான ஆணையத்தின் மூலம் 3000 ரூபா அளிக்கப்படுகின்றது. இவர்கள் பக்கா வீடுகளில் குடியிருக்கிறார்கள். (இதில் இந்திய அரசு தலையிடவில்லை).

ஆனால் இலங்கைத் தமிழர்கள் சுமார் 120 முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர். கீற்றுக் கொட்டகைகள், பழைய குடோன்கள், கைவிடப்பட்ட மார்க்கட்டுகள் முதலியவைகளில் ஆண்டுக் கணக்காக அடைக்கப்பட்டுள்ளனர். பெரியவர்களுக்கு தினசரி 5 ரூபா வீதமும், குழந்தைகளுக்கு 3 ரூபா வீதமும் வழங்கப்படுகிறது. வெளியில் வேலை செய்து பிழைக்க அனுமதிக்கப்படுவதில்லை. அவர்களுக்கு உதவ முன்வரும் யாரும் அனுமதிக்கப்படுவதில்லை. ஐ. நா. சபையின் அகதிகளுக்கான ஆணையமே அவர்களுக்கு உதவ அனுமதி பெறமுடியவில்லை. பொதுத் தொண்டு நிறுவனங்களும் அரசு சாரா நிறுவனங்களும் அவர்களுக்கு உதவுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

அவர்களில் ஒரு 2500 பேரை, தீவிரவாதிகள் எனப் பிரித்து, படுமோசமான முகாம்களில் சித்திரவதைச் சூழ்நிலையில், ஈவிரக்கமற்ற முறையில் அடைத்து வைத்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


துளார்கள். அவர்களில் மூன்று நான்கு வயதுக் குழந்தைகளும் உண்டு. இத்தைய சூழ்நிலையில் முகாம்களில் உள்ளவர்கள் பலருக் குக் கொடிய நோய்கள் பீடித்துள் ளது. அவர்கள் அட்டையை கையில் வைத்துள்ள பிச்சைக்காரர் களாக உள்ளனர். பலருக்கு மன நோய் பீடித்துள்ளது. உணர்வு நொறுங்கிப் போன நிலை. தற் கொலைகள், சிறு வயதுத் திரு மணங்கள் போன்ற பல பிரச்சி னைகளால் அலைக்கழிக்கப்பட்டு வருகிறார்கள்.

ராஜீவ் காந்தி கொலைக்குப் பின், தமிழ்நாடு அரசு இலங்கைத் தமிழர்கள் அனைவரையுமே குற்ற வாளிகள் போல் நடத்தி வருகிறது. எனவே அவர்களில் பலர் எந்த நிலையானாலும் சொந்த ஊருக்கே போய்விடுகிறோம் என்ற நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். தமிழ் நாட்டுப் பள்ளிகளில் இலங்கைத் தமிழர் குழந்தைகளை சேர்க்கக் கூடாது என 1993-ல் உத்தரவிடப் பட்டது.

இலங்கை தமிழ் அகதிகள் பற்றி பரப்பப்படும் தவறான செய்திகள் கணக்கில் அடங்காதவை. பத்திரி கைகள் தவறான தகவல்களைப் பரப்பும் கருவிகளாகப் பயன் படுத்தப்படுகின்றன. ஏதோ அவர் கள் குற்றப் பரம்பரையைச் சேர்ந்த வர்கள் போலவும், சுற்றுப்புறத்தில் நடக்கும் குற்றங்களுக்கும் அவர்க ளுக்கும் தொடர்பு உள்ளது போல வும் திட்டமிட்டே தமிழ்நாட்டில் செய்திகள் பரப்பப்படுகின்றன.



இன்னும் பல விபரங்களை டாக்டர் அமல்ராஜ் போன்றோர் கள் அறிக்கையாகக் கொடுத்ததி னால் கருத்தரங்கமே அதிர்ச்சி அடைந்துவிட்டது. கருத்தரங்கின் அதிகமான நேரம் ஈழத் தமிழர்க ளுக்காகவே எடுத்துக்கொள்ளப் பட்டது.

• மத்திய மாநில அரசுகளின் போக்கின் காரணமாகவும், இந்திய மத்திய அரசு 1951, 1967 - அகதிகள் பற்றி ஐ. நா. ஏற்பாட்டில் கையெ ழுத்திட மறுத்து வருவதாலும், யாரும் தமிழ் அகதிகளுக்கு உதவ முடியாத கெடுபிடி சூழ் நிலையை தமிழ் நாடு அரசு ஏற் படுத்தி வைத்திருப்பதாலும், எந்த விதத்தில் அவர்களுக்கு உதவி செய்வது என்பது குறித்து கருத் தரங்கு நெடுநேரம் பரிசீலிக்க வேண்டி வந்தது.

இறுதியில் ஒரு உண்மையறியும் குழுவை நியமித்து, அவர்கள் இத் தனை இடர்களையும் மீறி முடிந்த அளவு தகவல்களை சேகரித்து வரவேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டது. அவர்கள் தரும் அறிக் கையை அடுத்து தமிழகத்திலேயே ஒரு கருத்தரங்கம் வைத்து அதில் பரிசீலிப்பது என முடிவு செய்யப் பட்டது. இந்தக் குழுவில் தென் கிழக்கு ஆசிய மனித உரிமைக் கழக இயக்குனர் ரவிநாயர், முன் னாள் டிரினிடா தூதர் பேராசிரி யர் லட்சுமணன், ஆந்திரப் பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ரமணா, பசிபிக் பிராந்திய ஆய்வுப் பேராசிரியர் பரிமல் குமார்தாஸ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

**P.R. குப்புசாமி**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

*(39-ம் பக்கத்தொடர்ச்சி)*

மாயப்பொருளாக, மறைபொருளாக, சித்திரிக்க முனைகிறது. அகத்திலிருந்து புறத்தை துண்டித்துவிட விழைகிறது. மனித மனத்திற்கும் அலாதியான முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது.

சாத்தரின் பார்வையில் மனித மனமானது ஒரு சுதந்திரப்பறவை. அது சுயமாகச் சிந்திக்கிறது, உணர்கிறது, முடிவுகளை எடுக்கிறது, தெரிவுகளைச் செய்கிறது, திட்டங்களைப் போடுகிறது, சுயவுணர்வு கொள்கிறது, ஞாபகமூட்டுகிறது, உலகத்தைக் கிரகிக்கிறது, உலகத்தாரோடு உறவு கொள்கிறது, சொற்களில் கருத்துகளைச் செதுக்கிறது, படைக்கிறது.

இவ்வாறு மனிதனின் பிரக்ஞை (HUMAN CONSCIOUSNESS) செயற்படுகிறது. இந்த மன இயக்கத்தை சுதந்திரத்தின் வெளிப்பாடாக, சுயாதீனத்தின் செயற்பாடாக கற்பிக்க முனைகிறார் சாத்தர். இங்கு அவர் மன இயக்கத்தை விபரித்துச் சொல்வதுடன் நின்றுவிடவில்லை. மனித பிரக்ஞையை முழு மனிதனாக உருவகித்து, மனிதன் ஒரு பூரணமான சுதந்திரப் பிறவி எனப் பிரகடனம் செய்துவிடுகிறார். அதாவது, எவ்வித நிர்ப்பந்தங்களுக்கும் நிர்ணய சக்திகளுக்கும் அப்பாலான ஒரு சுதந்திர ஜீவனாக மனிதனை சித்திரித்துவிடுகிறார். சாத்தரின் தத்துவ வித்தையில் மனமானது முழு மனிதனாக மாற்றப்படுகிறது. எண்ணத்தின் அசைவியக்கம் மனிதனின் சுதந்திர இயக்கமாக மாற்றப்படுகிறது. இப்படியான ஒரு கற்பனாவாதம் கருத்து நிலையில் நின்றுகொண்டு, மனிதன் சுதந்திரமாக வாழ விதிக்கப்பட்டிருக்கிறான். (MAN IS CONDEMNED TO FREEDOM). அது அவனது தவிர்க்க முடியாத தலைவிதி என அறைகூவல் விடுக்கிறார். மானசீகமான ஒரு சுதந்திரத்தைக் கற்பித்து அதை மனித இருப்பின் மையத்தில் நிறுவிவிட முனைகிறார் சாத்தர்.

சாத்தரின் இத்தத் தத்துவப் படைப்பில் புரிந்துகொள்ள முடியாத புதிர்கள் பலவுண்டு, முரண்பாடுகள் பலவுண்டு, மெய்யுலக எதார்த்தத்திக்குப் புறம்பான கற்பிதங்கள் பலவுண்டு. உலகத்திலிருந்து உறவுகளிலிருந்து அந்நியப்பட்டு நிக்கும் ஒரு அலாதியான அகவுலகத்தைப் படைத்து, அதைச் சுதந்திரத்தின் ஆன்மாவாகச் சித்திரித்து, அதன் அத்திவாரத்தில் தனது இருப்பியக்கக் கருத்துலகைக் கட்டி எழுப்புகிறார் சாத்தர். உலகத்தின் தளைகளிலிருந்து விடுபட எத்தனிக்கும் ஹ¬சேளின், தூய பிரக்ஞை (PURECONSCIOUSNESS) சாத்தரின் சுதந்திர புருஷனாக மனு அவதாரம் எடுத்திருக்கிறது.

இந்தத் தத்துவ நூலை எழுதிய அன்றைய காலகட்டத்தில், சாத்தரின் சிந்தனைகள் நிஜத்தின் நிலத்தில் கால் பதிக்கவில்லை. வாழ்வுக் கடலில் நங்கூரம் தரிக்கவில்லை. வரலாற்று ஓட்டத்தை கண்டு கொள்ளவில்லை. சமூகவாழ்வுக்கும் வரலாற்றுக்கும் புறம்பாக நின்று, நிஜவுலக நிர்ப்பந்தங்களை நிராகரித்துவிட்டு, மனவுலகச் சுவர்களுக்குள் மனிதனைத் தேட அவர் முயற்சித்தார். இயற்கையால் படைக்கப்பட்ட மனிதனை, இயற்கையோடு இணைந்து வாழும் மனிதனை, சமூக உறவுச் சங்கிலியால் பிணைக்கப்பட்ட மனிதனை, வரலாறு படைக்கும் மனிதனை, இரத்தமும் சதையுமான பொருளாய மனிதனை, மெய்யான மனிதனை அவர் அன்று கண்டு கொள்ளவில்லை. விலங்கிடப்பட்டிருக்கும் அடிமையிடம், சிறையில் வதைபடும் கைதியிடம், பசியால் செத்துக்கொண்டிருக்கும் மனிதனிடம் சாத்தர் சொல்லும் சுதந்திரம் செல்லுபடியாகாது. அது மனித மெய்நிலைக்குப் புறம்பானது. அகவயமானது.

பிந்திய ஒரு காலத்தில், முந்திய படைப்புகளை சுயவிமர்சனம் செய்யும் போது தனது ஆரம்பகால கற்பனாவாதத்தை அவர் கண்டிக்கத் தவறவில்லை. உளவியல் நிலவறைக்குள் நின்று, முழு உலகத்தையும் விளக்க முயன்றது தவறு என்பதை அவர் ஒப்புக்கொண்டார்.

ஐரோப்பாவை அதிரவைத்த இரண்டாவது உலகப்போர் சாத்தரின் கனவுலகத்தைக் கலைத்தது. நிஜவுலகின் நிஜத்தைப் புரியவைத்தது.

நாசிச யுத்த பூதம் நாடுகளை விழுங்கியது. நகரங்களை அழித்தது. கோடிக்கணக்கில் மனிதர்களைக் கொன்று குவித்தது. நெப்போலியனின் நாடு, சாத்தரின் தாய்நாடு, ஹிட்லரின் காலடியில் மிதிபட்டது.

அந்நிய ஆக்கிரமிப்பால் எழுந்த அடிமைப்பட்ட வாழ்வும், அவலமான சூழ்நிலைகளும் சாத்தருக்கு சுதந்திரம் பற்றிய தெளிவை ஏற்படுத்தியது. சுதந்திரம் என்பது மனவுலகத்தின் மானசீகப் பொருளல்ல. அது சமூக வாழ்நிலையோடு சம்பந்தப்பட்டது. அடிமைத் தளைகளிலிருந்து விடுபடுவதைக் குறிக்கிறது. மனித மேம்பாட்டை குறிக்கோளாகக் கொண்டது. புறநிலைகள் சாத்தருக்கு இந்த உண்மையைப் புலப்படுத்தியது. நாசிச ஆதிக்கத்திற்கு எதிரான பிரஞ்சு எதிர்பியக்கத்தில் இணைந்து செயலாற்றிய வேளையில், சுதந்திரம் போராடிப் பெறவேண்டியது என்ற ஞானோதயம் அவருக்கு ஏற்பட்டது.

இரண்டாம் உலக யுத்தத்தை அடுத்து, அரசியலிலும் இலக்கியத்திலும் தீவிரமாக ஈடுபட்டார் சாத்தர். மார்க்சிய சிந்தனை அவரை வெகுவாகக் கவர்ந்தது. சமத்துவமும் சமூக நீதியும் தழைத்தோங்கும் சமூகத்தில் தனிமனிதனின் சுதந்திரம் மேம்பாடு பெறுமெனக் கருதினார். ஒடுக்கப்படும் மனிதனின் விடுதலைக்காக குரல் கொடுத்தார். அரசியல் நாடகங்களை அரங்கேற்றினார். நாவல்களை எழுதினார். அரசியல் ஈடுபாடுகொண்ட படைப்பிலக்கியத்தை வலியுறுத்தினார்.

எழுத்து என்றால் என்ன? ஒரு எழுத்தாளன் ஏன் எழுதவேண்டும்? அவன் யாருக்காக எழுதவேண்டும்? என்ற வினாக்களுக்கு விடையளித்து 'இலக்கியம் என்றால் என்ன?' (WHAT IS LITERATURE?) என்ற நூலை எழுதி வெளியிட்டார். 1948-ல் பாரிஸில் பிரசுரமான இந்நூல் பிரஞ்சு இலக்கிய

www.tamileelamarchive.com

உலகில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

இலக்கியம் ஒரு சமூகக் கலை; ஒரு சமூகச் செயல்பாடு; அதற்கு ஒரு சமூகப்பங்கு இருக்கிறது. சமூக உலகத்தின் மீது, சமூக இயக்கத்தின் மீது அது தாக்கத்தை விளைவிக்கிறது. சமூக மாற்றத்திற்கு உந்து சக்தியாக விளங்குகிறது. மனித விழிப்புணர்விற்கும் விடுதலைக்கும் பாதை அமைத்துக் கொடுப்பதே இலக்கியத்தின் உன்னதமான இலட்சியமாக அமையவேண்டும். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில், குறிப்பிட்ட காலகட்டத்தில், ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் எழுத்தாளன் வாழ்கிறான். தான் வாழும் சமூகத்தையும், அந்தச் சமூகத்தின் வாழ்நிலைப் பிரச்சனைகளையும், போராட்டங்களையும் எழுத்தாளன் உதாசீனம் செய்யமுடியாது. வரலாற்றிலிருந்து அவன் ஒளித்துக் கொள்ள முடியாது. அவன் எழுத வேண்டும். அவனது எழுத்து அந்தச் சமூகத்தின் வாழ்நிலையை ஊடுருவி நிற்கவேண்டும். சமூகத்தாரை சிந்திக்கத் தூண்டி, செயற்பட வைக்கவேண்டும். சமூக விடுதலையை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். இந்த வகையில் எழுத்தாளனுக்கும் சமூகப்பற்றுணர்வு அவசியம், அர்ப்பணிப்பு அவசியம், ஈடுபாடு அவசியம், எழுத்தும், அரசியல் ஈடுபாடுடையதாக அமையவேண்டும் என்பதை இந்த நூலில் வலியுறுத்துகிறார் சாத்தர்.

சொற்களுக்கு அபாரமான சக்தியுண்டு. அவை வாசகனின் ஆன்மாவைப் பற்றிக்கொள்கிறது. அவனது இருண்ட மனக்குகைக்குள் வெளிச்சத்தைக் காட்டுகிறது. மாயைகளைப் போக்கிவிடுகிறது. கனவுகளைச் சிதைத்துவிடுகிறது. எழுத்துக் கலையானது அரசியல் விழிப்புணர்வை தூண்டி, மனித விடுதலைக்கு வழிசமைத்துக் கொடுக்கிறது. சமூகப் பிரக்ஞையுடன் எழுதுபவன், சமூக விடுதலைக்காக எழுதுபவன் தனது இருப்பிற்கும் மற்றவர்களது வாழ்விற்கும் அர்த்தத்தைக் கொடுக்கிறான் என்கிறார் சாத்தர்.

மனித இருப்புநிலைக்கு அப்பால், சமூகவாழ்நிலைக்கு அப்பால், அழகுணர்விற்காக, கலையுணர்விற்காக, நித்திய விழுமியங்களைத் தேடி எழுதுவதில் அர்த்தமில்லை. அது சமூகத்தின் ஒடுக்குமுறையாளர்களை, அதிகாரவர்க்கத்தினரை திருப்திப்படுத்தும் படைப்புகளாகும். அந்த எழுத்துக்கள் சமூகத்தின் ஒடுக்குமுறையை நியாயப்படுத்துவதாக அமையும் என்கிறார் சாத்தர்.

(தொடரும்)

# வாவிகளில் மிதக்கும் தமிழர் சடலங்கள்

மட்டு நகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டு வாவிகளில் வீசப்பட்டு வருகின்றனர். இவ்வாறு நிகழ்வது இன்று நேற்று அல்ல. தமிழ் மக்களை உளவியல் ரீதியில் அச்சமுறவைக்க முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா இதனைத் தொடங்கிவைத்தார். அவரது மகன் ரவி ஜெயவர்த்தனாவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட S.T.F எனப்படும் விசேட அதிரடிப்படையானது தமிழ் மக்களை கொன்று வாவிகளில் வீசும் இக்கொடிய செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தது. வயல்களிலும் வாவிகளிலும், தொழில்களில் ஈடுபட்டு நிற்கும் மக்களை கண்ட கண்ட இடங்களில் துப்பாக்கி சூட்டுப் பயிற்சி எடுப்பது போல சுட்டுக்கொன்றார்கள்.



ஜே. ஆரின் ஆட்சிக் காலத்தின் முடிவின்பின் பொறுப்பேற்ற பிரேமதாசா காலத்தில் அச் சம்பவங்கள் மேலும் தொடர்ந்தன.

புதிதாக ஆட்சிக்கு வந்த சந்திரிகா இன்று சமாதான தேவதை தான் என்றும், தன் வருகையோடு கொடூரங்கள் நிகழாத ஒரு பூமியைத் தோற்றுவிப்பதான மாயையை ஏற்படுத்தி வந்தார். அவ்வாறு அவர் ஏற்படுத்திய பொய்யான மாயைத் தோற்றம் கலைந்து விட்டது. அவர் முன்னைய சிங்களத் தலைமைகளை மிஞ்சியவராகவே காணப்படுகிறார். மட்டு நகர் வாவிகளில் இன்று மோசமாக மக்கள் கொல்லப்பட்டு வீசப்படுகிறார்கள். மட்டக்களப்பில் பெரும்பகுதி வாவிகளும் நீர் நிலைகளும் நிறைந்தவை. குறிப்பாக வழைச்சேனை, ஏறாவூர்பகுதி மக்கள் மீன் பிடி, இறால் பிடி போன்ற தொழில்களிலும் தோணி ஓட்டுதல் போன்ற தொழில்களிலும் ஈடுபட்டுவருவார்கள். இம் மக்களது இயல்பு வாழ்வு நிலை மிக மோசமாக சீர் குலைக்கப்பட்டுள்ளது. மேலும் வாவிகளில் வீசப்படும் சடலங்கள் அழுகிய நிலையில் காணப்படுகின்றன. இச்சடலங்களை மீன்கள் உண்ணுவதால் அவ்வாவிகளில் பிடிக்கும் மீன், இறால், நண்டு போன்றவற்றால் கொடிய நோய்கள் ஏற்படக் கூடும் என்ற அச்சத்தால் மக்கள் அவற்றை உண்ணத் தயக்கம் காட்டி வருகின்றனர்.

கொழும்பிலும், கைது செய்யப்படும் தமிழர்கள் இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டு வாவிகள், ஆறுகளில் வீசப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கொழும்பிற்கு அருகே பொல்கொட வாவியில் இதுவரை 20-க்கு மேற்பட்ட சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# யாழ்ப்பாணத்து பெண்களின் கல்விப் பாரம்பரியம்

யாழ்ப்பாணப் பெண்களின் கல்விப் பாரம்பரியம் அக்கால சமூக மரபுகளோடும் வாழ்க்கை முறைகளோடும் நெருங்கிய தொடர்புடையது. அன்றைய பழமை வாதத்தின் உறைவிடமாக விருந்த யாழ்ப்பாண சமூக மரபில் பெண்களுக்கு கல்வி மறுக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்து "வேலித் திரை நாகரிகம்'' பெண்களின் சமூக, பொருளாதார வாழ்வில் இறுக்கமான கட்டுப்பாடுகளையும் மரபுகளையும் வகுந்திருந்தது.



அடக்குமுறைகளைத் தகர்க்க அணிவகுக்கும் பெண்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே பெண்கள் சமுதாய ரீதியில் ஒடுக்கப்பட்டும் ஒதுங்கியும் வாழ்ந்தனர். அவர்களுக்கு முக்கியமான பதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை. ஆண்களோடு பெண்கள் சரிசமமாக இருந்து உரையாடல் செய்தமைக்கோ, கல்வி பயின்றமைக்கோ எதுவித சான்றுகளுமில்லை. பெண்கள் தங்கள் வீடுகளிலேயே தமது நேரத்தின் பெரும் பகுதியைக் கழித்தனர்.

இதைவிட அக்காலத்து தாய்வழிச் சமுதாயத்தில் பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்பட்டிருந்தது. எனவே அப் பெண் மணமுடிக்கும் போது சீதனம் கொடுப்பது வழக்கமாகவிருந்தது. பெற்றோர் தமது பெண் பிள்ளைகளுக்கு சீதனம் சேர்த்து, அவர்களுக்குத் திருமணம் செய்து கொடுப்பதையே ஒரே நோக்கமாகக் கொண்டிருந்தார்களேயன்றி பெண் பிள்ளைகள் கல்வி கற்று மேல் நிலையை அடைய வேண்டும் என்பதில் போதிய அக்கறை செலுத்தவில்லை.

மற்றும் "பெண்கள் படிப்பது வழக்கமல்ல'' என்றும் "அவ்வாறு படித்தால் அவர்கள் ஆண்களை மதிக்கமாட்டார்கள்'' என்றும் அக்கால மக்கள் கருதி வந்தனர். ஆண்கள் ஓரளவுக்கு கல்வி அறிவு பெற்றவர்களாகவும் குடும்பத்தை நிர்வகிக்கும் ஆற்றல் பெற்றவர்களாகவும் வருமானம் உள்ளவர்களாகவும் காணப்பட்டதால், சமூகத்தில் பெண்களை விட ஆண்கள் மேம்பட்ட நிலையில் காணப்பட்டதுடன் சமூகத்தில் மதிப்பையும் பெற்றிருந்தனர். பெண்கள் கல்வி கற்று முன்னேற வேண்டுமென ஆண்களோ அல்லது ஏனைய பெண்களோ விரும்பவில்லை.

"பெண்கள் கல்வி கற்பது வழக்கமல்ல'' என்றும், "படித்த பெண்கள் ஆடவர்களை மணம் முடிக்க மாட்டார்கள்'' என்றும் எண்ணியிருந்த காலம் அது.

அக்காலத்து யாழ்ப்பாணப் பெண்கள் அஞ்ஞானத்திலும் மூட நம்பிக்கைகளிலும் தம்மை ஈடுபடுத்தி, எல்லாவற்றுக்கும் அவற்றையே நம்பியிருந்தனர். மருத்துவ வசதிகளற்ற அக்காலத்தில் நோய்களைப் பற்றிய தப்பான எண்ணங்களும் அந்த நோய்களைத் தீர்ப்பதற்கான தவறான வழிமுறைகளுமே நிறைந்து கிடந்தன.

இத்தகைய பழமை வாதத்தின் உறைவிடமான சமுதாயத்தில் பெண்களின் நிலை மிக மோசமானதாகவே இருந்தது. எந்தவித விழிப்புணர்வுகளும் அற்றவர்களாக, சமுதாயத்தில் புரையோடிப் போயுள்ள சகல தளைகளுக்கும் அவர்கள் முடங்கி வாழ்ந்தனர். இத்தகைய நிலையிலிருந்த பெண்களின் வாழ்க்கை முறைமை மேற்கு நாட்டவர்களின் வருகையோடு மெல்ல மெல்ல மாறத் தொடங்கியது. மேற்கு நாட்டவர்களின் வருகையின் நோக்கம் வேறாக இருந்தாலும் கூட, அவர்களின் செயற்பாடுகளூடாக சில சாதக, பாதக விளைவுகளை எமது சமூகம் சந்தித்தது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகும். அவர்களின் வருகையானது இம் மக்களின் வாழ்வில், பண்பாட்டில் பல மாற்றங்களை ஏற்படுத்தியது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அவர்களின் முக்கிய நோக்கம் மதத்தைப் பரப்புதலேயாயினும் கூட, அதனூடாக அவர்கள் கைக் கொண்ட நடைமுறை மக்களின் வாழ்விலே பல விளைவுகளை ஏற்படுத்தியது.

இத்தகைய ரீதியில் கல்வியில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு மிஷனரி மாரின் வருகை ஒரு முக்கிய கார ணியாக இருந்தது எனலாம்.

1816-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத் திலிருந்தே அமெரிக்கன் மிஷனரி மாரின் வரலாறு இலங்கையில் ஆரம்பமாகியது. அவர்கள் இலங் கையில் தமது மதமாகிய புரட்டஸ் தாந்து மதத்தைப் பரப்புவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு வந்தனர். இந்தச் சமயத்தைப் பரப் பும் நோக்கத்தைச் செயற்படுத்து வதற்கு சிறந்த வழி கல்வியே. கல்வியைப் புகட்டுவதன் மூலமே சமயத்தைப் பரப்ப முடியும் என நம்பினர்.

இதற்கான கல்வி முதலில் பெண் களுக்கே அளிக்கப்படவேண்டும் என்பதில் இவர்கள் தீவிர அக்கறை செலுத்தினர்.

அதாவது "ஆறு ஆண்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றுவதைவிட ஒரு பெண்ணை மனம் மாற்றுவது முக்கியமானது" எனக் கூறினர். பெண்கள் பக்தி வைத்தால் நிலை யாக இருப்பவர் எனக் கூறினா லும், அவர்கள் மூலம் வருங்கால சந்ததியையே கிறிஸ்தவர்களாக மாற்றமுடியும் என்பதைத்தான் அவர்கள் தம் நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

எப்படியிருப்பினும் எதற்கா கவோ தொடங்கப்பட்ட கல்வி ஒரு வழியில் பெண்களின் முன் னேற்றத்துக்கு, அறிவு மேப்பாட் டுக்கு அடி கோலியது என்பது முக்கியமானது.

1816-ம் ஆண்டு இலங்கைக்கு வந்த அமெரிக்க மிஷனரிமாரில் ஒருவரான பி. சி. மெக்ஸ் என்பவர் தாம் யாழ்ப்பாணத்தில் அப்பொ ழுது எழுத வாசிக்கத் தெரிந்த இரு பெண்களை மட்டும் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர்களில் ஒருவரை அளவெட்டியிலும் மற்ற வரை உடுப்பிட்டியிலும் கண்டதா கக் கூறியுள்ளார்.

இவர்கள் இங்கு வந்து சேர்ந்த காலத்தில் நமது நாட்டுப் பெண் கள் படிப்பதைச் சமுதாயம் விரும் பவில்லை. பெற்றோரும் பெண்க ளும் படிப்பதை ஒரு குறைவான காரியம் எனக் கருதினர். ஒரு பெண்ணுக்கு வாசிக்கத் தெரிந்தால் அது அவரது பழக்கவழக்கத்தை மாற்றும் என்றும் கருதினர்.

ஊர் ஊராகச் சென்று "நீங்கள் உங்கள் பெண்பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிக் கற்பியுங் கள்" என்று இவர்கள் சொன்ன போது,

"அந்த விஷயத்தை நீர் இங்கே பேசவேண்டாம். எமது நாட்டிலே பெண்கள் கல்வி கற்கும் வழக்கம் கிடையாது. அவர்கள் படிப்பறிவு பெற்றுவிட்டால் திருமணம் புரிந்து கொள்ளச் சம்மதியார்கள்"

என்று அந்தப் பெண்களின் பெற்றோர் விடை கூறியதாக அமெரிக்க மிஷன் பாதிரியார் பூர் ஐயர் தனது நூல் ஒன்றிலே எழுதி யுள்ளார்.

எனவே இத்தகைய நிலையிலே சமூகத்தின் கருத்து நிலையை மாற்ற வேண்டிய தேவை மிஷனா ரிமாருக்கு ஏற்பட்டது. அவற்றை விட அக்காலத்திலே யாழ்ப்பாண சமூகம் பழமைவாதத்தின் உறை விடமாகவே இருந்தது. அத்தோடு இறுக்கமான சாதியமரபும் அவர்க ளிடையே உடையாதனவாய் இருந் தது. இதன் மத்தியில் அமெரிக்க மிஷனரிமார் உள்ளூர் மக்களின் பலத்த எதிர்ப்புக்களுக்கு மத்தி யிலே தமது பாடசாலைகளில் பெண் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டி இருந்தது. அவர்களின் வருகையின் போதே இங்கு பாட சாலைகள் இயங்கிக்கொண்டிருந்த போதிலும் கூட அவற்றில் பெண் கள் கல்வி கற்பதை அனுமதிக்க வேயில்லை. பெண்கள் கல்வி கற்பதைப் பற்றி 1891-ம் ஆண்டு யூன் மாதம் வெளியான இந்து சாதனம் என்னும் பத்திரிகையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

"நீங்கள் எங்கள் வீட்டின் சமா தானத்தையே கெடுக்க வந்தவர் கள்" என்றும் "அறியாமையே பெண்களின் மிகச் சிறந்த அணி கலன்" என்றும் குறிப்பிட்டுள்ளது.

எனவே பெரும்பாலான பழமை வாதிகளின் எதிர்நடவடிக்கைக ளைச் சமாளித்தபடி மனந்தளரா மல் உழைத்த மிஷனரிமார்களின தும் அவர்களினது மனைவிமார்க ளினதும் முயற்சியின் பயனாக பெண்கல்வி படிப்படியாக வளர்ச்சியடைந்தது.



**போரியல் கற்கும் பெண்கள்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இவர்களின் தீவிர பிரச்சாரத்தின் பேரில் வட்டுக்கோட்டையிலிருந்த மிஷன் வீட்டிற்கு அண்மையிலிருந்த ஒரு முதலியாரின் பேத்தியாகிய ஒரு சிறுமி 1817-ம் ஆண்டு சித்திரை மாதம் றிச்சேட் அம்மையார் என்ற மிஷன் மாதுவிடம் கல்வி கற்கவெனப் போகத் தொடங்கினாள். அந்தச் சிறுமிக்கு றிச்சேட் அம்மையார் மிகுந்த கவனத்துடன் படிப்பித்து விரைவிலேயே அவளை எழுத வாசிக்கக் கூடிய தேர்ச்சியுடையவளாக்கினார். அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்தில் முதன் முதலில் கல்வியறிவு புகட்டிய உள்ளூர்ப் பெண்பிள்ளை இவளேயாவாள்.

இப்படியாக இலங்கையின் வடபகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மிஷனரிமாரே பெண்களுக்கு கல்வியறிவு புகட்டுவதை ஆரம்பித்து வைத்தனர். 1817-ல் சிறுமிகளைத் தமது திண்ணைப் பள்ளிக்கூடங்களூடாக கல்வி கற்பதற்கு அழைத்து, அதன் மூலம் படிப்படியாக பெண்களின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தனர். இதன் முதற்கட்டமாக 1818-ல் தெல்லிப்பளையில் ஐந்து பெண்களுடன் ஒரு பாடசாலை முதன் முதலில் உருவானது.

1823-ல் வட்டுக்கோட்டையில் 'பற்றிக்கோட்ட செமினரி' என்ற உயர் கல்வி நிறுவனம் ஒன்றை நிறுவிய பின்னர், அதைப் போலவே ஒரு மத்திய விடுதிப் பெண்கள் பாடசாலை யாழ்ப்பாணத்திலே அமைக்கவேண்டும் என்கின்ற அவா மிகுதியினால் 1824-ம் ஆண்டு உடுவில் மத்திய விடுதிப் பெண்கள் பாடசாலையை உருவாக்கினார்கள். யாழ்ப்பாணத்திலே மட்டுமல்லாமல் ஆசியாக் கண்டத்திலேயே முதன் முதலாக நிறுவப்பட்ட மத்திய பெண் விடுதிப் பாடசாலையாக இது திகழ்கிறது.

இது உருவாகியதற்கு ஒரு வரலாறு உண்டு. மிஷனரிமாரின் சமயப்பிரச்சார நோக்கோடு அக் கிராமத்துக்கு முதன் முதலாக வணக்கத்துக்குரிய வின்சிலோ தம்பதிகள் வந்தார்கள். அங்கு அவர்கள் ஒரு பாழடைந்த பூந்தோட்டத்தையும் சுண்ணாம்புக் கட்டிடம் ஒன்றையும் கண்டனர். அதனைத் திருத்தி ஒரு திண்ணைப் பாடசாலையை ஆரம்பித்தனர். அத்திண்ணைப் பாடசாலையில் ஒன்பது சிறுவர்கள் கல்வி பயின்று கொண்டிருந்தனர். இவர்கள் இங்கு இருந்துகொண்டு கல்வி கற்பவர்களை உற்சாகப்படுத்துவதன் மூலம் கல்விக்கூடாகக் கிறிஸ்தவத்தையும் பரப்ப முனைந்தார்கள்.

இதற்காக வீடு வீடாகச் சென்று சிறு பெண்பிள்ளைகளைப் படிக்க வரத் தூண்டினர். படிக்க வந்தால் நவீன உடுப்புகள் தருவோம் என்றும், வேதாகமத்தை சிறந்த முறையில் வாசிக்கத் தெரிந்தால் "நெக்லஸ்" வாங்கித் தருவோம் என்றும் கூறினர். ஆனால் நீண்ட நாட்களாக ஒரு பெண்பிள்ளை தானும் படிப்பதற்கு வரவில்லை. ஆனாலும் இவர்கள் மனம் தளரவில்லை.

இந்தக் காலகட்டத்தில் ஒருநாள் விளையாடிக்கொண்டிருந்த இரு பெண்கள் அவ்வேளை மழை வந்தால் ஒதுங்குவதற்கென திண்ணைப்பாடசாலைக்கு வந்தனர். விளையாடிய களைப்பு ஒருபுறம், பசி மறுபுறமுமாக இப் பெண்கள் மிஷனரிமாரிடம் உணவு வாங்கிச் சாப்பிட்டனர். அக்கால இறுக்கமான பிராமண சமூகத்தைச் சேர்ந்த இப்பெண்களின் செயலால் இவர்களைத் தேடிக்கொண்டு வந்த இவர்களின் பெற்றோர்கள் கோபமுற்றனர். இவ்விரு பெண்பிள்ளைகளும் வீட்டிற்குச் சென்றதும், இவர்களின் உணவை உண்ட பெண்ணின் பெற்றோர் தமது பிள்ளையை முதலில் கொலை செய்ய யோசித்தனர். பின்னர் மனந் துணியாது அப்பிள்ளைகளைக் கூட்டிச் சென்று மிஷனரிமாரிடம் கொடுத்து எங்கள் பெண்ணை நீங்களே பொறுப்பேற்க வேண்டும் என்றும் அப் பெண்ணைப் படிப்பித்து சீதனம் கொடுத்து அவளைத் திருமணம் செய்து நீங்களே கொடுக்கவேண்டும் என்றும் ஒப்படைத்துச் சென்றனர். அதற்கு திருமதி வின்சிலோ அம்மையாரும் உடன்பட்டு ஏற்றுக்கொண்டார். இவ்வாறு தொடங்கியதே அப்பாடசாலையின் விடுதிமுறை. பின்னர் படிப்படியாக பெண்கள் விடுதியிற் சேர்ந்து படிக்க ஆரம்பித்தனர்.

கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்குரிய மிகப் பெரிய கருவியாகவும் இதன் மூலம் கற்றுத் தேறிய இளைஞர்களுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவியரைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் கிறிஸ்தவ குடும்பங்களைக் கட்டியெழுப்பவுமே இம் மத்திய பாடசாலை விடுதிப் பெண்கள் தோற்றுவிக்கப்பட்டது.

உடுவிலிலே அமைந்த பெண்கள் விடுதிப் பாடசாலை போன்று உடுப்பிட்டியிலும் ஒரு பெண்கள் பாடசாலையை கே. சி. சிமித் ஐயர் அவர்கள் 1868-ம் ஆண்டு வைகாசி 7ம் திகதி ஆரம்பித்தார்.

1838-ம் ஆண்டு திருமதி பேர்சிவலும் வணக்கத்துக்குரிய பேர்சிவலும் இணைந்து யாழ்ப்பாணத்திலுள்ள வேம்படி வளவு என்னும் நிலப்பரப்பிலே பெண்களுக்கென இரண்டு ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவினார்கள்.

இதேமாதிரியான மிஷனரிமாரினால் 1876-ம் ஆண்டு பருத்தித்துறை உயர்தர விடுதிப் பாடசாலையும், பின்னர் 1917-ல் சுண்டுக்குளி பெண்கள் பாடசாலையும் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட பாடசாலைகளாக தோற்றம் பெற்றன.

இவ்வாறு படிப்படியாக பெண்களின் கல்வி வளர்ச்சிக்கும் அதனூடாக சமயப் பரப்பலுக்குமாக ஆரம்பிக்கப்பட்ட இத்தகைய பாடசாலைகளே ஆரம்பகால வரலாற்றில் பெண்களின் கல்விப் பாரம்பரியத்துக்கு தோற்றுவாயாக இருந்தன. "அறியாமையே பெண்களின் அணிகலன்" என்று அக்கால இறுக்கமான சமூகத்தின் கைகளிலிருந்து விடுபட்டு பெண்களின் உலகை நோக்கிய பார்வையை மேலும் உயர்த்த அடிகோலியவை இத்தகைய கல்வித் தாக்கங்களே என்பது குறிப்பிட்டுக் கூறவேண்டியது.

**- கொற்றவை**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# வா தோழி! மீண்டும் நடக்கத் தொடங்குவோம்

- சுதாமதி -



இளைப்பாறாதே,
இன்னும் முடிவிடம் போய்ச் சேரவில்லை.
இடை வந்த குடையின் நிழல்
எத்தனை காலம் தாக்குப் பிடிக்கும்?
உனக்கென நிரந்தரமான இடம்
தேவையாய் இருக்கையில்
வீதியோர நிழலில்
இளைப்பாறுவதல்ல
உனது வாழ்க்கை
பயணத்தின் கனம் அதிகம்தான்
முட்படுக்கைகள் முதுகைக் குத்தும்
காற்றுக் கனலாய் வீசும்
உப்பு நீர் மூக்கு நிறையும்
கொடுக்கவேண்டிய விலை
அதிகம்தான்
அதற்காக அலுத்துக் கொள்ளாதே
வா தோழி
நடக்கத் தொடங்குவோம்
கரங்களை இறுகப் பற்றியபடி
அதோ பார்!
புலம்பும் அலைகளைக் கிழித்தபடி
எதிரியின் இயந்திரப்படகு....
நேற்றுத்தானே இந்தக் கடல் நீரில்
கைகளை அளைந்தபடி விளையாடினோம்!
கிளிஞ்சல்களைப் பொறுக்கி
மாலை கட்டினோம்
நிலவு படர்ந்த பின்னும்
கடல் அழகை ஆராதித்தபடி நின்றோம்
இன்று என்ன நடந்தது?
எங்கள் கால்களை
கட்டிப் போட்டது யார்?
ஒரு நேர உணவுக்காய்
கடல் சென்றவரை
உப்பு நீரா அடித்துச் சென்றது
களவாடப்பட்ட கடல்களின் ஓரம்
உப்பி வந்த உடலங்களின் சன்னக் கிழிப்புகள்
இரத்தம் உறைந்து போன தடயங்கள் - உன்
அம்மாவினதும் அக்காவினதும்
கடலை வெறித்த பார்வை
ஏன் ஏக்கம் படிந்து
வெறுமையாய் போனது?
தொடுவான வெளிகளை
கருமேகம் ஏன் மூடிக்கொண்டது?
சொல்லு தோழி
இன்னும் ஏன் கைநகப் பூச்சின்
அழகைப் பார்த்தபடி நிற்கிறாய்?
காலங் கடத்தாதே
அனல் காற்று
அள்ளிக்கொண்டு போய்விடும்.
பசுமையோடிக் கிடந்த வயல்களில்
நெருஞ்சி முட்கள் புரையோடி
நெஞ்சு கனக்கிறது
குண்டுச் சிதறல்களால்
பனைகள் கருகுகின்றன.
மீண்டும் நடக்கத் தொடங்குவோம்.
கால்களை நீளவைத்தபடி
வா தோழி!
இன்னும் ஏன் தயக்கம்?
நேற்றைய பின்னிரவில்
வெடி ஒன்று அதிர்ந்ததே
எங்கள் தலைநகரின் வாசலில்,
எதிரியின் கோட்டையில்
அந்த வெடி எதிரொலித்ததும்
நீளக் கடல் ஒரு முறை புலம்பிற்று
மலை மீது தொட்டுச் சென்ற
மேகங்கள் கலைந்து போயின.
அலை முடியில் செந்நீர்
திரண்டு மேலெழுந்தது.
நேற்று வரையும் என்னோடிருந்த
தோழியைக் காணவில்லை.
கேட்ட போது,
இந்தக் கடலோடுதான்
கலந்து விட்டதாகச் சொன்னார்கள்
பெருமை கொப்பளிக்க
இந்தக் கடல் ஏதோ சொல்கிறதே
உற்றுக் கேள்
அவர்களின் உயிரோடிய வார்த்தைகளில்
எத்தனை உயிர்ப்பென்று.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அரசியல் என்ற தலைப்பின் கீழ் மகா வரைந்த ஓவியம்

www.tamileelamarchive.com